# IC - 38

# காப்பீட்டு முகவர்கள்

## பிரிவு-பொது

அங்கீகாரம்

இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) பரிந்துரைத்த திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மும்பையில் உள்ள இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா இந்த பாடப் பிரிவை தயாரித்துள்ளது.

ஆசிரியர்கள்/ மதிப்பாய்வாளர்கள் (அகர வரிசைப்படி)

பேராசிரியர் அர்ச்சனா வஜே
டாக்டர் ஜார்ஜ் இ. தாமஸ்
பேராசிரியர் மாதுரி சர்மா
சிஏ.பி.கோடீஸ்வர ராவ்
டாக்டர் பிரதீப் சர்க்கார்
டாக்டர் ஆர்.கே.துக்கல்
டாக்டர் சசிதரன் கே.குட்டி

இந்தப் பாடத்திட்டம் பின்வருபவர்களின் உதவியுடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது

சி-டாக், புனே.
குமாரி மாயா பி. உத்தமன்
திரு ஆர். பட்டாபிராமன்

भारतीय बीमा संस्थान
INSURANCE INSTITUTE OF INDIA

ஜி - பிளாக், ப்ளாட் எண் சி 46, பாந்திரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை - 400 051.

# காப்பீட்டு முகவர்கள்

## பிரிவு-பொது

## _IC - 38

**பதிப்பு ஆண்டு: 2023**

**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை**

இந்தப் பாடப்பிரிவின் உள்ளடக்கங்கள் இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியாவின் (III) பதிப்புரிமை ஆகும். இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியாவின் தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு கல்வி சார்ந்த உள்ளீடுகளை வழங்குவதற்காக இந்தப் பாடப்பிரிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி இந்தப் பாடப்பிரிவின் உள்ளடக்கங்களை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ வணிக நோக்கத்திற்காக மீண்டும் உருவாக்கப்படக்கூடாது.

உள்ளடக்கங்கள் நடைமுறையில் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை மற்றும் சட்டப்பூர்வ அல்லது வேறு ஏதேனும் முரண்பாடுகள் Fஏற்பட்டால் விளக்கங்கள் அல்லது தீர்வுகளை வழங்குவது இதன் நோக்கத்தில் இல்லை

இது குறிப்புக்காக வழங்கப்படும் பாடப் புத்தகம் மட்டுமே. தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் இந்த பாடப் புத்தகத்தில் இருந்து மட்டும் இருக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.

வெளியீட்டாளர்: பொது செயலாளர், இன்சூரன்ஸ் இன்ஸ்டிடுயூட் ஆஃப் இந்தியா, ஜி பிளாக், ப்ளாட் சி- 46, பாந்திரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி) மும்பை - 400 051, மற்றும் பிரசுரிக்கப்பட்ட இடம்

இந்த பாடப் புத்தகம் தொடர்பான எந்தவொரு தகவல்தொடர்புக்கும் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் தனிப்பட்ட வெளியீட்டு எண்ணைக் குறிப்பிட்டு ctd@iii.org.in என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

# முன்னுரை

இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா, (நிறுவனம்) இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) பரிந்துரைத்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் காப்பீட்டு முகவர்களுக்காக இந்த பாடப்பிரிவை உருவாக்கியுள்ளது. பாடப்பிரிவின் உள்ளடக்கங்களைத் தயாரிக்கும் பணியில் தொழில் நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டடனர்.

இந்த பாடப்பிரிவை ஆயுள், பொது மற்றும் உடல்நலக் காப்பீடை பற்றி அடிப்படை அறிவை வழங்கும் காரணத்தால், முகவர்களால் சரியான கண்ணோட்டத்தில் தங்கள் தொழில்முறை வாழ்க்கையை புரிந்துக்கொண்டு பாராட்ட முடிகிறது.

பாடப்பிரிவு நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டுள்ளது. (1) மேலோட்டப் பார்வை - காப்பீட்டுக் கொள்கைகள், சட்டக் கோட்பாடுகள் மற்றும் காப்பீட்டு முகவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒழுங்குமுறை விஷயங்களை உள்ளடக்கிய ஒரு பொதுவான பிரிவு. (2) ஆயுள் காப்பீட்டு முகவர்கள், (3) பொது காப்பீட்டு முகவர்கள் மற்றும் (4) ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்கள் ஆக விரும்புபவர்களுக்காக தனித்தனி பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சை வடிவம் மற்றும் கேட்கப்படும் ஆப்ஜெக்டிவ் (கேள்விக்கு 4 பதில்களில் இருந்து தேர்வு) கேள்விகளின் வகைகளை பற்றி ஒரு ஊகத்தை வழங்க, பாடப்பிரிவில் மாதிரி கேள்விகளின் தொகுப்பு சேர்க்கப்பட்டுள்ளது. மாதிரி கேள்விகள் மறுநோக்கு சமயத்தில் கற்றதை புனராய்வு செய்துகொள்ள உதவும்.

காப்பீடு ஒரு மாறும் சூழலில் செயல்படுகிறது. சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து முகவர்கள் புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும். தனிப்பட்ட ஆய்வு மற்றும் அந்தந்த காப்பீட்டாளர்களால் ஏற்பாடு செய்யப்படும் உள் பயிற்சி திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அவர்கள் அறிவை தொடர்ந்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நிறுவனத்திடம் இந்தப் பணியை ஒப்படைத்ததற்காக ஐஆர்டிஏஐக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கிறது. இந்த பாடப்பிரிவை படித்து பரீட்சையில் தேர்ச்சி பெற்று இன்சூரன்ஸ் மார்க்கெட்டிங் துறையில் வெற்றி பெற விரும்பும் அனைவரையும் நிறுவனம் வாழ்த்துகிறது.

# உள்ளடக்கங்கள்


| அத்தியாய எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| **பிரிவு** | **பொது காப்பீடு** | |
| G-01 | பொது காப்பீடு ஆவணமாக்குதல் | 2 |
| G-02 | ஏற்பளிப்பு மற்றும் விலை உருவாக்கம் | 21 |
| G-03 | தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடு | 33 |
| G-04 | வர்த்தகக் காப்பீடு | 46 |
| G-05 | பொது காப்பீட்டின் ஈடுக்கோரல்கள் | 78 |
| **பிரிவு** | **பின் இணைப்புகள்** | |
| A-01 | பின் இணைப்புகள்- பூர்த்தி செய்வதற்கான மாதிரி முன்மொழிவு படிவங்கள் மற்றும் ஈடுக்கோரல் படிவங்கள் | 89 |

# பிரிவு

# பொது காப்பீடு

# அத்தியாயம் G-01

# பொது காப்பீடு ஆவணமாக்குதல்

## அத்தியாய அறிமுகம்

அத்தியாயம் 7இல் விவாதிக்கப்பட்டபடி, முன்மொழிவு படிவத்தில் காப்பீட்டுக்காக வழங்கப்படும் அபாயத்தை காப்பீட்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ள தேவைப்படும் பயனுள்ள தகவல் உள்ளது.

காப்பீட்டின் வெவ்வேறு கிளைகளில், காப்பீடு செய்யப்பட்ட பொருள், காப்பீட்டின் காப்பு வகை மற்றும் எழக்கூடிய ஈடுக்கோரல்களின் வகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆவணத் தேவைகளும் வேறுபட்டிருப்பதை பார்த்தோம்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. முன்மொழிவு படிவங்கள்
B. முன்மொழிவு ஏற்பு (காப்பீடு ஏற்கப்படுதல்)
C. பிரீமியம் ரசீது
D. உறை குறிப்புகள் / காப்பீடின் சான்றிதழ் / பாலிசி ஆவணம்
E. உத்தரவாதங்கள்
F. மேற்குறிப்புகள்
G. பாலிசிகளின் பொருள் விளக்கம்
H. புதுப்பித்தல் அறிவிப்பு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) முன்மொழிவு படிவத்தின் உள்ளடக்கத்தை பற்றி விளக்க முடியும்
b) தகவல் ஏட்டின் முக்கியத்துவத்தை விவரிக்க முடியும்.
c) பிரீமியம் ரசீதை பற்றி புரிந்து கொள்ளமுடியும்
d) காப்பீடு பாலிசி ஆவணத்திலுள்ள வார்த்தைகளை மற்றும் வாசகங்களை பற்றி விளக்க முடியும்.

e) பாலிசியின் நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்களை பற்றி விவாதிக்க முடியும்
f) மேல் குறிப்புகள் ஏன் வழங்கப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.
g) புதுப்பித்தல் அறிவிப்புகள் ஏன் வெளியிடப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.

## A. முன்மொழிவு படிவங்கள்

காப்பீடிற்காக அளிக்கப்படும் அபாயத்தை ஏற்றுக்கொள்வதற்காக, காப்பீடு நிறுவனத்திற்கு பயன்படுகின்ற தகவல்களை முன்மொழிவு படிவம் கொண்டிருக்கும். காப்பீடிற்கான நன்னம்பிக்கை மற்றும் தகவல்களை வெளிப்படுத்தும் கடமை போன்ற கொள்கைகள் முன்மொழிவு படிவத்திலிருந்து தொடங்கும்.

### எடுத்துக்காட்டு

காப்பீடு பெறுபவர் தன்னுடைய தங்க நகை ஷோரூமில் ஒரு அலாரம் (Burglar alarm) வைத்து பராமரிக்க தேவை, அல்லது தானியங்கி அலார அமைப்பை வைத்திருந்தால், அவர் அதை வெளிப்படுத்துவது மட்டுமின்றி, அது பாலிசி காலம் முழுவதும் நன்கு செயல்புரிகிறதா என்றும் உறுதிப்படுத்தவேண்டும். அலாரம் இருப்பது காப்பீட்டாளரை பொறுத்த வரை ஒரு அடிப்படை உண்மை மற்றும் காப்பீட்டாளர் இந்த உண்மைகளின் அடிப்படையில்தான் அபாயத்திற்கு காப்பீடு அளிக்க ஒப்புக்கொண்டு, அதற்கான விலையையும் நிர்ணயிப்பார்.

### 1. முன்மொழிவு படிவத்தில் இருக்கும் வினாக்களின் இயல்பு

முன்மொழிவு படிவத்திலுள்ள வினாக்களின் எண்ணிக்கை மற்றும் இயல்பு காப்பீடு அளிக்கப்படும் பிரிவிற்கு ஏற்ப மாறுபடும்.

i. **தீ காப்பீடு** முன்மொழிவு படிவங்கள் சாதாரணமாக எளிய/நிலையான அபாயங்கள் அதாவது வீடுகள், கடைகள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும். பெரிய தொழிற்சாலைக்கான அபாயங்களை ஏற்பதற்கு முன்பாக, அபாயத்தை பரிசோதனை செய்வதற்கு காப்பீட்டாளர் ஏற்பாடு செய்வார். சிறப்பு தகவல்களை பெறுவதற்கு முன்மொழிவு படிவத்தில் சில நேரங்களில், சிறப்பு வினாப்பட்டியல்கள் சேர்க்கப்படுகின்றன.

   தீ காப்பீடு முன்மொழிவு படிவத்தில், வேறு விஷயங்களுடன், சொத்தைப் பற்றிய விவரிப்பு கேட்கப்படும், அவற்றில் பின்வரும் தகவல்கள் இருக்கும்:

- ✓ வெளிப்புற சுவர்கள் மற்றும் கூரையின் கட்டிட அமைப்பு, மாடிகளின் எண்ணிக்கை
- ✓ கட்டிடத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இருப்பவர்களின் தொழில்
- ✓ ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்கள்
- ✓ மூலப்பொருள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்கள் உட்பட உற்பத்தி செயல்முறை
- ✓ காப்பீடிற்காக முன்மொழியப்பட்ட தொகை
- ✓ காப்பீடின் கால அளவு, போன்றவை.

ii. **வாகன காப்பீடிற்கு**, வாகனத்தைப் பற்றி, அதன் செயற்பாடுகள், கொண்டு செல்லக்கூடிய கொள்ளளவு, அது உரிமையாளரால் நிர்வாகம் செய்யப்படும் முறை மற்றும் சம்பந்தப்பட்ட காப்பீட்டு வரலாறு ஆகியவற்றை பற்றி வினாக்கள் இருக்கும்.

iii. **சொந்த காப்பீடு வகைகளுக்கு** அதாவது உடல்நலம், தனிநபர் விபத்து மற்றும் பயணக் காப்பீடு ஆகியவற்றின் முன்மொழிவு படிவங்கள், முன்மொழிபவரின் ஆரோக்கியம், வாழ்க்கை முறை மற்றும் பழக்கங்கள், முன்னரே இருக்கும் உடல் நிலைகள், மருத்துவ வரலாறு, மரபுவழிப் பண்புகள், முன் காப்பீட்டு அனுபவங்கள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களை பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

iv. **வேறு பலவகைப்பட்ட காப்பீடுகளில்**, முன்மொழிவு படிவங்கள் கட்டாயமானவை மற்றும் அவற்றில் ஒரு பிரகடனம் இருக்கும் மற்றும் அது நன்னம்பிக்கையை அளிக்கும் கடமையை நீட்டிக்கும்.

## 2. முன்மொழிவின் கூறுகள்

### i. முன்மொழிபவரின் முழு பெயர்

முன்மொழிபவர் தன்னை தெளிவாக அடையாளம் காட்டிகொள்ள வேண்டும். காப்பீடு பெறுபவருக்கு மட்டுமே அந்த பாலிசியின் கீழுள்ள பயன்கள் சென்றடைவதை உறுதி செய்ய காப்பீட்டாளர் யாருடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிறார் என்பது தெரிவது முக்கியம்,

ii. **முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்**

மேலே குறிப்பிட்ட காரணங்கள் முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்களை பெறுவதற்கும் பொருந்தும்.

iii. **முன்மொழிபவரின் தொழில், பணி, அல்லது வியாபாரம்**

உடல்நலம் மற்றும் தனிநபர் விபத்து காப்பீடுகளில், முன்மொழிபவரின் தொழில், பணி அல்லது வியாபாரம் ஆகியவை முக்கியமாகும். ஏனென்றால் அவை அபாயத்திற்கு உட்படக்கூடிய முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும்.

iv. **காப்பீடு செய்யப்படும் விஷயங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அடையாளம்**

முன்மொழிபவர், காப்பீடிற்காக முன்மொழியப்பட்ட விஷயத்தை தெளிவாக கூறவேண்டும்.

**எடுத்துக்காட்டு**

முன்மொழிபவர், பின்வருவதை தெரிவிக்கவேண்டும்:

i. சொந்த கார் [என்ஜின் எண், அடிச்சட்டத்திலுள்ள எண் (சாஸிஸ் எண்), பதிவு செய்த எண் போன்ற அடையாளங்கள்] அல்லது

ii. குடியிருப்பு வீடு [அதன் முழு முகவரி மற்றும் அடையாள எண்கள்] அல்லது

iii. வெளிநாட்டு பயணம் என்றால் [யாரால், எப்போது, எந்த தேசத்திற்கு, எந்த வேலைக்காக] அல்லது

iv. வழக்கிற்கு ஏற்ப, நபரின் ஆரோக்கியம் [நபரின் பெயர், முகவரி மற்றும் அடையாளத்துடன்] போன்றவை.

v. **காப்பீட்டுத் தொகை** என்பது அந்த பாலிசியின் கீழ் காப்பீட்டாளரின் கடப்பாடு நிலையை குறிக்கும் மற்றும் அது எல்லா முன்மொழிவு படிவங்களிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

vi. **முந்தைய மற்றும் தற்போதைய காப்பீடு**: பொதுவான அத்தியாயங்களில் காணப்படுவது போல், முன்மொழிபவர் தனது

முந்தைய காப்பீடுகள் பற்றிய விவரங்களை காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டும்

சொத்து காப்பீடில், காப்பீடு பெறுபவர் பலவிதமான காப்பீட்டாளர்களிடமிருந்து காப்பீடை பெற்றுக்கொண்டு, இழப்பு ஏற்படும் நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டாளரிடம் இருந்து இழப்பீடை பெறும் வாய்ப்புகள் இருக்கின்றன. பிரித்து வழங்கும் கொள்கை (principle of contribution) செயல்படுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த தகவல் தேவைப்படுகின்றது. இதனால், காப்பீடு பெறுபவருக்கு இழப்பீடு கிடைக்கும் ஆனால் ஒரே அபாயத்திற்காக பலவிதமான காப்பீட்டு பாலிசிகளிலிருந்து லாபத்தை பெற மாட்டார்கள்.

கூடுதலாக, தனிநபர் விபத்து காப்பீடில், காப்பீட்டாளர் (Insurer) காப்பீடு பெற்றவர் எடுத்த வேறு தனிநபர் விபத்து பாலிசிகளின் மூலம் காப்பீடு செய்யப்பட்டத் தொகையின் அடிப்படையில், காப்பீட்டுத் தொகை (காப்புத் தொகை) அளவை கட்டுப்படுத்தலாம்.

### vii. இழப்பு அனுபவம்

முன்மொழிபவர், காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் அனுபவித்த இழப்புகளின் முழு விவரங்களையும் கூறவேண்டும். இது காப்பீடு பற்றிய விஷயத்தையும் கடந்த காலத்தில் காப்பீட்டு செய்தவர் அதை எப்படி சமாளித்தார் என்பது பற்றிய தகவலையும் காப்பீட்டாளரிடம் தெரிவிக்கும். இதுபோன்ற பதில்களிலிருந்து காப்பீடு ஏற்பாளர்கள், அபாயத்தை நன்கு புரிந்துகொள்வார்கள் மற்றும் அபாயத்தை பற்றிய பரிசோதனை நடத்த தீர்மானிப்பார்கள் அல்லது கூடுதல் விவரங்களை திரட்டுவார்கள்.

### viii. காப்பீடு பெறுபவருடைய பிரகடனம்

முன்மொழிவு படிவத்தின் நோக்கம் காப்பீட்டாளர்களுக்கு தேவையான எல்லா விஷயங்களையும் வழங்குவதாக இருப்பதால், **அந்த படிவத்தில், அவரது பதில்கள் உண்மையானவை மற்றும் துல்லியமானவை என்றும் இந்த படிவம் காப்பீடு ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருக்கும் என்பதை தெரிவிக்கும் காப்பீடு**

**பெறுபவருடைய பிரகடனம் இருக்கும்.** தவறான பதில் ஏதேனும் இருப்பின், அந்த ஒப்பந்தத்தை தவிர்க்கும் உரிமையை காப்பீட்டாளர்களுக்கு அது அளிக்கிறது. எல்லா முன்மொழிவு படிவங்களிலும் பொதுவாக இருக்கும் வேறு பிரிவுகளில், **கையெழுத்து**, **தேதி மற்றும் சில இடங்களில் முகவர்களின் பரிந்துரை ஆகியவையாகும்.**

## B. முன்மொழிவு ஏற்பு (ஏற்பளிப்பு)

ஒரு பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவு படிவம் பொதுவாக பின்வரும் தகவல்களை அளிக்கும் என்பதை நாம் முன்பே பார்த்தோம்:

- ✓ காப்பீடு பெறுபவரின் விவரங்கள்
- ✓ காப்பீடு செய்யப்படும் விஷயத்தைப் பற்றிய விவரங்கள்
- ✓ தேவைப்படும் காப்பீடின் வகை
- ✓ பொருள்சார்ந்த அம்சங்கள் பற்றி நேர்மறை மற்றும் எதிர்மறை விவரங்கள் - இதில் கட்டிடத்திவ் வகை மற்றும் தரம், வயது, தீயணைக்கும் உபகரணங்கள் இருத்தல், பாதுகாப்பு வகை போன்றவற்றை சேர்த்து
- ✓ காப்பீடு மற்றும் இழப்பின் முந்தைய வரலாறு

சொத்து, மோட்டார் அல்லது சரக்கு காப்பீடு விஷயத்தில், காப்பீட்டாளர், அபாயத்தின் தன்மை மற்றும் மதிப்பைப் பொறுத்து, ஏற்றுக்கொள்வதற்கு முன், அபாயத்தின் முன்-பரிசோதனை கருத்துக்கணிப்பை செய்யலாம். முன்மொழிவில் உள்ள தகவல், அபாய ஆய்வு அறிக்கை, கூடுதல் வினாத்தாள் மற்றும் பிற ஆவணங்களுக்கான பதில்கள் (காப்பீட்டாளரால் கேட்கப்படுபவை) ஆகியவற்றின் அடிப்படையில் காப்பீட்டாளர்கள் தங்கள் முடிவை எடுக்கிறார்கள். அதன் பிறகு, காப்பீட்டாளர், அபாய காரணிகளுக்கு எவ்வளவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று தீர்மானிப்பார் மற்றும் பல்வேறு சோதனை குறியீடுகளுக்கு ஏற்ப பிரீமியத்தை கணக்கிடுவார். இது பிறகு காப்பீடு பெறுபவரிடம் தெரிவிக்கப்படும். முன்மொழிவுகள் காப்பீட்டாளரால் வேகத்துடனும் திறமையுடனும்

செயல்படுத்தப்படும் மற்றும் அனைத்து தீர்மானங்களும், பொருத்தமான காலத்திற்குள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படும்.

## வரையறை

**ஏற்பளிப்பு**: பாலிசிதாரர்களின் நலன்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், 2017இன் படி 15 நாட்களுக்குள், நிறுவனம் முன்மொழிவை செயல்படுத்தவேண்டும். முகவர், இந்த காலவரிசைகளை கவனித்து, பின் தொடர்ந்து, வாய்ப்பாளர்/காப்பீட்டு பெறுபவரிடம் தேவைப்படும் போது வாடிக்கையாளர் சேவை மூலம் தொடர்பு கொள்ளவேண்டும். முன்மொழிவை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளிப்பு அளிக்கப்படுவதைப் பற்றி தீர்மானிக்கும் முழு செயல்முறையும் காப்பீடு ஏற்பளிப்பு என்று அழைக்கப்படுகிறது.

## சுய-பரீட்சை 1

பாலிசிதாரர்களின் நலன்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், 2017இன் படி ஒரு காப்பீட்டு நிறுவனம் ஒரு காப்பீட்டு முன்மொழிவை _________நாட்களுக்குள் செயல்படுத்தவேண்டும்.

I. 7 நாட்கள்

II. 15 நாட்கள்

III. 30 நாட்கள்

IV. 45 நாட்கள்

## C. பிரீமியம் ரசீது

**பிரீமியம்** என்பது, காப்பீடு ஒப்பந்தத்தின் கீழ், ஒரு பொருளை காப்பீடு செய்வதற்காக காப்பீட்டாளருக்கு காப்பீடு பெறுபவரால் செலுத்தப்படும் கருதுகை அல்லது தொகையாகும். அத்தியாயம் 4 இல் தரப்பட்டுள்ளபடி, காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 64 VB இன் படி, **காப்பீட்டு ஒப்பந்தத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாக, பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்பட வேண்டும்** என்பதை முகவர் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## முக்கியமானவை

a) காப்பீட்டுச் சட்டம் - 1938 இன் பிரிவு 64 VB, பிரீமியம் முன்கூட்டியே பெறப்படும் வரை அல்லது அளிப்பதாக அச்சாரம் கொடுப்பது வரை அல்லது குறிப்பிடப்பட்ட வகையில் முன்கூட்டியே வைப்புத்தொகை வைக்கப்படும் வரை எந்த காப்பீட்டாளரும் எந்த அபாயத்திற்கும் காப்பளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார் என கூறுகிறது. காப்பீட்டு விதிகள் 58 மற்றும் 59 சில சூழ்நிலைகளில் பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்துவதற்கான இந்த நிபந்தனைக்கு சில விதிவிலக்குகளை வழங்குகிறது

b) ஒரு காப்பீட்டாளரின் சார்பாக ஒரு காப்பீட்டு முகவர் ஒரு காப்பீட்டு பாலிசிக்கான பிரீமியத்தை பெற்றுக்கொள்ளும் போது, அதை பெற்ற இருபத்தி நாலு மணி நேரங்களுக்குள், வங்கி மற்றும் தபால்நிலைய விடுமுறைகள் தவிர மற்ற நாட்களில் முழு பிரீமிய தொகையையும் தன் கமிஷனை கழித்துக்கொள்ளாமல் வங்கியில் கட்டி விடுவார் அல்லது தபால் வழியாக அனுப்பி விடுவார்.

c) பிரீமியம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தப்பட்ட தேதியிலிருந்து தான் அபாயத்தின் பாதுகாப்பு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடப்படுகிறது.

d) பிரீமியம் தபால் வழியாக அல்லது பண அஞ்சல் வழியாக அல்லது காசோலையாக தபால் மூலம் அனுப்பப்படும் போது, பணம் அஞ்சலில் பதிவு செய்யப்பட்ட தேதி அல்லது காசோலை அனுப்பப்பட்ட நாள் முதலே, அபாயத்தின் காப்பு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

e) காப்பீடு செய்தவர், பாலிசியை ரத்து செய்வதாலோ அல்லது அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதாலோ அல்லது வேறு காரணங்களாலோ திருப்பிக் கொடுக்கும் நிலையில், அது காப்பீட்டாளரால் காப்பீடு செய்தவருக்கு நேரடியாக கோடிட்ட அல்லது ஆணைக் காசோலை மூலமாக அல்லது தபால்/பண அஞ்சல் மூலமாக அல்லது மின்னணு முறையில் அனுப்பப்படும். இதன் சரியான ரசீதை காப்பீடு செய்தவரிடமிருந்து காப்பீட்டாளர் பெற்றுக்கொள்ளலாம். இதுபோன்ற திருப்பப்படும் பணம், முகவரின் கணக்கில் சேர்க்கப்படாது.

## D. உறை குறிப்புகள் / காப்பீட்டு சான்றிதழ் / பாலிசி ஆவணம்

காப்பீடு ஏற்பளிப்பு பூர்த்தியடைந்த பின்னர் பாலிசி வழங்கப்பட சிறிது காலம் எடுக்கும். **பாலிசி தயாரிப்பில் இருக்கும்போது அல்லது காப்பீடிற்கான ஒப்பந்தப் பேச்சு நடக்கும்போது, தற்காலிக அடிப்படையில் காப்பளிக்கப்படுவது அவசியம் அல்லது சரியான விலையை நிர்ணயிப்பதற்காக வளாகம் பரிசோதனை செய்யப்படும்போது** பாலிசியின் கீழ் காப்பளிக்கப்படுவதை உறுதிப்படுத்த ஒரு உறை குறிப்பு (Cover note) அளிக்கப்படும்.

உறை குறிப்பில் முத்திரை இடப்படாவிட்டாலும், பாலிசி காப்பீடு அளிப்பவரின் வகைக்கு பொருந்தும் வழக்கமான விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்படும் என்பதை உறை குறிப்பில் இருக்கும் வாசகங்கள் உறுதிப்படுத்தும். அபாயத்திற்கு உத்தரவாதங்கள் ஏதேனும் இருக்குமானால், உறை குறிப்பில், காப்பீடிற்கு உத்தரவாதங்கள் இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். பொருந்தினால், உறை குறிப்பு சிறப்பு உட்பிரிவுகளுக்கு உட்பட்டது, எ.கா. ஒப்புக்கொள்ளப்பட்ட வங்கி உட்பிரிவு, பிரகடனம் உட்பிரிவு போன்றவை.

**ஒரு உறை குறிப்பில் பின்வருபவை இருக்கவேண்டும்**:

a) காப்பீடு பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி
b) காப்பிட்டுத் தொகை
c) காப்பீடின் காலம்
d) காப்பளிக்கப்படும் அபாயம்

e) வீதம் மற்றும் பிரீமியம்: வீதம் அறியப்படவில்லை என்றால், தற்காலிக பிரீமியம்

f) **காப்பளிக்கப்படும் அபாயத்தின் விவரிப்பு:** எடுத்துக்காட்டாக ஒரு தீ காப்பீட்டின் உறை குறிப்பு கட்டிடம், அதன் கட்டமைப்பு மற்றும் குடியிருக்கை பற்றிய அடையாளக் குறிப்புகளை குறிப்பிடும்.

g) உறை குறிப்பின் வரிசை எண்

h) வழங்கப்பட்ட தேதி

i) **உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம்** வழக்கமாக இரு வாரங்கள் மற்றும் அரிதாக 60 நாட்கள் வரை இருக்கும்

**உறை குறிப்புகள் முக்கியமாக கடல் சார்ந்த மற்றும் வாகன வகை வணிகங்களில் பயன்படுத்தப்படுகின்றன.**

### 1. கடல் சார்ந்த உறை குறிப்புகள் (Marine cover note)

பாலிசியை அளிப்பதற்கு தேவையான விஷயங்களான நீராவிக் கப்பலின் பெயர், பேக்கேஜ்களின் எண்ணிக்கை அல்லது சரியான மதிப்பு போன்றவை அறியப்படாத நேரத்தில் வழக்கமாக இது அளிக்கப்படும். ஏற்றுமதியிலும் ஒரு உறை குறிப்பு அளிக்கப்படலாம் எ.கா. கப்பலில் துறைமுகத்திற்கு கொண்டு செல்லவேண்டிய சில பொருட்களின் அளவு பற்றிய விவரம். போதுமான இடம் கப்பலில் இல்லாத போது, அதன் மூலம் பொருட்களை கொண்டு செல்ல சாத்தியமில்லாத நிலை வரக்கூடும். எனவே குறிப்பிட்ட கப்பலில் அனுப்பப்படக்கூடிய பொருட்களின் எண்ணிக்கை அறியப்படாது. இந்த சூழ்நிலையில், ஒரு உறை குறிப்பு அளிக்கப்படும், இதற்கு பிறகு முழு விவரங்களுடன் பாலிசி வழங்கப்படும் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திடம் அதைப் பற்றி தெரிவிக்கப்படும்.

கடல் சார்ந்த உறை குறிப்பு பின்வரும் வாசகங்களை கொண்டிருக்கலாம்:

i. கடல் சார்ந்த உறை குறிப்பு எண்

ii. வழங்கப்படும் தேதி

iii. காப்பீடு செய்பவரின் பெயர்

iv. செல்லத்தக்க காலம்

“வேண்டுகோளின்படி, நிறுவன கொள்கையின் வழக்கமான

நிலைகளுக்கு உட்பட்டு, உங்களுக்கு காப்பீட்டுத் தொகை ரூ. ____________ வரை காப்பு கிடைக்கிறது.“

a) **உட்பிரிவுகள்:** நிலையத்தின் சரக்கு உட்பிரிவுகள் ஏ, பி அல்லது சி, இதில் நிலைய உட்பிரிவுகளின்படி போர் எஸ்ஆர்சிசி (SRCC) அபாயங்கள் இருக்கும். இவை 7 நாட்கள் ரத்து அறிக்கைக்கு உட்படுத்தப்படும்.

b) **நிபந்தனைகள்:** பாலிசி வழங்க, கப்பல் வணிக ஆவணங்கள் கிடைத்தவுடன், கப்பல் சரக்கின் விவரங்களை வழங்கவேண்டும். நீராவிக் கப்பலில் பிரகடனத்தை செய்வதறகு முன்பு/அல்லது கப்பலில் செல்லும்போது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், மதிப்பீட்டின் அடிப்படையாக காப்புறுதி பெறுபவர் பொறுப்பில் உள்ள பொருட்களின் முதன்மை விலை மற்றும் உண்மையில் செலவழிக்கப்பட்ட கட்டணங்கள் இருக்கும் என்று இதன்மூலம் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

உள்ளூரில் எடுத்துச் செல்லப்படுகின்ற சரக்குகளுக்கு பாலிசி வழங்கலுக்கு வழக்கமாக தேவைப்படும் அனைத்து முக்கிய தகவல்களும் கிடைப்பதால், ஒரு உறை குறிப்பு அரிதாக தேவைப்படுகிறது. இருந்தாலும், சில நேரங்களில் பாலிசிகளுக்கு பதிலாக முதலில் உறை குறிப்புகள் வழங்கப்பட்டு, அதற்குப் பிறகு சரக்கின் முழு விவரங்கள் மற்றும் பயண விவரங்களுடன் வழங்கப்படும் பாலிசி மூலம் அது மாறறப்படுகிறது.

**2. வாகன உறை குறிப்புகள்**

இவை குறிப்பிட்ட நிறுவனங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்கப்பட வேண்டும், மற்றும் ஒரு வாகன உறை குறிப்பின் செயற்படுத்தும் உட்பிரிவு பின்வருமாறு இருக்கும்:

“படிவத்தில் விவரிக்கப்பட்ட காப்பீடை பெறுபவர், கீழேயுள்ளது போல, விவரிக்கப்பட்ட வாகனம்(ங்களுக்கான) காப்பீடிற்காக முன்மொழிந்து மற்றும் பிரீமியமாக ரூ.... யை அளித்திருந்தால், நிறுவனத்தின் வழக்கமான .......பாலிசி (கீழே குறிப்பிட்டுள்ள ஏதேனும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு) படிவத்தின் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அபாயத்திற்கு எதிராக, நிறுவனத்தால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு ரத்து செய்யப்படும் வரை

காப்பளிக்கப்படுவார்கள். இதற்கு பிறகு காப்பீடு நிறுத்தப்படும் மற்றும் நிறுவனம் காப்பீடை அளித்த காலத்திற்கு மட்டும் இந்த காப்பீடிற்கான பிரீமியம் வசூலிக்கப்படும்.

**வாகன உறை குறிப்பில் பொதுவாக பின்வரும் விவரங்கள் இருக்கும்**:

a) பதிவு குறி மற்றும் எண், அல்லது காப்பீடு செய்த வாகனங்களின் விவரிப்பு / கன கொள்ளளவு / கொண்டு செல்லும் கொள்ளளவு / தயாரிப்பு / தயாரிக்கப்பட்ட வருடம், எஞ்சின் எண், சேஸிஸ் எண்

b) காப்பீடு செய்பவரின் பெயர் மற்றும் முகவரி

c) சட்டத்தின் நோக்கத்திற்காக காப்பீடு துவங்கும் தேதி மற்றும் நேரம். சமயம்......, தேதி......

d) காப்பீடு காலாவதியாகும் தேதி

e) நபர்கள் அல்லது ஓட்ட உரிமையுள்ள நபர்களின் வர்க்கங்கள்

f) பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்

g) கூடுதல் அபாயங்கள், இருக்குமானால்

வாகன உறை குறிப்பில், மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 இன் அத்தியாயங்கள் X மற்றும் XI-இன் விதிகளின்படி வழங்கப்படுவதாக ஒரு சான்றிதழும் இணைக்கப்பட்டிருக்கும்.

**முக்கியமானவை**

உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம் ஒரு நேரத்தில் 15 நாட்கள் வரை மேலும் நீட்டிக்கப்படலாம், ஆனால், எந்த நிலையிலும் உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம் இரண்டு மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்படாது.

---

**குறிப்பு**: ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும், உறை குறிப்பின் வாசகங்கள் மாறுபடக்கூடும்

நிறைய நிறுவனங்கள் உறை குறிப்புகள் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதில்லை. தற்போதுள்ள தொழில்நுட்பங்கள், பாலிசி ஆவணத்தை உடனடியாக அளிக்கும் வசதியை பெற்றிருக்கின்றன.

### 3. காப்பீடின் சான்றிதழ் - வாகன காப்பீடு

சான்று தேவைப்படும் இடங்களில் காப்பீடு இருப்பதற்கான சான்றாக காப்பீடின் சான்றிதழ் பயன்படுகிறது. உதாரணத்திற்கு, வாகன காப்பீடிற்கு, பாலிசியுடன் சேர்த்து மோட்டார் வண்டிகள் சட்டத்திற்கு தேவைப்படுகின்ற காப்பீடு சான்றிதழும் வழங்கப்படும். **இந்த சான்றிதழ் போலீஸ் மற்றும் பதிவு செய்யும் அதிகாரிகளுக்கு சான்றாக செயல்படுகிறது.** தனியார் கார்களுக்கான மாதிரி சான்றிதழ், முக்கிய சிறப்பியல்புகளுடன் கீழே தரப்பட்டுள்ளது.

**மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988**

**காப்பீடு சான்றிதழ்**

சான்றிதழ் எண் பாலிசி எண்

1. பதிவு குறியீடு மற்றும் எண், பதிவு செய்த இடம், எஞ்சின் எண்/ சேஸிஸ் எண் / தயாரிப்பு / தயாரிக்கப்பட்ட வருடம்.
2. வடிவமைப்பு வகை / C.C / உட்காரும் கொள்ளளவு / மொத்த பிரீமியம்/ பதிவு செய்யும் ஆணையத்தின் பெயர்,
3. புவியியல் பகுதி - இந்தியா. `
4. காப்பீடு பெறுபவர் பிரகடனம் செய்த மதிப்பு (IDV)
5. காப்பீடு பெறுபவரின் பெயர், வியாபாரம் அல்லது பணி.
6. சட்டத்திற்காக, காப்பீடு துவங்கப்படும். ......... தேதி .........மணியிலிருந்து
7. காப்பீடு முடியும் தேதி: ...............அன்று நடு இரவில்
8. நபர்கள் அல்லது ஓட்ட உரிமையுள்ள நபர்களின் வர்க்கங்கள்.

பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று:

a) காப்பீடு செய்தவர்:

b) காப்பீடு செய்தவரின் ஆணையுடன் அல்லது அனுமதியுடன் ஓட்டுபவர்

ஓட்டும் நபர், விபத்து நடக்கும் நேரத்தில் செல்லக்கூடிய ஓட்டுநர் உரிமத்தை பெற்றிருக்கவேண்டும் மற்றும் அத்தகைய உரிமத்தை வைத்திருக்கும் அல்லது பெறும் தகுதியை இழந்திருக்கக்கூடாது.

பயில்வோர் உரிமம் வைத்திருப்பவரும் வண்டியை செலுத்தலாம் மற்றும் அந்த நபர் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 3-இன் தேவையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**பயன்படுத்துவதற்கான வரம்புகள்**

பாலிசி இவற்றைத் தவிர வேறு நோக்கங்களுக்கு காப்பை அளிக்கும்:

a) வாடகைக்காக அல்லது பரிசிற்காக;

b) பொருட்களை வண்டியில் கொண்டு செல்லுதல் (சொந்த பொருட்களைத் தவிர)

c) ஏற்பாடு செய்யப்பட்ட பந்தயம்.(Organized racing)

d) பந்தயத்தை வைத்தல் (Race making)

e) வேக பரிசோதனைக்காக

f) நம்பகத்தன்மை சோதனைகளுக்காக

g) வாகன வணிகத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் காரணம்.

நான்/நாங்கள், இந்த சான்றிதழ் சம்பந்தப்பட்ட பாலிசி மற்றும் காப்பீட்டு சான்றிதழ் ஆகியவை மோட்டார் வாகன சட்டம், 1988-இன் அத்தியாயம் X மற்றும் XI-இன் விதிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது என்று இதன் மூலம் உறுதியளிக்கிறோம்.

பரிசோதிக்கப்பட்டது.........

(அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டாளர்)

**வாகன காப்பீட்டு சான்றிதழ், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கூர்ந்தாய்வு செய்யப்பட, எந்த சமயத்திலும் வண்டியிலேயே வைக்கப்பட வேண்டும்.**

**4. பாலிசி ஆவணம்**

**பாலிசி என்பது காப்பீடு ஒப்பந்தத்திற்கு சான்றாக அளிக்கப்படும் முறைப்படியான ஆவணமாகும்.** இந்த ஆவணத்தில் இந்திய முத்திரை சட்டம், 1899-இன் விதிகளின்படி முத்திரை இடப்பட வேண்டும்.

ஒரு பொது காப்பீட்டு பாலிசியில் வழக்கமாக இருப்பவை:

a) காப்பீடு செய்தவர் மற்றும் அதே விஷயத்தின் மீது காப்பீடுப் பற்று உள்ள வேறு நபர்களின் பெயர்(கள்) மற்றும் முகவரி(கள்);

b) காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது நலனின் முழு விவரிப்பு;

c) பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்ட சொத்து அல்லது காப்பீடுப் பற்று உள்ள இடம்/ இடங்கள், அத்துடன் காப்பளிக்கப்பட்ட தொகைகளின் விவரம்;

d) காப்பீட்டுக் காலம்;

e) காப்பீட்டுத் தொகைகள்;

f) இழப்பீடு அளிக்கப்படும் இன்னல்கள் மற்றும் விலக்குகள்;

g) ஏதாவது பொருந்தும் உபரி /கழிவுத் தொகைகள்;

h) செலுத்தப்படவேண்டிய பிரீமியம் மற்றும் அந்த பிரீமியம் தற்காலிகமாக சரிப்படுத்தக்கூடியதாக இருந்தால், பிரீமியத்தை சரிப்படுத்துவதற்கான அடிப்படை;

i) பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் உத்திரவாதங்கள்;

j) தற்செயல் நிகழ்வு ஏதேனும் ஏற்பட்டு பாலிசியின் கீழ் இழப்பீடு பெறும் வாய்ப்பு வரும்போது காப்பீடு செய்பவர் செய்யவேண்டிய செயல்;

k) காப்பீடு எடுக்கப்பட்ட விஷயத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு நிகழ்வு ஏற்பட்டு அதற்காக இழப்பீடு பெறுவதற்கான காப்பீடு செய்பவரின் கடமைகள் மற்றும் அந்த சூழ்நிலையில் காப்பீட்டாளரின் உரிமைகள்;

l) ஏதேனும் சிறப்பு நிபந்தனைகள்;

m) திரித்துக் கூறுதல், ஏமாற்றுதல், அடிப்படை உண்மைகளை மறைத்தல் அல்லது காப்பீட்டாளருக்கு ஒத்துழைப்பு தராதது ஆகியவற்றால் பாலிசியை ரத்து செய்யும் ஏற்பாடு;

n) பாலிசி சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களும் அனுப்பப்படவேண்டிய காப்பீடு செய்பவரின் முகவரி;

o) சேர்த்த கூடுதல் காப்புகள் மற்றும்/ அல்லது மேற்குறிப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றின் விவரங்கள்;

p) குறை தீர்க்கும் செயல்முறை மற்றும் குறைதீர்ப்பாளர் முகவரி பற்றிய விவரங்கள்

**சுய-பரீட்சை** 1

பின்வரும் கூற்றுகளில் எது உறை குறிப்புகளைப் பற்றிய உண்மையை கூறுகிறது?

I. உறை குறிப்புகள் முக்கியமாக ஆயுள் காப்பீடில் பயன்படுத்தப்படுகின்றன

II. உறை குறிப்புகள் முக்கியமாக எல்லா பொது காப்பீட்டு பிரிவுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன

III. உறை குறிப்புகள் முக்கியமாக உடல்நலக் காப்பீடில் பயன்படுத்தப்படுகின்றன

IV. உறை குறிப்புகள் முக்கியமாக, பொது காப்பீட்டின் கடல் சார்ந்த மற்றும் வாகனப் பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன

## E. உத்தரவாதங்கள்

**உத்திரவாதம் என்பது ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மைக்காக உரிய முறைப்படி பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் மற்றும் கட்டாயமாக இணங்கப்படவேண்டிய விஷயம். உத்திரவாதம் என்பது தனியான ஆவணம் இல்லை. இது உறை குறிப்புகள் மற்றும் பாலிசி ஆவணம் ஆகிய இரண்டிலும் உள்ள ஒரு பாகமாகும்**. இது ஒப்பந்தத்திற்கு முன்மாதிரியாக இருக்கும் நிலையாகும். அபாயத்துடன் சம்பந்தப்பட்டதோ இல்லையோ, இது கட்டாயம் பின்பற்றப்படவேண்டும்.

உத்திரவாதம் மீறப்பட்டால், அது இழப்பிற்கான காரணமாக தெளிவாக நிரூபிக்கப்படாவிட்டாலும், காப்பீட்டாளர்களின் விருப்பப்படி பாலிசி செல்லாததாகி விடும். இருப்பினும், நடைமுறையில், உத்திரவாதத்தின் அத்துமீறலுக்கான காரணம் தொழில்நுட்பரீதியானதாக இருந்தாலும், அது எந்த வழியிலும் இழப்பிற்கு காரணமாக அல்லது இழப்பை

அதிகரிக்காமல் இருந்தால், காப்பீட்டாளர்கள் தங்கள் உசிதப்படி அந்த ஈடுக்கோரல்களை நிறுவன பாலிசியின் விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கு ஏற்ப செயல்படுத்தலாம்.

1. **தீ காப்பீடுகளுக்கான உத்திரவாதங்கள்** (சில எடுத்துக்காட்டுகள்) **கீழே கொடுக்கப்பட்டுள்ளன**

உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், பாலிசி காலத்தில் ஆபத்து விளைவிக்கக்கூடிய எந்த பொருட்களும் காப்பீடு செய்யப்படும் இடத்தில் சேமித்து வைக்கப்படக்கூடாது.

**அமைதியான அபாயம்**: உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், காப்பீடு செய்யப்பட்ட இடத்தில் தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு அல்லது அதற்கு மேல் உற்பத்தி நடவடிக்கைகளை செய்யக்கூடாது.

**சிகரெட் ஃபில்டர் தயாரித்தல்**: உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், அந்த இடத்தில் 30$^{0}$C-க்கு கீழே தீப்பற்றக்கூடிய எந்த கரைப்பானும் பயன்படுத்த/ சேமிக்கப்படக்கூடாது

2. **கடல் சார்ந்த காப்பீடில், உத்திரவாதம்** வரையறை பின்வருமாறு உள்ளது. "ஒரு உறுதிமொழி உத்திரவாதத்தில், உறுதிப்படுத்துபவர் ஒரு விஷயம் நடக்கும் அல்லது நடக்காது அல்லது ஒரு நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் என ஏற்கிறார், அல்லது குறிப்பிட்ட உண்மை நிலைகள் இருப்பதை ஏற்கிறார் அல்லது மறுக்கிறார்"

**கடல் சார்ந்த சரக்கு காப்பீடில்** (Marine Cargo Insurance), தகரத்தால் பூசப்பட்ட பெட்டிகளில் வைக்கப்படும் பொருட்களுக்கு (எ.கா. தேநீர்) மட்டும் என உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. **கடல் சார்ந்த கப்பல் வெளிசுவர் காப்பீடில்** (Marine Hull insurance), அளிக்கப்படும் உத்திரவாதம் மூலம், காப்பீடை பெற்ற கப்பல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செல்லாது என குறிப்பிட்டால், அது காப்பீட்டை வழங்குவதற்கு காப்பீட்டாளர் ஒப்புக்கொண்ட அபாயத்தின் அளவைப் பற்றி அவருக்கு ஒரு புரிதலை அளிக்கிறது. உத்திரவாதம் மீறப்பட்டால், ஒப்புக்கொண்ட அபாயம் மாறிவிடுகிறது மற்றும் மீறப்பட்ட நாளிலிருந்து கடப்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ள காப்பீட்டாளர் அனுமதிக்கப்படுவார்.

3. **பெருங்கொள்ளை காப்பீடில்** (Burglary Insurance), சொத்து இருபத்தி நாலு மணி நேரமும் காவலாளியால் கவனிக்கப்படுவதற்காக

உத்திரவாதம் அளிக்கப்படும். பாலிசியுடன் இணைக்கப்பட்ட உத்திரவாதங்களுக்கு இணங்கினால் மட்டுமே விலைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை ஒரே மாதிரி தொடர்ந்து இருக்கும்.

**சுய-பரீட்சை** 2

ஒரு உத்திரவாதத்தை பொறுத்தவரை, கீழேயுள்ள எந்த கூற்று சரியானதாக இருக்கும்?

I. உத்திரவாதம் பாலிசியில் தெரிவிக்கப்படாமல் செயல்படுத்தப்படும் ஒரு நிபந்தனை

II. உத்திரவாதம் பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் நிபந்தனை

III. ஒரு உத்திரவாதம் என்பது ஒரு பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்ட ஒரு நிபந்தனையாகும் மற்றும் காப்பீடு செய்பவருக்கும் தனியாக தெரிவிக்கப்படும் மற்றும் பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாக இருக்காது.

IV. ஒரு உத்திரவாதம் மீறப்பட்டால் கூட, ஈடுக்கோரல்கள் வழங்கப்படலாம்.

## F. மேற்குறிப்புகள்

பாலிசிகளை தரமான வடிவத்தில் வழங்குவது காப்பீட்டாளர்களின் பழக்கமாகும்; இதில் சில இன்னல்களுக்கு காப்பளிக்கலாம் மற்றும் சில விலக்கப்படலாம்.

**வரையறை**

வழங்கப்படும்போது, பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றப்பட வேண்டுமானால், அது மேற்குறிப்பு என்ற ஆவணம் மூலம் திருத்தல்கள்/மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

இது பாலிசியுடன் இணைக்கப்படும் மற்றும் அதன் பாகமாக இருக்கும். பாலிசி மற்றும் மேற்குறிப்பு இரண்டும் சேர்ந்து ஒப்பந்தத்தின் சான்றாக

அமையும். பாலிசி காலத்தில் மாற்றங்கள்/திருத்தல்களை பதிவு செய்வதற்காக மேற்குறிப்புகள் வழங்கப்படலாம்.

அடிப்படை தகவல்கள் மாறும்போதெல்லாம், காப்பீடு செய்பவர் காப்பீடு நிறுவனத்திடம் அதை தெரிவிக்க வேண்டும் மற்றும் நிறுவனம் இதை குறித்துக்கொண்டு, அதை காப்பீடு ஒப்பந்தத்தின் பாகமாக மேற்குறிப்பு மூலம் சேர்த்து அதை செயல்படுத்த வேண்டும்.

பாலிசியின் கீழ் தேவைப்படும் மேற்குறிப்புகள் இவற்றுடன் சம்பந்தப்படுபவை:

a) அல்லது முகவரி போன்றவற்றில் மாற்றம்
b) விற்பனை, அடமானம் போன்றவற்றின் மூலம் காப்பீடுப் பற்றில் மாற்றம்.
c) கூடுதல் ஆபத்துகளுக்கு காப்பளிக்க காப்பீட்டின் நீட்டிப்பு/ பாலிசி காலத்தின் நீட்டிப்பு
d) அபாயத்தில் மாற்றம், எ.கா. கட்டுமானத்தில் மாற்றம், அல்லது தீ காப்பீட்டில் கட்டிடத்தின் குடியிருப்பு
e) சொத்தை வேறொரு இடத்திற்கு இடமாற்றுதல்
f) காப்பீட்டை ரத்து செய்தல்
g) பெயர் அல்லது முகவரி போன்றவற்றில் மாற்றம்.

**மாதிரி**

விளக்குவற்காக, மேற்குறிப்புகளின் சில மாதிரி வாசகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**ரத்து செய்தல்**
காப்பீடு செய்பவரின் வேண்டுகோளிற்கு இணங்க, இந்த பாலிசி மூலம் கிடைக்கும் காப்பீடு ………லிருந்து ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. காப்பீடு ………மாதங்களுக்கு மேல் அமலில் இருந்தது, காப்பீடு செய்தவருக்கு திருப்பித்தர எந்த தொகையும் பாக்கியில்லை.

**பாதுகாப்பு வழங்கப்பட்ட சரக்கு மதிப்பில் அதிகரிப்பு**:

இந்த பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்ட சரக்கின் மதிப்பு அதிகரித்திருப்பதை காப்பீடு செய்பவர் மூலம் தெரிவிக்கப்பட்டதால், காப்பீட்டுத் தொகை அதற்கேற்ப பின்வருமாறு ரூ......ஆக மாற்றப்படும்:

இதில்(விவரிக்கவும்)      ரூ.

இதில்(விவரிக்கவும்)      ரூ.

இதை கருத்தில் கொண்டு, கூடுதல் பிரீமியம் இதன் மூலம் கோரப்படுகிறது.

மேலும் இனி கூடுதல் ஆண்டு பிரீமியமானது ரூ..........

மொத்த காப்பீடு இப்போது ரூ........ஆக இருக்கும்.

இந்த பாலிசியின் விதிமுறைகள், ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மற்றபடி உட்படும்.

**<u>கடல் சார்ந்த பாலிசியில் தொடர்பற்ற இன்னலுக்காக காப்பை நீட்டித்தல்</u>**

காப்பீடு செய்பவர் கோரிய மாதிரி, மேலேயுள்ள பாலிசியின் கீழ் உடைப்புக்கான அபாயத்தையும் சேர்ப்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இதை கருத்தில் கொண்டு, கூடுதல் பிரீமியம் ரூ. ....... கோரப்படுகிறது.

**சுய-பரீட்சை** 3

வழங்கப்படும் சமயத்தில் பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட, அது __________ மூலம் அமைக்கப்பட்டு செய்யப்படுகிறது.

I. உத்திரவாதம்
II. மேற்குறிப்பு
III. திருத்தம்
IV. திருத்தியமைப்பது சாத்தியமில்லை

## G. பாலிசிகளின் பொருள் விளக்கத்தை அளித்தல்

காப்பீடு ஒப்பந்தங்கள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படும் மற்றும் காப்பீட்டு பாலிசியின் வாசகங்கள் காப்பீட்டாளர்களால் வரைவு செய்யப்படும். இந்த பாலிசிகள் பல்வேறு நீதிமன்றங்களால் நிறுவப்பட்ட கட்டுமான அல்லது விளக்கத்தின் சில நன்கு வரையறுக்கப்பட்ட விதிகளின்படி விளக்கப்பட வேண்டும். கட்டமைப்பின் மிக முக்கியமான விதிப்படி, சம்பந்தப்பட்ட தரப்புகளின் நோக்கம் மேலோங்க வேண்டும் மற்றும் இந்த நோக்கம் பாலிசியிலேயே தெளிவாக தெரியவேண்டும். இந்த பாலிசி தெளிவற்ற அர்த்தத்துடன் வழங்கப்பட்டிருந்தால், நீதிமன்றங்களில் காப்பீடு செய்பவருக்கு சாதகமாக மற்றும் காப்பீட்டாளருக்கு எதிராக பொருள் விளக்கம் அளிக்கப்படும்.

பின்வரும் விதிகளுக்கு ஏற்ப **பாலிசி வாசகங்கள்** புரிந்துகொள்ளப்படும் மற்றும் பொருள் விளக்கம் அளிக்கப்படும்:

a) அப்படி செய்வதில் ஒவ்வாமை ஏற்பட்டாலே தவிர, ஒரு திட்டவட்டமான நிபந்தனை மறைமுகமாக குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் கட்டுப்பாட்டை நீக்கிவிடும்.

b) வழக்கமான அச்சிடப்பட்ட பாலிசி படிவத்திற்கும் தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட பகுதிகளுக்கு மத்தியில் முரண்பாடுகள் இருந்தால், தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட பகுதி குறிப்பிட்ட ஒப்பந்தத்திலுள்ள தரப்புகளின் நோக்கத்தை தெரிவிப்பதாக கருதப்படும், மற்றும் அவற்றின் அர்த்தங்கள் உண்மையான அச்சிடப்பட்ட வார்த்தைகளை மறுக்கும்.

c) ஒரு மேற்குறிப்பு, ஒப்பந்தத்தின் வேறு பாகங்களுடன் முரண்பட்டால், கடைசியாக வந்த ஆவணமாக இருப்பதால் மேற்குறிப்பின் அர்த்தம் தான் மேலோங்கி இருக்கும்.

d) முரண்பாடாக இருக்கும் பட்சத்தில், சரிவாக எழுதப்பட்ட கூறுகள் சாதாரணமாக அச்சிடப்பட்ட வாசகங்களின் கட்டுப்பாடுகளை நீக்குவதாக இருக்கும்.

e) பாலிசியின் ஓரத்தில் அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட கூறுகள், பாலிசியின் நடுவில் இருப்பதை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும்.

f) பாலிசியில் இணைக்கப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட கூறுகள், ஓரத்திலுள்ள கூறுகள் மற்றும் பாலிசியின் நடுவிலுள்ள கூறுகளின் கட்டுப்பாட்டை நீக்குவதாக இருக்கும்.

g) தட்டச்சு செய்யப்பட்ட வார்த்தைகள் அல்லது மையுள்ள இரப்பர் முத்திரையால் பதிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகள், அச்சிடப்பட்ட வாசகத்தின் கட்டுப்பாட்டை நீக்குவதாக இருக்கும்

h) கையால் எழுதப்பட்டவை தட்டச்சு செய்யப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட வாசகங்களைவிட மேலோங்கி இருக்கும்.

i) இறுதியாக, ஏதேனும் தடுமாற்றம் அல்லது தெளிவின்மை இருந்தால், இலக்கணம் மற்றும் நிறுத்தற்குறியின் சாதாரண விதிகள் செயல்படுத்தப்படும்.

## முக்கியமானவை

### 1. பாலிசிகளை உருவாக்குதல்

காப்பீட்டு பாலிசி என்பது வணிக ஒப்பந்தத்தின் சான்றாகும் மற்றும் எல்லா ஒப்பந்தங்களிலும் இருப்பது போலவே காப்பீட்டு ஒப்பந்தத்திற்கும் நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டமைப்பு மற்றும் பொருள் விளக்கத்தின் பொது விதிகள் பொருந்தக்கூடியதாக இருக்கும்.

கட்டமைப்பின் முக்கிய கோட்பாடின் படி, ஒப்பந்தம் செய்பவர்களின் நோக்கம் மேலோங்கி இருக்கவேண்டும், மற்றும் அந்த நோக்கம், பாலிசி ஆவணம், முன்மொழிவு படிவம், உட்பிரிவுகள், மேற்குறிப்புகள், உத்திரவாதங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படவேண்டும். இவை பாலிசியுடன் இணைக்கப்பட்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக விளங்கவேண்டும்.

### 2. வாசகங்களின் அர்த்தங்கள்

பயன்படுத்தப்படும் வாசகங்கள், எளியதாக மற்றும் பிரபலமாக அர்த்தம் புரியும் வகையில் இருக்கவேண்டும். **வாசகங்களில்**

**பயன்படுத்தப்படும் வார்த்தைகள் எந்த சாதாரண நபரும் புரிந்துகொள்ளும் வகையில் இருக்கவேண்டும். எனவே, “தீ” என்பது நெருப்பு அல்லது நிஜமாக எரிவதைக் குறிக்கும்.**

மறுபுறம், **வேறு சூழலை** சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலே **தவிர, பொதுவான வியாபாரம் அல்லது வணிக அர்த்தமுள்ள வார்த்தைகள் அதற்கான அர்த்தத்துடன் புரிந்துகொள்ளப்படும்.** சட்டவிதிகளில் வரையறை செய்யப்பட்டிருந்தால், அதே மாதிரி வார்த்தைகளின் அர்த்தம் பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தில் (Indian Penal Code) உள்ள மாதிரியே “திருட்டு” என்ற வார்த்தை பொருள் கொள்ளப்படும்.

காப்பீட்டு பாலிசிகளில் பயன்படுத்தப்படும் நிறைய வார்த்தைகள், முன்புள்ள சட்டத் தீர்மானங்களின்படி பயன்படுத்தப்படும் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அந்த தீர்மானங்கள் கீழ் நீதிமன்றங்களின் தீர்மானங்களையும் கட்டுப்படுத்தும். தொழில்நுட்ப வார்த்தைகளுக்கு, முரண்பாடான அர்த்தம் சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலே தவிர தொழில்நுட்ப அர்த்தங்களே கொடுக்கப்பட வேண்டும்.

## H. புதுப்பித்தல் அறிவிப்பு

**பெரும்பாலான பொதுக் காப்பீட்டு பாலிசிகள் வருடாந்திர அடிப்படையில் காப்பீடு செய்யப்படும்.**

காப்பீடு செய்பவரிடம் அவருடைய பாலிசி, குறிப்பிட்ட தேதியில் காலாவதி அறிவதை அறிவிக்கும் கடமை சட்டரீதியாக காப்பீட்டாளர்களுக்கு இல்லை என்றாலும், ஒரு மரியாதைக்காக மற்றும் நல்ல வியாபார வழக்கத்திற்காகவும், காப்பீட்டாளர்கள் காலாவதியாகும் தேதியைக் குறிப்பிட்டு, பாலிசிக்கு புதுப்பித்தல் அறிவிப்பையும் முன்கூட்டியே வழங்கி பாலிசியை புதுப்பிக்குமாறு அழைப்பார்கள். இந்த அறிவிப்பில் எல்லா முக்கிய விஷயங்களும் இருக்கும் அதாவது காப்பீட்டுத் தொகை, ஆண்டு பிரீமியம் போன்றவை. அதில் அபாயம் பற்றிய ஏதேனும் முக்கிய மாற்றங்கள் இருக்குமானால், அதை தெரிவிக்குமாறு காப்பீடு செய்பவரிடம் அறிவிப்பதும் ஒரு வழக்கமாகும்.

வாகன புதுப்பித்தல் அறிக்கையில், உதாரணத்திறகு, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப காப்பீட்டுத் தொகையை (அதாவது காப்பீடு செய்பவர் அறிவித்த வாகனத்தின் மதிப்பீடு) திருத்துவது, காப்பீடு செய்பவரின் கவனத்திற்கு, கொண்டுவரப்பட வேண்டும்.

பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்படும் வரை அபாயம் ஏற்கப்படாது எனும் சட்டரீதியான ஏற்பாடும் காப்பீடு செய்பவரின் கவனத்திற்கு, கொண்டுவரப்பட வேண்டும்.

**சுய-பரீட்சை** 4

கீழேயுள்ள எந்த கூற்று புதுப்பித்தல் அறிவிப்பு விஷயத்தில் சரியானது?

I. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 30 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்
II. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 15 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்
III. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 7 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்
IV. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, காப்பீடு செய்பவரிடம் அவருடைய பாலிசி, குறிப்பிட்ட தேதியில் முடிவதை அறிவிக்கும் கடமை சட்டப்பூர்வமாக காப்பீட்டாளர்களுக்கு இல்லை.

---

**சுருக்கம்**

**a)** ஆவணமாக்கலின் முதல் கட்டமாவது முன்மொழிவு படிவங்களாகும், இதன் மூலம் காப்பீடு செய்பவர் அவரைப் பற்றி தெரிவிப்பார்

**b)** தகவல்களை வெளிப்படுத்தும் கடமை, பாலிசி துவங்குவதற்கு முன்பே துவங்கி, ஒப்பந்தம் முடிந்த பிறகும் தொடரும்.

**c)** காப்பீட்டு நிறுவனங்கள், பொதுவாக முன்மொழிவு படிவத்தின் இறுதியில் பாலிசிதாரர் கையெழுத்திட ஒரு பிரகடனத்தை சேர்ப்பார்கள்.

d) முன்மொழிவு படிவத்தின் கூறுகள்:

i. முன்மொழிபவரின் முழு பெயர்
ii. முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்
iii. முன்மொழிபவரின் தொழில், பணி அல்லது வணிகம்
iv. காப்பீடு செய்யப்படும் விஷயத்தின் விளக்கங்கள் மற்றும் அடையாளம்
v. காப்பீட்டுத் தொகை
vi. முன்புள்ள மற்றும் தற்போதுள்ள காப்பீடு
vii. இழப்பு அனுபவம்
viii. காப்பீடு செய்பவரின் பிரகடனம்

e) இடைத்தரகராக இருக்கும் முகவருக்கு, காப்பீடு செய்பவர் காப்பீட்டாளரிடம் அபாயம் சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களையும் வழங்குவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு உள்ளது.

f) முன்மொழிவை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளிப்பதைப் பற்றி தீர்மானிக்கும் செயல்முறைக்கு காப்பீடு ஏற்பளிப்பு என்று பெயர்.

g) பிரீமியம் என்பது, காப்பீடு ஒப்பந்தத்தின் கீழ், ஒரு பொருளை காப்பீடு செய்வதற்காக காப்பீட்டாளருக்கு காப்பீடு பெறுபவரால் செலுத்தப்படும் கருதுகை அல்லது தொகையாகும்

h) பிரீமியம், ரொக்கமாகவோ, வங்கியால் ஏற்கப்படும் எந்த முறையிலும், தபால் வழியான பண அஞ்சலாகவோ, கடன் அல்லது பற்று அட்டைகள் (Credit or debit cards) மூலம், இணையத்தின் மூலமாகவோ, ஈ-டிரான்ஸ்பெர் மூலமாகவோ, நேரடி கிரெடிட் (direct credit) மூலமாகவோ, அல்லது ஐஆர்டிஏஐ அவ்வப்போது அங்கீகரிக்கும் வேறு எந்த முறையிலும் செலுத்தப் படலாம்.

i) ஒரு உறை குறிப்பு என்பது பாலிசி தயாரிக்கப்படும் போதோ அல்லது காப்பீடிற்கான ஒப்பந்தப் பேச்சு நடத்தப்படும்போதோ, மற்றும் தற்காலிகமாக காப்பீட்டின் காப்பு தேவைப்படும்போது வழங்கப்படுகிறது.

j) கடல் சார்ந்த மற்றும் வாகன பிரிவு வணிகங்களில் முக்கியமாக உறை குறிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

k) காப்பீடு இருப்பதாக சான்று தேவைப்படும் இடங்களில், காப்பீட்டுச் சான்றிதழ் அதை நிரூபிக்கிறது.

**l)** பாலிசி என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தின் சான்றை அளிக்கின்ற முறையான ஆவணமாகும்.

**m)** உத்திரவாதம் என்பது ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மைக்காக உரிய முறைப்படி பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் மற்றும் கட்டாயமாக இணங்கப்பட வேண்டிய நிபந்தனை ஆகும்.

**n)** வழங்கப்படும்போது, பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட வேண்டுமானால், அது மேற்குறிப்பு என்ற ஆவணம் மூலம் திருத்தல்கள்/மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

**o)** பாலிசி உருவாக்கத்தின் மிக முக்கியமான விதியாவது, நபர்களின் நோக்கம் மேலோங்கி இருக்கவேண்டும், மற்றும் இந்த நோக்கம் பாலிசியிலேயே காட்டப்படவேண்டும் என்பதாகும்.

## முக்கியமான வார்த்தைகள்

a) முன்மொழிவு படிவம்

b) ப்ரீமியத்தை முன்கூட்டியே செலுத்துதல்

c) உறை குறிப்பு

d) காப்பீடின் சான்றிதழ்

e) புதுப்பித்தல் அறிவிப்பு

f) உத்திரவாதம்

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில் 2** - **சரியான பதில் விருப்பம்** IV.

**பதில் 3** - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில் 4** - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில் 5** - **சரியான பதில் விருப்பம்** IV.

# அத்தியாயம் G-02

# ஏற்பளிப்பு மற்றும் விலை உருவாக்கம்

## அத்தியாய அறிமுகம்

பொது காப்பீடு தொடர்பான பல்வேறு கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளை நாங்கள் கற்றுக்கொண்டோம். ஏற்பளிப்பு என்பது அபாயத்தை ஏற்கலாமா வேண்டாமா என்பதை காப்பீட்டாளர் தீர்மானிக்கும் செயல்முறையாகும். இதற்காக, ஏற்பாளர்கள் அபாயத்தை பகுப்பாய்வு செய்கிறார்கள். அபாயத்தில் உள்ள அபாய அளவை மற்றும் பிரீமியமாக எவ்வளவு பணம் வசூலிக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். மீண்டும், சில நேரங்களில் அபாயத்தை மேம்படுத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மட்டுமே அபாயங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கோணங்கள் அனைத்தும் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்படுகின்றன.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. உடல்சார் ஆபத்துகள்
B. உடல்சார் ஆபத்துகள் - அபாய மேலாண்மை, உட்பிரிவுகள் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் முக்கியத்துவம்
C. உபரி/கழிவுகளைத் தீர்மானித்தல் மற்றும் காப்பளிப்பை கட்டுப்படுத்துதல்
D. நெறிமுறைசார் ஆபத்து
E. காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தல்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

1. உடல்சார் ஆபத்துகளைப் புரிந்து கொள்ள முடியும்
2. ஏற்பளிப்பை ஒரு செயல்பாடாக மதிப்பிட முடியும்
3. ஆபத்தைக் குறைப்பதற்கு ஏற்பாளர்கள் பயன்படுத்தும் முறைகள்
4. காப்பீட்டுத் தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## A. உடல்சார் ஆபத்துகள்

சொத்துக்கு அல்லது நபர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு ஆபத்துகள் குறித்த முழுமையான அறிவு ஏற்பளிப்புக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்.

உடல்சார்ந்த ஆபத்துகள் முன்மொழிவுப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து உறுதி செய்யப்படுகின்றன. இதை அபாயம் குறித்த ஒரு கணக்கீட்டின் மூலமோ அல்லது ஆய்வின் மூலமோ சிறப்பாக உறுதிப்படுத்த முடியும். பல்வேறு காப்பீட்டு வகைகளில் உள்ள உடல்சார் ஆபத்துகளின் சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

a) **தீ விபத்து**

i. **கட்டமைப்பு:** கட்டமைப்பு என்பது சுவர்களிலும் கூரைகளிலும் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களைக் குறிக்கின்றது. மரக் கட்டிடத்தை விட கான்கிரீட் கட்டிடம் சிறந்ததாகும்.

ii. **உயரம்:** மாடிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, தீயை அணைப்பதில் உள்ள சிரமத்தின் காரணமாக, அதனால் விளையும் ஆபத்தும் அதிகமானதாக இருக்கும். அதோடு, அதிக மாடித்தளங்களைக் கொண்டுள்ள கட்டிடங்களில் மேல்புறத் தளங்கள் இடிந்து விழுந்து அதிக சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயம் உள்ளது.

iii. **தளங்களின் இயல்பு:** மரத்தாலான தளங்கள் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றவை. அதோடு, தீ விபத்து ஏற்படும் சமயங்களில் மரத்தாலான தளங்கள் எளிதாக இடிந்து விழுவதால், மேல் தளங்களிலிருந்து இயந்திரங்கள் அல்லது பொருட்கள் விழுவதன் காரணமாக கீழ்த்தளங்களில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகின்றது.

iv. **குடியிருக்கை:** கட்டிடத்தின் குடியிருக்கை, மற்றும் அது பயன்படுத்தப்படும் நோக்கம். குடியிருக்கையிலிருந்து பல்வேறு வகையான ஆபத்துகள் எழுகின்றன.

v. **தீப்பற்றுதல் ஆபத்து:** வேதிப்பொருட்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் அல்லது பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் அதிக **தீ விபத்து ஆபத்துக்கு** உட்படுகின்றன. மரத்தாலான முற்றம் **அதிக தீப்பற்றுதல் ஆபத்தை** கொண்டுள்ளது, ஏனெனில் தீ எரியத் தொடங்கியவுடன் மரக்கட்டை விரைவில் எரிந்துவிடுகின்றது. தீ விபத்து ஏற்படும் சமயத்தில் உள்ளடக்கங்கள் அதிக சேதத்துக்கு உட்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, காகிதம், ஆடைகள் போன்றவை தீ விபத்து சேதத்தால் மட்டுமல்லாது, தண்ணீர், வெப்பம் போன்றவற்றாலும் எளிதில் சேதமடையும்.

vi. **தயாரிப்பு செயல்முறை:** இரவு நேரத்தில் வேலை செய்யும்போது, செயற்கை விளக்குகளைப் பயன்படுத்துதல், இயந்திரங்களின்

உராய்வுக்கு வழிவகுக்கக்கூடிய தொடர்ச்சியான பயன்பாடு மற்றும் களைப்பின் காரணமாக தொழிலாளர்களின் கவனமின்மைக்கான வாய்ப்பு ஆகியவற்றின் காரணமாக ஆபத்துக்கான அபாயம் அதிகரிக்கிறது.

vii. **சூழ்நிலை/ அபாயமுள்ள இடம்**: நெருக்கடியான பகுதியில் அமைந்திருப்பது, ஆபத்து நிறைந்த அருகாமை வளாகங்களின் தொடர்பு மற்றும் தீயணைப்புத் துறையினரிடமிருந்து தொலைவில் அமைந்திருப்பது ஆகியவை இயற்பியர் ஆபத்துக்கான (Physical Hazard) உதாரணங்கள்.

b) **கடல் சார்ந்தவை**

i. **கப்பலின் வயது மற்றும் நிலைமை**: பழைய கப்பல்கள் அதிக ஆபத்துகளைக் கொண்டுள்ளன.

ii. **மேற்கொள்ள வேண்டிய கடற்பயணம்**: கடற்பயணத்தின் வழி, சரக்கேற்றுதல் மற்றும் இறக்குதல் நிலைமைகள் மற்றும் துறைமுகங்களில் உள்ள கிடங்கு வசதிகள் ஆகியவை காரணிகளாகும்.

iii. **சரக்கிருப்புகளின் தன்மை**: அதிக மதிப்புள்ள பொருட்கள் திருடப்படுவதற்கான வாய்ப்புள்ளது; இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்படும்போது உடைந்துவிடுவதற்கான வாய்ப்புள்ளது.

iv. **பொதியிடல் முறை**: பேல்களில் கட்டப்படும் சரக்குகள் பைகளில் கட்டப்படும் சரக்குகளை விடச் சிறந்ததாகக் கருதப்படுகின்றன. மேலும், ஒற்றைப் பைகளை விட இரட்டைப் பைகள் பாதுகாப்பானவை.

பழைய டிரம்களில் அடைக்கப்பட்டுள்ள திரவ நிலையில் உள்ள சரக்குகள் மோசமான இயற்பியர் இன்னலை விளைவிக்கின்றன.

c) **மோட்டார்**

i. **வாகனத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது மற்றும் அதன் நிலைமை**: பழைய வாகனங்களில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

ii. **வாகனத்தின் வகை**: பந்தயக் கார்கள் அதிகமான உடல்சார் ஆபத்துக்கு உட்படுகின்றன.

d) **கொள்ளை**

i. **சரக்கிருப்புகளின் தன்மை**: சிறிய அளவிலான அதிக மதிப்புக்கொண்ட பொருட்கள் (எ.கா. நகைகள்) மற்றும் எளிதில் விற்க முடிகின்ற பொருட்கள் மோசமான அபாயங்களாக கருதப்படுகின்றன.

ii. **சூழ்நிலை**: மேல் தளத்தில் உள்ள அபாயங்களை விட தரைத்தளத்தில் அபாயங்கள் அதிகம்: தனியான பகுதிகளில் அமைந்துள்ள ஒதுக்குப்புறமான வீடுகளில் உள்ள அபாயம் மிகவும் அதிகம்.

iii. **கட்டுமான இன்னல்**:பல கதவுகளையும் சன்னல்களையும் கொண்டுள்ள கட்டிடங்கள் மோசமான இயற்பியர் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

e) **தனிநபர் விபத்து**

i. **நபரின் வயது**: மிக வயதான நபர்கள் அதிக விபத்துக்கு ஆளாகின்ற வாய்ப்புள்ளது; அதோடு, விபத்து நிகழ்விலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்கும் நீண்ட காலம் ஆகின்றது.

ii. **தொழிலின் தன்மை**: குதிரைச் சவாரி செய்பவர்கள், சுரங்கப் பொறியாளர்கள், உடலுழைப்புத் தொழிலாளர்கள் ஆகியோர் மோசமான உடல்சார் ஆபத்துக்கான உதாரணங்கள் ஆவர்.

iii. **ஆரோக்கியம் மற்றும் உடல்நிலை**: நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு எதிர்பாராத விதமாக காயம் ஏற்படும்போது அறுவைச் சிகிச்சை அவருக்கு பலனளிக்காமல் போகலாம்.

## B. இயற்பியர் ஆபத்துகள் - அபாய மேலாண்மை, உட்பிரிவுகள் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் முக்கியத்துவம்

இயற்பியர் அபாயங்களைக் கையாளுவதற்கு காப்பீட்டு ஏற்பாளர்கள் பின்வரும் முறைகளைப் பயன்படுத்துகிறார்கள்:

- ✓ பிரீமியம் ஏற்றுதல்
- ✓ பாலிசியின் மீது உத்தரவாதங்களைப் பயன்படுத்துதல்
- ✓ குறிப்பிட்ட உட்பிரிவுகளைப் பயன்படுத்துதல்
- ✓ உபரிகளை / கழிவுகளை சுமத்தல்
- ✓ வழங்கப்பட்டுள்ள காப்பீட்டை கட்டுப்படுத்துதல்
- ✓ காப்பீட்டை மறுத்தல்

### a) பிரீமியம் ஏற்றுதல்

அபாய வெளிப்பாட்டில் சில பாதகமான அம்சங்கள் இருக்கக்கூடும், காப்பீட்டு ஏற்பாளர்கள் அதை ஏற்பதற்கு முன்பு அதற்காக கூடுதல் பிரீமியம் விதிக்க தீர்மானிக்கலாம். பிரீமியத்தை ஏற்றுவதன் மூலம் ஈடுக்கோரல்களின் அதிகமாக சாத்தியக்கூறு அல்லது பெரிய அளவிலான ஈடுக்கோரல் ஏற்படுவது கருத்தில் கொள்ளப்படுகின்றது.

**எடுத்துக்காட்டு**

பயணியர் கப்பல்கள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட தரங்களைப் பின்பற்றுகின்ற இதர கப்பல்களில் எடுத்துச் செல்லப்படும் சரக்குகளுக்கு சாதாரண பிரீமிய விகிதம் வசூலிக்கப்படுகின்றது. இருப்பினும், அதிக-பழையதான அல்லது குறைந்த எடையளவு கொண்ட கப்பல், சரக்கினை எடுத்துச் செல்லும்போது கூடுதல் பிரீமியம் விதிக்கப்படுகின்றது.

தனிநபர் விபத்துக் காப்பீட்டில், மலையேறுதல், சக்கரங்களில் ரேசிங் செய்தல், பெரிய மிருக வேட்டையாடுதல் (big game hunting) போன்ற காரியங்களில் பாலிசிதாரர் ஈடுபடும்போது அதிக பிரீமியம் விதிக்கப்படுகின்றது.

சில சமயம் வாகனக் காப்பீடு அல்லது உடல்நலக் காப்பீடு போன்றதில், பாதகமான ஈடுக்கோரல்கள் விகிதத்திற்காகவும் பிரீமியம் ஏற்றப்படுகிறது.

### b) உத்தரவாதங்களை சுமத்துதல்

இயற்பியர் அபாயத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான உத்தரவாதங்களை காப்பீட்டு நிறுவனங்களை ஒன்றிணைக்கின்றன. சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**எடுத்துக்காட்டு**

i. **கப்பல் சரக்கு**: தகர லைனிங் உள்ள பெட்டிகளில் பொருட்களை கட்டவேண்டும் (எ.கா. தேயிலை) உத்திரவாதம் நடைமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

ii. **கொள்ளை**: இருபத்து நான்கு மணி நேரமும் ஒரு காவலாளியை கொண்டு சொத்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

iii. **தீ விபத்து**: தீ விபத்து காப்பீட்டில், வழக்கமான பணி நேரத்தைத் தாண்டி வளாகம் பயன்படுத்தப்படுவதில்லை என்ற உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

iv. **வாகனம்**: வேகச் சோதனை அல்லது பந்தயத்துக்கு வாகனம் பயன்படுத்தப்படாது என உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டு**

**கப்பல் சரக்கு**: பாகங்களுக்கு ஏற்படும் சிறிய சேதம் விலையுயர்ந்த இயந்திரங்களுக்கு ஒட்டுமொத்த நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. சில இயந்திரங்கள் பதிலீட்டு உட்பிரிவுக்கு (Replacement Clause) உட்படுத்தப்படுகின்றன, இது ஏற்பாளரின் பொறுப்பினை, மாற்றீடு செய்தல், அனுப்புதல் மற்றும் ஏதேனும் உடைந்த பாகங்களை மீண்டும் பொருத்துதல் ஆகியவற்றுக்குள் கட்டுப்படுத்துகின்றது.

வார்ப்புக் குழாய்கள், கடின அட்டைகள் ஆகியவை சில சமயங்களில் விளிம்புகளில் மட்டுமே சேதமடைகின்றன. வார்ப்புக் குழாய்கள், கடின அட்டைகள் போன்றவை மீதான கடற்பயணப் பாலிசிகள் சேதமடைந்த பாகங்களை வெட்டி எறிந்து மீதமுள்ளவற்றை மட்டுமே பயன்படுத்தக்கூடிய வெட்டுதல் உட்பிரிவு உத்தரவாதத்துக்கு (cutting clause warrantying) உட்பட்டவையாகும்.

### c) உபரிகள் / கழிவுகளை முடிவு செய்தல் மற்றும் காப்பீடை கட்டுப்படுத்தல்

இழப்புத் தொகை குறிப்பிடப்பட்ட உபரிகளை / கழிவுகளை மிஞ்சும்போது, மீதித் தொகை 'உபரி' பிரிவின் கீழ் செலுத்தப்படுகின்றது. வரம்புக்குக் கீழே உள்ள இழப்புக்கு பணம் வழங்கப்பட மாட்டாது.

இந்த உட்பிரிவுகளின் நோக்கம் சிறிய ஈடுக்கோரல்களை அகற்றவேண்டும் என்பதாகும். பாலிசிதாரர் இழப்பின் ஒரு பகுதியைச் செலுத்த வேண்டும் என்பதால், அதிக கவனம் எடுத்துக்கொள்வதற்கும், இழப்பு தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவர் ஊக்குவிக்கப்படுகிறார்.

**எடுத்துக்காட்டு**

i. **வாகனம்**: பழைய மோட்டார் வாகனத்துக்கான முன்மொழிவு முழுமையான விதிமுறைகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, ஆனால் காப்பீட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட்ட காப்பீட்டை, அதாவது மூன்றாம் தரப்பு அபாயங்களுக்கு (Third party liability) எதிராக மட்டுமே காப்பை, வழங்குவார்கள்.

ii. **தனிநபர் விபத்து**: அதிகபட்ச ஏற்பு வயது வரம்பைத் தாண்டிய ஒரு தனிநபர் விபத்து முன்மொழிபவருக்கு முழுமையான விதிமுறைகளுக்குப் பதிலாக இறப்பு அபாயத்துக்கு மட்டுமே, அதாவது உடல் இயலாமைக்கான நன்மைகளுக்கும் சேர்த்து, காப்பீடு வழங்கப்படும்.

### d) தள்ளுபடிகள்

அபாயம் சாதகமானதாக இருந்தால் குறைவான விகிதங்கள் விதிக்கப்படுகின்றன அல்லது தள்ளுபடி வழங்கப்படுகிறது.

தீ விபத்துக் காப்பீட்டில் அபாயத்தை குறைப்பதில் பின்வரும் அம்சங்கள் பங்களிப்பதாக கருதப்படுகின்றன.

i. வளாகங்களுக்குள் தானியங்கு நீர் தெளிக்கும் கருவி அமைப்பு நிறுவுதல்

ii. வளாகத்துக்குள் நீரை ஊத்தக்கூடிய அமைப்பை நிறுவுதல்

iii. வாளி, கையடக்க தீயணைப்பான்கள் மற்றும் ஆளியக்க தீயணைப்பு பம்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கையால் இயக்கும் உபகரணங்களை நிறுவுதல்

iv. தானியங்கு தீ விபத்து அலாரம் நிறுவுதல்

**எடுத்துக்காட்டு**

**வாகனக் காப்பீட்டின்** கீழ், மோட்டார் சைக்கிள் எப்பொழுதுமே பக்க-வண்டி இணைக்கப்பட்ட நிலையில் பயன்படுத்தப்பட்டால் பிரீமியத்தில் தள்ளுபடி வழங்கப்படும், ஏனெனில் இந்த அம்சம் வாகனத்துக்கு அதிக நிலைப்புத்தன்மையைக் கொடுப்பதால் அபாயம் ஏற்படும் நிலையை குறைக்கிறது.

**கடல்சார் காப்பீட்டில்**, காப்பீட்டு நிறுவனம் “முழு பாரம்” ஏற்றிய கொள்கலனுக்கான பிரீமியத்தில் தள்ளுபடி வழங்குவது குறித்துப் பரிசீலிக்கும், ஏனெனில் இது திருட்டு அல்லது பற்றாக்குறைக்கான நிகழ்வினைக் குறைக்கின்றது.

**குழு தனிநபர் விபத்துக்** காப்பின் கீழ், காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக வேலையையும் செலவையும் குறைக்கக்கூடிய பெரிய குழுவின் காப்பீட்டுக்கு தள்ளுபடி வழங்கப்படும்.

---

### e) ஈடுக்கோராமை போனஸ் (NCB)

பெறக்கூடிய அதிகபட்ச போனஸ் வரம்புக்குட்பட்டு, ஒவ்வொரு ஈடுக்கோரல் இல்லாத புதுப்பித்தல் வருடத்துக்கும் குறிப்பிட்ட சதவீதம் போனஸாக வழங்கப்படுகின்றது. இது முழுக் குழுவுக்கும் உரித்தான

ஈடுக்கோரல் விகிதத்தைப் பொறுத்து, அல்லது சொந்த மோட்டார் வாகனத்தின் சேதத்திற்கான காப்பீடை வைத்திருக்கும் பாலிசிதாரர்களின் ஈடுக்கோரல் விகிதத்தைப் பொறுத்து, புதுப்பித்தலின்போது மட்டும் மொத்த பிரீமியத்தின் மீது தள்ளுபடி அனுமதிக்கப்படுகின்றது.

**ஈடுக்கோராமை போனஸ் என்பது ஏற்பளிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வலிமையான உத்தி ஆகும், மேலும் இது விலை உருவாக்கல் முறைகளில் ஒரு மைய பகுதியாக உள்ளது.** இந்த போனஸ் காப்பீட்டு பெறுபவரின் நெறிமுறை சார்ந்த அபாயத்தின் காரணியை அங்கீகரிக்கின்றது. இது வாகனக் காப்பீட்டில் உள்ளது போன்று சிறந்த ஓட்டுநர் திறன்களைக் கடைப்பிடிப்பதன் மூலமோ அல்லது உடல்நல பாலிசிகளில் உடல்நலத்தை சிறந்த முறையில் கவனித்துக்கொண்டு பாலிசிதாரர் ஈடுக்கோரல்களை பதிவு செய்யாததற்காகவும் வெகுமதி அளிக்கிறது.

### f) காப்பீட்டை மறுத்தல்

தொடர்புடைய உடல்சார் இன்னல் கணிசமான அளவுக்கு மோசமாக இருந்தால், அபாயம் காப்பீடு செய்ய இயலாததாக மற்றும் மறுக்கப்படுகிற மாதிரி ஆகிறது. தங்களுடைய கடந்தகால இழப்பு அனுபவம், ஆபத்துகளின் அறிவு மற்றும் ஒட்டுமொத்த ஏற்பளிப்பு கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் காப்பீடு அளிப்பவர்கள் ஒவ்வொரு வகை காப்பீட்டு வகைக்கும் மறுக்கப்பட வேண்டிய அபாயங்களின் பட்டியலை முறைப்படுத்தியுள்ளனர்.

## C. நெறிமுறைசார் ஆபத்து

நெறிமுறைசார் ஆபத்து பின்வரும் வழிகளில் எழக்கூடும்:

### a) நேர்மையின்மை

மோசமான நெறிமுறைசார் இன்னலுக்கான உதாரணம், ஒரு ஈட்டுக்கோரலை வசூலிப்பதற்காக ஒரு இழப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது உருவாக்கும் ஆழ்ந்த நோக்கத்துடன் காப்பீடு பெறுபவர் காப்பீடை எடுப்பதாகும். ஒரு நேர்மையான பாலிசிதாரர் கூட நிதி நெருக்கடி சமயத்தில் இழப்பை பொய்யாக உருவாக்கி பணம் பெற விரும்பலாம்.

### b) கவனமின்மை

இழப்பைப் பற்றிய அக்கறையின்மை என்பது கவனமின்மைக்கான ஒரு எடுத்துக்காட்டாகும். காப்பீடு இருப்பதன் காரணமாக, காப்பீடு செய்பவர் காப்பளிக்கப்பட்ட சொத்தின் மீது கவனக்குறைவான அணுகுமுறையைப் பின்பற்ற முயலக்கூடும்.

சொத்தை காப்பீடு செய்யாமல் இருந்தால், ஒரு விவேகமான மற்றும் நியாயமான மனிதன் எவ்வாறு ஒரு காப்பளிக்கப்பட்ட சொத்தின் மீது அக்கறை செலுத்துவாரோ, அதே மாதிரி கவனிக்காவிட்டால், நெறிமுறைசார் ஆபத்து திருப்தியானதாக இருக்காது.

### c) தொழில்துறை உறவுகள்

முதலாளி-தொழிலாளர் உறவுமுறை மோசமான நெறிமுறைசார் ஆபத்தின் ஒரு கூறாக செயல்படக்கூடும்.

d) **தவறான ஈடுக்கோரல்கள்**

இந்த வகையான நெறிமுறைசார் ஆபத்து ஈடுக்கோரல் நிகழும்போது எழுகின்றது. காப்பீடு பெற்ற ஒருவர் வேண்டுமென்றே ஒரு இழப்பை ஏற்படுத்த மாட்டார், ஆனால் ஒரு இழப்பு ஏற்படும்போது இழப்பீட்டுக் கோட்பாடு பற்றி உணராமல் அவர் நியாயமற்ற முறையில் அதிக அளவு தொகையைக் கேட்க முயற்சிக்கக்கூடும்.

**தகவல்**

**துணை-வரம்புகள்**: மிகைப்படுத்தப்பட்ட பில்களை கட்டுப்படுத்துவதற்காக காப்பீடு அளிப்பவர் அறைச் செலவுகள், அறுவைச்சிகிச்சை நடைமுறைகள் அல்லது மருத்துவர் கட்டணம் போன்ற ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வரம்புகளை நிர்ணயிக்கக்கூடும்.

---

**காப்பீடு செய்பவரிடம் நெறிமுறைசார் ஆபத்து இருப்பதாக சந்தேகிக்கப்படும்போது, முகவர் அத்தகைய முன்மொழிவுகளை காப்பீட்டு நிறுவனத்துக்கு பரிந்துரை செய்யக்கூடாது அல்லது கொண்டுவரக் கூடாது. மேலும், அவர் அத்தகைய பிரச்சினைகளை காப்பீடு நிறுவன அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.**

1. **குறுகிய கால அளவுகள்**

வழக்கமாக, பிரீமியம் விகிதங்கள் பன்னிரண்டு மாத காலத்துக்கு குறிப்பிடப்படுகின்றன. குறுகிய காலத்திற்காக பாலிசி எடுக்கப்பட்டால், அதற்கான பிரீமியம் குறுகிய கால அளவு எனப்படும் சிறப்பு அளவுக்கேற்ப வசூலிக்கப்படுகிறது. குறுகிய காலக் காப்பீட்டிற்கு செலுத்த வேண்டிய பிரீமியம் விகித அடிப்படையில் இருக்காது.

**குறுகிய கால அளவைகளுக்கான தேவை**

a) 12 மாத காலமாக இருந்தாலும் குறுகிய காலமாக இருந்தாலும், பாலிசி வழங்குவதில் ஏற்படும் செலவுகள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக இருப்பதால், இந்த விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

b) மேலும், வருடாந்திர பாலிசிக்கு வருடம் ஒருமுறை மட்டுமே புதுப்பித்தால் போதுமானது, ஆனால் குறுகிய கால காப்பீடுகளை அடிக்கடி புதுப்பிக்க வேண்டி உள்ளது. விகிதாச்சார பிரீமியம் அனுமதிக்கப்பட்டால், காப்பீடு செய்பவர்கள் குறுகிய காலப் பாலிசிகளையே எடுத்து, பிரீமியங்களை தவணைகளில் செலுத்த முற்படலாம்.

c) அதோடு, சில காப்பீடுகள் பருவகாலக் காப்பீடுகளாகும், அவற்றுக்கான அபாயம் அந்தப் பருவத்தின்போது அதிகமாக இருக்கும். சில சமயங்களில் அபாயம் அதிகமாக இருக்கும் காலங்களில் காப்பீடுகள் எடுக்கப்படுகின்றன, அதனால் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடையே தேர்ந்தெடுக்கப் படுகிறது. காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடையே அத்தகைய தேர்ந்தெடுப்பினைத் தடுக்க குறுகிய கால அளவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. காப்பீடு பெற்றவர் வருடாந்திர காப்பீட்டை இரத்து செய்யும்போதும் அவை பொருந்துகின்றன. அந்த வழக்கில், காப்பீட்டாளர் அபாயத்தில் இருந்த காலத்திற்கான பிரீமியத்தை குறுகிய கால அளவையாக கணக்கிட்டு பணத்தை திரும்ப வழங்கலாம்.

## குறைந்தபட்ச பிரீமியம்

ஒவ்வொரு பாலிசியின் கீழும் குறைந்தபட்ச பிரீமியத்தை வசூலிப்பது நடைமுறையாகும், இதனால் பாலிசியை வழங்குவதற்கான நிர்வாக செலவுகள் வசூலிக்கப்படும்.

**சுய-பரீட்சை** 1

நெறிமுறைசார் இன்னலைக் கண்டறியும்போது ஒரு முகவர் என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது?

I. முன்புபோலவே காப்பீட்டைத் தொடர வேண்டும்
II. காப்பீட்டு நிறுவனத்துக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்
III. ஈடுக்கோரல்களில் பங்கு கேட்க வேண்டும்
IV. கண்டும் காணாமல் இருந்துவிட வேண்டும்

## D. காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தல்

இது பாலிசி நிபந்தனையின் கீழ் ஒரு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு அளிக்கக்கூடிய அதிகபட்சத் தொகை ஆகும். இழப்பீட்டுத் தொகையின் வரம்பைத் தேர்ந்தெடுப்பதில் காப்பீடு பெறுபவர் மிக கவனமாக இருக்க வேண்டும், ஏனெனில் இதுதான் ஈடுக்கோரலின் போது திரும்ப வழங்கப்படும் அதிகபட்ச ஈட்டுத் தொகை ஆகும்.

காப்பீட்டுத் தொகை எப்பொழுது காப்பீடு பெறுபவரால் தீர்மானிக்கப்படுகிறது. இது பாலிசியின் கீழ் பிரீமியத்தை கணக்கிட பயன்படுத்தப்படும் விகிதத்துக்கான தொகை ஆகும்.

அது சொத்தின் உண்மையான மதிப்புக்கான பிரதிநிதியாக இருக்க வேண்டும். மிகைக் காப்பீடாக இருந்தால், காப்பீடு அளிப்பவர் எந்தப் பலனும் பெற முடியாது, மேலும் அது ஒரு குறைக் காப்பீடாக இருந்தால், ஈடுக்கோரல் விகிதாச்சார முறையில் குறைகிறது.

**காப்பீட்டுத் தொகையை முடிவு செய்தல்**

ஒவ்வொரு வணிகப் பிரிவின் கீழும் காப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்கும்போது காப்பீடு செய்பவருக்கு கருத்தில் கொள்ள வேண்டிய பின்வரும் கருத்துக்களை பற்றி ஆலோசனை வழங்க வேண்டும்:

a) **தனிநபர் விபத்துக் காப்பீடு**: ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ஒரு நிலையான தொகையாகவோ அல்லது காப்பீடு பெறுபவரின் வருமானத்தின் அடிப்படையிலும் இருக்கலாம். சில காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட இயலாமைக்கு காப்பீடு பெறுபவரின் மாதாந்திர வருமானத்தின் 60 மடங்கு அல்லது 100 மடங்குக்குச் சமமான நன்மையை கொடுக்கக்கூடும். அதிகபட்ச அளவின்மீது உயர்மட்ட வரம்பு அல்லது ‘முகடு’ இருக்கக்கூடும். ஒவ்வொரு நிறுவனத்துக்கும் இழப்பீட்டுத் தொகை வேறுபடக்கூடும். குழு தனிநபர் விபத்துக் காப்பீட்டு பாலிசிகளில், காப்பீடு பெறுபவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்துக் கொள்ளலாம் அல்லது காப்பீடு பெறும் நபர் பெறும் ஊதியங்களுடன் அது இணைக்கப்படலாம்.

b) **வாகனக் காப்பீடு**: மோட்டார் வாகனக் காப்பீட்டில், காப்பீடு பெறுபவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு [IDV] காப்பீட்டுத் தொகையாக இருக்கும். அது வாகனத்தின் மதிப்பு ஆகும், முந்தைய இந்திய

மோட்டார் காப்பீடு கட்டண பட்டியலில் (Motor Insurance Tariff) குறிப்பிடப்பட்டுள்ளபடி தேய்மான சதவீதத்துடன் வாகனத்தின் தற்போதைய உற்பத்தியின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலையை சரிசெய்வதன் மூலம் இது பெறப்படுகிறது. தயாரிப்பாளரின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலை உள்ளூர் தீர்வைகளை / வரிகளை உள்ளடக்கியதாகவும், பதிவு மற்றும் காப்பீட்டை உள்ளடக்காததாகவும் இருக்கும்.

IDV = (தயாரிப்பாளரின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலை - தேய்மானம்) + (பட்டியலிடப்பட்ட விற்பனை விலையில் உள்ளடங்காத உதிரிபாகங்கள் - தேய்மானம்) மற்றும் பதிவு மற்றும் காப்பீட்டுச் செலவுகளை விலக்குகிறது.

உபயோகத்தில் இல்லாத அல்லது 5 வருடங்களுக்கும் மேல் பழையதான வாகனங்களின் IDV, காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையேயான பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் கணக்கிடப்படுகின்றது. தேய்மானத்துக்கு பதிலாக, பழைய கார்களின் வாகனத்தின் நிலையை மதிப்பீட்டாளர்கள், கார் விற்பனையாளர்கள் போன்றவர் மதிப்பிடுவதன் மூலம் IDVயானது பெறப்படுகின்றது.

IDV என்பது ஒரு வாகனம் திருடப்பட்டாலோ அல்லது மொத்த இழப்பினால் பாதிக்கப்பட்டாலோ கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஆகும். காரின் சந்தை மதிப்புக்கு அருகிலுள்ள IDVஐப் பெறுமாறு அதிகம் பரிந்துரைக்கப்படுகின்றது. காப்பீட்டாளர்கள் 5% முதல் 10% வரம்பு வரையிலான IDVகுறைப்பினை காப்பீடு பெறுபவருக்கு வழங்குகின்றனர். குறைவான IDV என்றால் பிரீமியமும் குறைவு.

c) **தீ விபத்துக் காப்பீடு**: தீ விபத்துக் காப்பீட்டில் காப்பீட்டுத் தொகையானது கட்டிடங்கள் / தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களின் சந்தை மதிப்பின் அடிப்படையிலோ அல்லது மீளமர்த்துகை மதிப்பின் அடிப்படையிலோ நிர்ணயிக்கப்படுகின்றன. உள்ளே இருக்கும் பொருட்களுக்கு அவற்றின் சந்தை மதிப்பின் அடிப்படையில் காப்பீடு வழங்கப்படுகிறது, அதாவது அந்தப் பொருளின் விலையிலிருந்து தேய்மானத்தைக் கழித்து வரும்

தொகைக்கு சமமாகும். (மீளமர்த்துகை மதிப்பு அத்தியாயம் 28 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது - வணிகக் காப்பீடு)

d) **சரக்கிருப்புக் காப்பீடு**: சரக்கிருப்புகளைப் பொறுத்தவரை, காப்பீட்டுத் தொகை என்பது அவற்றின் சந்தை மதிப்பாகும். இழப்புக்குப் பிறகு சேதமுற்ற மூலப்பொருட்களை மாற்றுவதற்காக, அந்தச் சரக்குகளை சந்தையில் வாங்குவதற்கு ஆகும் செலவு காப்பீடு பெறுபவருக்கு ஈடாக வழங்கப்படும்.

e) **கப்பல் சரக்கு காப்பீடு**: இது ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்புடைய பாலிசி ஆகும், மேலும் காப்பீட்டுத் தொகை என்பது காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும் சமயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையாக இருக்கும். வழக்கமாக இது பொருட்களின் செலவுத் தொகை + கட்டணம், அதாவது CIF மதிப்பு ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும்.

f) **கப்பல் தளக் காப்பீடு**(**Marine hull**): கப்பல் தளக் காப்பீட்டில், காப்பீட்டுத் தொகை என்பது காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும் சமயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையாகும். இந்த மதிப்பு சான்றளிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் தளம் / கப்பலின் ஆய்வுக்குப் பிறகு நிர்ணயிக்கும் தொகையாக இருக்கும்.

g) **கடப்பாடுக் காப்பீடு**: கடப்பாடு பாலிசிகளைப் பொறுத்தவரை, காப்பீட்டுத் தொகை என்பது வெளிப்பாட்டின் அளவு, நிலப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்துறை அலகுகளின் கடப்பாடின் வெளிப்பாடு ஆகும். கூடுதலான சட்டக் கட்டணங்களும் செலவுகளும் ஈடுக்கோரல் இழப்பீட்டின் ஒரு பகுதியாக இருக்கும். காப்பீட்டுத் தொகையானது மேற்கண்ட அளவுருக்களின் அடிப்படையில் காப்பீடு பெறுபவரால் தீர்மானிக்கப்படுகின்றது.

**சுய-பரீட்சை** 2

ஒரு மருத்துவரிடம், அவருக்கு எதிரான கவனக்குறைவுக்கான ஈடுக்கோரல்களில் இருந்து அவரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்பீட்டுத் திட்டத்தைப் பரிந்துரைக்கவும்.

I. தனிநபர் விபத்துக் காப்பீடு

II. கடப்பாடுக் காப்பீடு
III. கப்பல் கட்டுமானக் காப்பீடு
IV. உடல்நலக் காப்பீடு

**சுருக்கம்**

a) அபாயங்களை வகைப்படுத்தி, அவை எந்த வகையின் கீழ் வருகின்றன என்பதைத் தீர்மானிக்கும் செயல்முறை விகித உருவாக்குதலுக்கு முக்கியம்.
b) ஏற்பளிப்பு என்பது ஒரு காப்பீட்டுக்கு வழங்கப்பட்ட அபாயம் ஏற்கத்தக்கதா என்பதையும், அவ்வாறு வழங்கினால், என்ன விலை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் காப்பீட்டின் காப்பை ஏற்கலாம் என்பதையும் தீர்மானிக்கும் செயல்முறை ஆகும்.
c) விகிதம் என்பது கொடுக்கப்பட்ட காப்பீட்டு அலகின் விலை ஆகும்.
d) விகிதம் உருவாக்குதலின் அடிப்படை நோக்கம் காப்பீட்டின் விலை தகுதியானதாகவும் நியாயமானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துதல் ஆகும்.
e) செலவினங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக குறிப்பிட்ட சதவீதங்களைச் சேர்ப்பதன் மூலம் 'முழு பிரீமியம்' பொருத்தமான முறையில் ஏற்றப்படுகின்றது அல்லது அதிகரிக்கப்படுகின்றது.
f) காப்பீட்டு மொழியில் ஆபத்து என்ற சொல் கொடுக்கப்பட்ட ஒரு ஆபத்தினால் விளையக்கூடிய இழப்புக்கான வாய்ப்பை உருவாக்கக்கூடிய அல்லது அழிக்கக்கூடிய நிலைமைகள் அல்லது அம்சங்கள் அல்லது சிறப்பியல்புகளைக் குறிப்பிடுகின்றது.
g) கழிவுகளை / உபரி உட்பிரிவுகளை வலியுறுத்துவதன் நோக்கம் சிறிய ஈடுக்கோரல்களை நீக்குதல் ஆகும்.
h) ஈடுக்கோராமை போனஸ் என்பது ஏற்பளிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வலிமையான உத்தி ஆகும், மேலும் இது விலை உருவாக்கல் முறைகளின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றது.
i) காப்பீட்டுத் தொகை என்பது பாலிசி நிபந்தனையின் கீழ் ஒரு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு அளிக்கக்கூடிய அதிகபட்சத் தொகை ஆகும்.

## முக்கியமான வார்த்தைகள்

a) ஏற்பளிப்பு
b) விகிதம் உருவாக்குதல்
c) உடல் சார் இன்னல்கள்
d) நெறிமுறைசார் இன்னல்கள்
e) இழப்பீடு
f) பிரீமியம் ஏற்றுதல்
g) உத்திரவாதங்கள்
h) கழிவுகள்
i) உபரிகள்

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் G-03

# தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடு

## அத்தியாய அறிமுகம்

முந்தைய அத்தியாயங்களில் பொதுக் காப்பீடு தொடர்பாக பல்வேறு கருத்தாக்கங்களையும் கோட்பாடுகளையும் கற்றுக்கொண்டோம். பொது காப்பீட்டுத் திட்டங்கள் பல்வேறு சந்தைகளில் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. சிலர் அவற்றைச் சொத்தாகவும், தற்செயல் விபத்தாகவும் மற்றும் கடப்பாடாகவும் வகைப்படுத்துகின்றனர். மற்ற இடங்களில், அவை தீ, கடல் சார்ந்தது, வாகன மற்றும் இதர என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த அத்தியாயத்தில், சில்லறை பொது காப்பீடு திட்டங்களான தனிநபர் விபத்து, உடல்நலம், பயணம், வீடு மற்றும் கடை உடைமையாளர் மற்றும் வாகனக்காப்பீடு போன்றவை விவாதிக்கப்படுகின்றன.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. சில்லறை காப்பீட்டு தயாரிப்புகள்
B. 'அனைத்து அபாயங்கள்' மற்றும் பெயரிடப்பட்ட இன்னல்களுக்கான' காப்பீட்டு பாலிசி
C. பேக்கேஜ் பாலிசிகள்
D. கடைக்காரர்களின் காப்பீடு
E. வீட்டு உடைமையாளரின் காப்பீடு
F. காப்பீட்டுத் தொகை மற்றும் பிரீமியம்
G. வாகனக் காப்பீடு

**இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:**

1. வீட்டுடைமையாளரின் காப்பீட்டுத் திட்டத்தை விவரிக்கமுடியும்
2. கடை காப்பீட்டினைத் தயாரிக்கமுடியும்
3. வாகன காப்பீட்டினைப் பற்றிப் பேச முடியும்

## A. சில்லறை காப்பீட்டு பாலிசிகள்

தனிநபர்களின் குறிப்பிட்ட நலன்களுக்காக வாங்கப்படும் சில காப்பீட்டு பாலிசிகள் உள்ளன. அத்தகைய காப்பீடுகளுக்கு சிறிய வணிக அல்லது தொழில் நலன்கள் இருப்பினும், இவை பொதுவாக தனிநபர்களுக்கே விற்கப்படுகின்றன. சில சந்தைகளில் இவை 'சிறு டிக்கெட்' பாலிசிகள் என்றோ அல்லது 'சில்லறை பாலிசிகள்' என்றோ அல்லது 'சில்லறைத் தயாரிப்புகள்' என்றோ அழைக்கப்படுகின்றன. வீடு, மோட்டார் கார்கள், இரு சக்கர வாகனங்கள், கடைகள் போன்ற சிறிய தொழில்கள் போன்ற காப்பீடுகள் இந்த வகையில் அடங்கும். இந்தக் காப்பீடுகள் பொதுவாக தனிநபர் காப்பீடுகளை விற்கும் நுகர்வோர் பிரிவிலிருந்து வருவதால், அதே முகவர்களால்/ விநியோக வழிகளால் விற்கப்படுகின்றன.

## B. 'அனைத்து அபாயங்கள்' மற்றும் 'பெயரிடப்பட்ட இன்னல்களுக்கான' காப்பீட்டு பாலிசி

பொது காப்பீட்டு பாலிசிகளை பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:

- ✓ பெயரிடப்பட்ட இன்னல் பாலிசிகள்
- ✓ அனைத்து அபாயங்கள் பாலிசிகள்

i. "அனைத்து அபாயங்கள்" என்றால் ஒப்பந்தத்தில் குறிப்பாக விலக்கப்படாத அனைத்து அபாயங்களுக்கும் தானாகவே காப்பளிக்கப்படுகின்றன.

ii. அனைத்து-அபாயங்கள் காப்பீடுதான் மிக ஒருங்கிணைந்த வகை காப்பீடாகும். எனவே, ஒப்பீட்டளவில் மற்றவகை பாலிசிகளைவிட அதிக விலையுடையதாக உள்ளது. இந்த வகை காப்பீடுகளின் விலை அதனால் கிடைக்கும் இழப்பீடு நன்மைகளை பெறும் சாத்தியக்கூறுடன் ஒப்பிட்டு கணக்கிடப்பட வேண்டும்.

iii. பெயரிடப்பட்ட இன்னல் பாலிசிகள் என்பதில் காப்பளிக்கப்பட்ட இன்னல்கள் குறிப்பாக பட்டியலிடப்பட்டு வரையறுக்கப்படுகின்றன.

## C. பேக்கேஜ் பாலிசிகள்

i. பேக்கேஜ் பாலிசிகள் ஒரே ஆவணத்தின்கீழ் ஒரு ஒருங்கிணைந்த காப்பினை வழங்குகின்றன.

ii. உதாரணமாக, வீட்டுடைமையாளரின் பாலிசி, கடைக்காரர்களின் காப்பீடு, அலுவலக பேக்கேஜ் பாலிசி போன்றவை. ஒரே பாலிசியின்கீழ் கட்டிடம், அதில் உள்ள பொருட்கள் போன்ற பல சொத்துக்களுக்கு காப்பு வழங்கப்படுகின்றன.

iii. அத்தகைய பாலிசிகள் சில குறிப்பிட்ட தனிப்பட்ட வகைகளை அல்லது கடப்பாட்டு காப்புகளையும் கொண்டிருக்கலாம்.

iv. பேக்கேஜ் காப்புகளில் அனைத்து பிரிவுகளுக்கும் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது பாலிசியின் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு குறிப்பிட்ட விதிகளையும் கொண்டிருக்கலாம்

## D. கடைக்காரர்களின் காப்பீடு

ஒரு கடை முதலாளி அதிக பணக் கையிருப்புகளைக் கொண்டு மீண்டும் தொழிலைத் தொடங்கும் ஒரு பெறுவணிக நிறுவனத்தைப் போன்றவரல்ல. ஒரு சிறிய விபத்து அவர் கடையைமூடச் செய்து அவருடைய குடும்பமே அழியக் காரணமாகிவிடலாம். திருப்பிச் செலுத்த வேண்டிய வங்கிக் கடன்களும் இருக்கலாம். கடை உரிமையாளரின் செயல்பாடுகளால் பொதுமக்களுக்கு தனிப்பட்ட காயம் அல்லது அவரது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எப்பொழுதும் உள்ளது, மேலும் ,நீதிமன்றம் நஷ்டஈடு செலுத்துவதற்கு கடை உரிமையாளர் பொறுப்பேற்க வேண்டும் என்று தண்டனை விதிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளும் ஒரு கடைக்காரரை அழித்துவிடும். எனவே, அவருடைய வாழ்வாதாரத்தை பாதுகாப்பது மிகவும் அவசியம்.

**வணிகரீதியிலான கடை / சில்லறை தொழில்களின் இத்தகைய பல அம்சங்களுக்குக் காப்பளிக்கும் நோக்கில் கடைக்காரர்களுக்கான காப்பீட்டு பாலிசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.** தொல்பொருள் கடை, முடிதிருத்துபவரின் கடை, பியூட்டி பார்லர், புத்தகக் கடை, பல்பொருள் அங்காடி, டிரை கிளீனர் கடை, பரிசுப் பொருள் மருந்துக் கடை,

எழுதுபொருள் கடை, பொம்மைக் கடை, துணி கடை போன்ற பலவகைக் கடைகளின் குறிப்பிட்ட நலன்களுக்குக் காப்பளிக்கும் விதத்தில் மாற்றி அமைக்கப்பட்ட பாலிசிக்களும் உண்டு. வணிகரீதியிலான கடை / சில்லறை தொழில்களின் இத்தகைய பல அம்சங்களுக்குக் காப்பளிக்கும் நோக்கத்துடன் கடைக்காரர்களுக்கான காப்பீட்டு பாலிசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் கடை, முடிதிருத்துபவரின் கடை, பியூட்டி பார்லர், புத்தகக் கடை, பல்பொருள் அங்காடி, துணி தேய்ப்பவர் கடை, பரிசுப் பொருள் கடை, எழுதுபொருள் கடை, பொம்மைக் கடை, செருப்புக் கடை போன்ற பலவகைக் கடைகளின் குறிப்பிட்ட நலன்களுக்குக் காப்பளிக்கும் விதத்தில் மாற்றி அமைக்கப்பட்ட பாலிசிக்களும் உண்டு.

### 1. கடைக்காரர்களுக்கான காப்பீடு எவற்றைக் காப்பீடு செய்கிறது?

சில்லறை வர்த்தகத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு காப்பளிக்கும் வகையில் பாலிசி தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்படலாம். கடையின் வடிவமைப்பு மற்றும் அவற்றில் உள்ளவற்றை தீ, பூகம்பம், வெள்ளம் அல்லது கெட்ட எண்ணத்தில் சேதப்படுத்துதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றுக்கு எதிராக பொதுவாகக் காப்பளிக்கிறது. தொழில் குறுக்கீட்டு பாதுகாப்பினையும்கூட கடை காப்பீடு உள்ளடக்கலாம். இது எதிர்பாராத இன்னல் காரணமாக செயல்பாட்டின் போது ஏற்படும் வருமான இழப்பு அல்லது கூடுதல் செலவினங்களை ஈடுசெய்யும். தனது பல்வேறு செயல்பாடுகளை கருத்தில் கொண்டு காப்பீடு பெறுபவர் காப்பீடுகளை தேர்ந்தெடுக்கலாம்.

காப்பீடு பெறுபவர் தேர்வு செய்யக்கூடிய கூடுதல் காப்புகள் ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும் மாறுபடலாம். இவற்றை பொது காப்பீட்டு நிறுவனங்களின் குறிப்பிட்ட வலைதளங்களில் சரிபார்த்துக் கொள்ளலாம். அவை:

i. **கொள்ளையும் உடைத்து உள்நுழைவதும்:** உடைத்து உள் நுழைவது, அலுவலகப் பொருட்களின் திருட்டு போன்றவற்றுக்கான காப்பு

ii. **இயந்திரப் பழுது:** மின் / இயந்திர உபகரணங்கள் பழுதுக்கான காப்பு

iii. **மின்னணு கருவியும் சாதனங்களும்:**

- ✓ மின்னணு சாதனங்களுக்கான அனைத்து-அபாய காப்பினை அளிக்கிறது
- ✓ மின்னணு நிறுவல் இழப்புக்கான காப்பு

iv. **பணக்காப்பீடு:** கீழ்க்காணும் சூழ்நிலைகளில் ஏற்படும் விபத்தினால் பண இழப்பு ஏற்படுவதற்கு எதிராக காப்பினை அளிக்கிறது:

- ✓ தொழில் வளாகத்திலிருந்து வங்கிக்கும் வங்கியிலிருந்து தொழில் வளாகத்திற்கும் பணத்தினை எடுத்துச் செல்லும்போது
- ✓ தொழில் வளாகத்தில் ஒரு பெட்டகத்தில் இருக்கும்போது
- ✓ தொழில் வளாகத்தில் ஒரு கல்லாப் பெட்டியில் (பெட்டி / இழுவறை / கவுன்டர்) இருக்கும்போது

v. **பயணப் பொதி** (Baggage): அலுவல் சார்ந்த பயணத்தின்போது பயணப் பொதி காணாமல் போனால் இழப்பீடை வழங்குகிறது

vi. பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி மற்றும் சேனிட்டரி ஃபிட்டிங் சார்ந்த காப்பீடுகள் பின்வரும் தற்செயல் இழப்புகளுக்கு காப்பளிக்கின்றன:

- ✓ பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி
- ✓ சேனிட்டரி ஃபிட்டிங்குகள்
- ✓ நியான் போர்டு / ஒளிரும் போர்டு / ஹோர்டிங்

vii. தனிநபர் விபத்து

viii. நம்பிக்கைத் துரோகம் / தொழிலாளர்களின் நேர்மையின்மை: தொழிலாளர்களின் நேர்மையின்மையின் காரணமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்குக் காப்பளிக்கிறது.

ix. சட்டப்பூர்வ கடப்பாடு:

- ✓ பணி செய்யும்போதும் மற்றும் அதன் காரணமாகவும் ஏற்படும் விபத்திற்கான இழுப்பீடு

- ✓ மூன்றாம் தரப்புகளுக்கான சட்டப்பூர்வ கடப்பாட்டுக்கு காப்பளிக்கிறது.

தீ / கொள்ளை / பேக்கேஜ் / பிளேட் கண்ணாடி / நம்பகத்தன்மை உத்தரவாதம் / பணியாளர் இழப்பீடு மற்றும் பொதுக் கடப்பாட்டு பாலிசிகளைத் (அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது) தனியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

தீவிரவாத்திற்கான காப்பும்கூட நீட்டிக்கப்படலாம். விலக்குகள் பொதுவாக வீட்டுடைமையாளரின் காப்பீட்டை போன்றே இருக்கும்.

## E. வீட்டு உடைமையாளரின் காப்பீடு

வீட்டு உடைமையாளரின் காப்பீட்டு பாலிசியின் கீழ் காப்புகள் பரந்த அளவில் இருக்கமுடியும். இது பொதுவாக ஒரு வீட்டு உடைமையாளரின் அனைத்து தேவைகளின் தொகுப்பாக இருக்கிறது.

பொதுவாக காப்பு வழங்கப்படும் இழப்புகளில் அடங்குவன, தீ, மின்னல், வெடிப்பு மற்றும் விமானம் விழுதல் / பாதிப்புச் சேதம் (FLEXA என பொதுவாக அறியப்படுகிறது); புயல், சூறாவளி, வெள்ளம் மற்றும் நீருக்குள் மூழ்குதல் (STFI என பொதுவாக அறியப்படுகிறது); மற்றும் கொள்ளை. நிறுவனத்திற்கு நிறுவனம் மற்றும் வெவ்வேறு பாலிசிகளுக்கு இடையிலும் காப்பு மாறுபடலாம். கட்டிட அமைப்பினைத் தவிர, அதன் உடைமைகளை, கொள்ளை, வீட்டுடைப்பு, திருட்டு ஆகியவற்றிலிருந்து காப்பளிக்கிறது. ஆபரணங்கள் வீட்டுடைமையாளரின் காப்பீடுகளின்கீழ் ஆபரணங்களை அணிந்திருக்கும்போதோ அல்லது பாதுகாப்பாக பூட்டி வைத்திருக்கும்போதோ காப்பளிக்க முடியும். வீட்டு மற்றும் மின்னணு சாதனங்களின் மின் மற்றும் இயந்திரக் கோளாறுகளுக்கும் காப்பு வழங்கப்படுகிறது.

இதேபோல், வீட்டு உடைமையாளரின் காப்பீட்டுத் தொகுப்பானது, பயணத்தின் போது தொலைந்து போன தனிப்பட்ட சாமான்கள், அல்லது அண்டை வீட்டார்/ வருகை தருபவர்களுக்கான கடன்பாடுகள் ஆகியவை வீட்டுக் காப்பீட்டுத் தொகுப்பின் ஒரு பகுதியாக இருக்கலாம். சில காப்பீட்டாளர்கள் பெடல் சைக்கிள் தனிநபர் விபத்து மற்றும் பணியாளர்களின் இழப்பீடு ஆகியவற்றிற்கும் காப்பளிக்கிறார்கள்.

ஐஆர்டிஏஐ ஆனது 10 ஆண்டுகள் வரையிலான பாரத் க்ரிஹா ரக்ஷா பாலிசி எனும் நிலையான தயாரிப்பை அறிமுகப்படுத்தி அதை 1 ஏப்ரல், 2021 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது, இது தீ மற்றும் அதனுடன் தொடர்புடைய இன்னல்களுக்கான காப்பீட்டு வணிகத்தை செய்யும் மற்றும் அனைத்து பொது காப்பீட்டாளர்களாலும் கட்டாயமாக வழங்கப்படும்.

**பாரத் க்ரிஹ ரக்ஷா (வீடு கட்டுதல் மற்றும் வீட்டுப் பொருட்களுக்கானது)** பாலிசியானது, தீ, இயற்கைப் பேரழிவு, காடு, காட்டுப்பகுதி மற்றும் புதரில் தீப்பிடிப்பது, எந்தவிதமான பாதிப்பினாலும் ஏற்படும் சேதம், கலவரம், வேலைநிறுத்தம், தீங்கிழைக்கும் சேதங்கள், தீவிரவாத செயல்கள், வெடிப்பு மற்றும் தண்ணீர் தொட்டிகள், கருவிகள் மற்றும் குழாய்கள் வெடித்து நிரம்பி வழிவது, தானியங்கி தெளிப்பான் நிறுவல்களில் இருந்து கசிவு மற்றும் திருட்டுக்கு -மேற்கூறிய நிகழ்வுகள் ஏதேனும் நடந்த 7 நாட்களுக்குள் -எதிராக காப்பு வழங்குகிறது. இந்த பாலிசி 1 முதல் 10 ஆண்டுகள் வரை அமலில் இருக்கலாம்.

வீட்டுக் கட்டிடத்துடன் கூடுதலாக, பாலிசியானது, கட்டிடத்தின் காப்பீட்டுத் தொகையில் 20% அளவிற்கு, அதில் அதிகபட்சமாக ரூ.10 லட்ச வரம்பிற்கு உட்பட்டு வீட்டு பொருட்களுக்கும் தானாகவே காப்பளிக்கிறது (விவரங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லாமல்) விவரங்களை அறிவிப்பதன் மூலம் பொது பொருட்களுக்கான அதிக காப்பீட்டுத் தொகையையும் ஒருவர் தேர்வு செய்யலாம்.

பாலிசி இரண்டு விருப்பமான காப்புகளையும் வழங்குகிறது, அதாவது (i) நகைகள் மற்றும் அருங்கலைப் பொருள் போன்ற மதிப்புமிக்க உள்ளடக்கங்களுக்கான காப்பீடு; மற்றும் (ii) பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட இன்னல் காரணமாக காப்பீட்டாளர் மற்றும் மனைவிக்கு ஏற்படக்கூடிய தனிநபர் விபத்து காப்பீடு.

பாலிசியானது, குறைகாப்பீட்டை முழுமையாக தள்ளுபடி செய்கிறது. அதாவது, பாலிசிதாரரால் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை, சம்பந்தப்பட்ட சொத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதை விடக்

குறைவாக இருந்தாலும், பாலிசிதாரரின் ஈடுக்கோரல் விகிதாச்சாரப்படி தீர்க்கப்படாது, மற்றும் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை வரை வழங்கப்படும்.

## F. காப்பீடு தொகையும் பிரீமியம் தொகையும்

சொத்துக்களின் மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ள கணக்குப் புத்தகங்களை தொழிற்சாலைகளும் அலுவலகங்களும் பராமரிப்பதால், அங்கே காப்பீட்டுத் தொகையை முடிவுசெய்வது கடினமாக இருக்காது. கடை மற்றும் வீடு ஆகியவற்றைப் பொறுத்தவரை இது எப்போதும் இருக்க வாய்ப்பில்லை.

வீட்டுடைமையாளரின் காப்பீட்டின்கீழ் ஏற்கனவே கூறியதுபோல், பொதுவாக, காப்பீடுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. அவை: சந்தை மதிப்பு மற்றும் மறுநியமன / மீளமைப்பு மதிப்பு.

பணம், பயணப் பொதி, தனிநபர் விபத்து போன்ற கூடுதல் காப்புகளுக்கு காப்பீடு மதிப்பு மற்றும் வாங்கிய காப்புகளின் ஆகியவற்றின் அடிப்படையில் பிரீமியம் இருக்கும்.

**காப்பீடுத் தொகையை ஒருவர் எவ்வாறு நிச்சயிக்கிறார்?**

i. பொதுவாக, காப்பீடுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. சந்தை மதிப்பு (MV) என்பது ஒருவகை. மற்றொன்று மறுநியமன மதிப்பு (RIV). சந்தை மதிப்பைப் பொறுத்தவரை, இழப்பு ஏற்பட்டால், அச்சொத்து எவ்வளவு ஆண்டுகள் பழையது என்பதை பொறுத்து சொத்தின்மீது தேய்மானம் விதிக்கப்படுகிறது. இம்முறையில், சொத்தினை மாற்றி அமைக்க தேவைப்படும் போதுமான தொகை காப்பீடு பெற்றவருக்கு அளிக்கப்படுவதில்லை.

ii. RIV முறையில், காப்பீடுத் தொகையின் உச்சவரம்பின் அளவிற்கு உட்பட்டு காப்பீட்டு நிறுவனம் அப்பொருளை மாற்றி அமைப்பதற்கான தொகையை அளிக்கிறது. இம்முறையில், எந்த ஒரு தேய்மானத் தொகையும் விதிக்கப்படுவதில்லை. இதற்கு உரிய ஒரு நிபந்தனையாக, அந்த ஈடுக்கோரலைப் பெற வேண்டுமானால் அந்த சேதமுற்ற சொத்து சரிசெய்யப்பட / மாற்றப்பட வேண்டும். RIV

முறை நிலையான சொத்துக்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது என்பதையும் சரக்கு இருப்புகள் மற்றும் செயல்முறையில் உள்ள சரக்கு இருப்புகள் போன்ற பிற சொத்துக்களுக்குப் பொருந்தாது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான பாலிசிகள் வீட்டின் மறுகட்டமைப்பு மதிப்பிற்காக (சந்தை மதிப்பிற்கு அல்ல) அதன் அமைப்பினை காப்பீடு செய்கின்றன. ஒரு வீடு பழுதானால் அந்த வீட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான செலவே மறுகட்டமைப்பு மதிப்பாகும். ஆனால், சந்தை மதிப்பு என்பது சொத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது, தேய்மானம் போன்ற காரணிகளைச் சார்ந்தது.

காப்பீட்டுத் தொகை பொதுவாக காப்பீடு பெற்றவரின் வீட்டின் கட்டிடப் பகுதியை ஒரு சதுர அடிக்கு கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவை கொண்டு பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. வீட்டின் உடைமைகள் - தட்டுமுட்டு சாமான்கள், நீடித்திருப்பவைகள், துணிகள், பாத்திரங்கள் போன்றவை - சந்தை மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. அதாவது, தேய்மானத்திற்குப் பின்னர் அதை ஒத்த பொருட்களின் தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

காப்பீடு மதிப்பு மற்றும் வாங்கிய காப்பளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பிரீமியம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 1

பேக்கேஜ் பாலிசியை பொறுத்தவரை கீழே உள்ள கூற்றுகளில் எது சரியானது?

I. பேக்கேஜ் பாலிசி ஒரு ஆவணத்தின் கீழ் காப்புகளின் கலவையை வழங்குகிறது
II. பேக்கேஜ் பாலிசி கட்டிடங்கள் போன்ற சொத்துக்களை மட்டுமே உள்ளடக்கும்
III. பெயரிடப்பட்ட இன்னல் பாலிசி அல்லது பேக்கேஜ் பாலிசி அதே விலையில் வருகிறது.
IV. பெயரிடப்பட்ட அபாய பாலிசிகளை மட்டுமே வாங்க முடியும் மற்றும் பேக்கேஜ் பாலிசிகள் கிடைக்காது.

## வரையறை

### சில முக்கிய வரையறைகள்

a) **கொள்ளை** **(Burglary)** என்றால் எதிர்பார்த்திராத நேரத்தில் அனுமதியின்றி காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் அத்துமீறி, கண்டறியத்தக்க வழியில் அங்கிருக்கும் பொருட்களைத் திருடிச் செல்லும் நோக்கில் நுழைந்து எடுத்துச் செல்வது

b) **வீடுடைப்பு** **(Housebreaking)** என்பது கெடுதல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அத்துமீறி உடைத்து ஒரு வீட்டிற்குள் நுழைவது.

c) **திருட்டு** **(Robbery)** என்பது காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் காப்பீடு பெற்றவரையோ அல்லது அவருடைய தொழிலாளர்களையோ மீறி பலவந்தமாக நுழைந்து அங்குள்ள உடைமைகளை / எடுத்துச் செல்வது.

d) **பெட்டகம்** **(Safe)** என்பது காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் மதிப்புமிக்க பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அதேநேரம் மற்றவர்கள் அணுக கட்டுப்பாடு அதிகம் உள்ள பலமான அறையாகும்.

e) **திருட்டு** **(Theft)** என்பது ஒருவர் மற்றொருவரின் அனுமதியின்றி வேண்டுமென்றே திருட்டுத்தனமாக தன்னுடைய பயன்பாட்டுக்காகவோ அல்லது விற்பதற்காகவோ எடுத்துச் செல்லும் குற்றத்தைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். இது ஆங்கிலத்தில் 'larceny' என்பதற்கு இணையான சொல்லாகும்.

**சுய-பரீட்சை** 2

கடைக்காரருக்கான பாலிசியின்கீழ் 'பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி மற்றும் சேனிட்டரி ஃபிட்டிங்குகள்' என்ற கூடுதல் காப்பினை காப்பீடு பெறுபவர் தேர்வு செய்யலாம். பின்வருவதில் எந்த தவறுதலாக நடந்த இழப்பு அல்லது சேதத்திற்கு இது காப்பளிக்கும்?

I. பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி
II. சேனிட்டரி ஃபிட்டிங்குகள்
III. நியான் போர்டுகள்
IV. மேலுள்ள அனைத்தும்

## G. வாகன காப்பீடு

இந்த சூழ்நிலையை கருதுங்கள்: ரேவதி தனது சேமிப்பை முழுவதுமாகப் பயன்படுத்தி ஒரு புதிய கார் வாங்கி ஓட்டிப் பார்ப்பதற்காக எடுத்துச் செல்கிறார். எங்கிருந்தோ ஒரு நாய் வழியில் திடீரெனப் பாய்கிறது. அதன்மேல் மோதிவிடாமல் இருக்க ரேவதி காரை வேகமாக வளைக்கிறார், பிரேக்கை போட்டு சாலைத் தடுப்பின்மேல் ஏறி மற்றொரு காரின்மீது மோதி அதில் இருந்தவரைக் காயப்படுத்துகிறார். எனவே, ஒரே ஒரு நிகழ்வின் விளைவாக, ரேவதியின் கார், பொதுச் சொத்து மற்றும் மற்றொரு கார் மற்றும் மற்றொரு மனிதருக்குக் காயம் என பல சேதங்கள் ஏற்படுகின்றன.

இந்தக் காட்சியில், ரேவதியிடம் கார் காப்பீடு இல்லாவிடில், காரை வாங்குவதற்கு ஆன செலவைவிட ரேவதி அதிகமாகச் செலவு செய்ய வேண்டியது இருக்கலாம்.

- ✓ ரேவதி அல்லது அதே மாதிரி உள்ளவர்களிடம் அந்த அளவு பணம் இருக்கிறதா?
- ✓ ரேவதியின் செயல்களுக்காக அடுத்த தரப்பின் காப்பீடு தொகையளிக்க வேண்டுமா?
- ✓ அவர்களிடம் காப்பீடு இல்லாவிட்டால் என்ன நடக்கும்?

இதன் காரணமாகத்தான் கார் காப்பீடு வைத்திருப்பது கட்டாயமானது என நாட்டின் சட்டங்கள் கூறுகின்றன. ஒரு வாகன காப்பீடு இந்த நிகழ்வுகளைத் தடுக்காவிட்டாலும், உங்களுக்கு நிதிப் பாதுகாப்புக்கான போர்வையை வழங்குகிறது.

ஒரு விபத்தைத் தவிர, கார் திருடப்பட்டுவிடலாம், விபத்தில் சேதமடையலாம் அல்லது தீயில் எரிந்துபோகலாம். நீங்கள் பொருளாதார ரீதியாக கஷ்டப்படுவீர்கள்.

வாகனக் காப்பீடு வாகன உரிமையாளரால் (அதாவது, இந்தியாவில் உள்ள மாவட்ட போக்குவரத்து ஆணையத்தில் (Regional Transport Authority in India) வாகனம் யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது), அவர் பெயரில் எடுக்கப்பட வேண்டும்.

## முக்கியமானவை

### கட்டாயமான மூன்றாம் தரப்புக் காப்பீடு

வாகன வாகனச் சட்டம், 1988-இன்படி, பொதுச் சாலையில் ஓடும் ஒவ்வொரு வாகனத்தின் உரிமையாளரும், தற்செயலான விபத்து காரணமான மரணம், உடற் காயம் அல்லது சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கு மூன்றாம் தரப்பினருக்கு இழப்பீடாக செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக எழும் பொறுப்பை நிறைவேற்ற, கட்டாயமாக காப்பீட்டு பாலிசியை எடுத்திருக்க வேண்டும். அத்தகைய காப்பீட்டிற்கான சாட்சியாக அந்த வாகனத்தில் காப்பீட்டின் சான்றிதழ் இருக்க வேண்டும்.

### 1. வாகன காப்பீட்டின் காப்பு

நாட்டில் மிக அதிக அளவில் வாகனங்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் சாலைக்கு வரும் புதிய வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகம். அவற்றுள் பல மிக விலை உயர்ந்தவை. இந்தியாவில் வாகனங்களை மக்கள் அழிப்பதில்லை, மாறாக, வாகனங்கள் கை மாறுகின்றன எனச் சொல்வதுண்டு. அதாவது, பழைய வாகனங்கள் தொடர்ந்து சாலையில் ஓடிக்கொண்டிருக்கையில் புதிய வாகனங்களும் சேர்கின்றன. சாலையின் பரப்பு (ஓட்டுவதற்கான இடம்) வாகனங்களின் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்ப வளர்வதில்லை. சாலையில் நடக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. காவல்துறை மற்றும் மருத்துவமனைகளின் புள்ளி விவரப்படி நாட்டில் சாலை விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நீதி மன்றங்களால் விபத்திற்கு உள்ளானவர்களுக்கு அளிக்கும்படி கூறப்படும் தொகையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. வாகன பழுதுநீக்கத்திற்கான செலவுத் தொகையும்கூட அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. **இவை அனைத்தும் இந்தியாவில் வாகன காப்பீட்டின் முக்கியத்துவத்தை நிரூபிக்கின்றன.**

விபத்தினாலும் வேறு சில காரணங்களாலும் வாகனங்களுக்கு ஏற்படும் சேதம் மற்றும் இழப்பிற்கு வாகன காப்பீடுகள் காப்பளிக்கின்றன. மேலும், வாகன உரிமையாளரின் வாகனத்தால் ஏற்பட்ட விபத்திற்கு

உள்ளானவர்களுக்கு வாகன உரிமையாளரால் அளிக்க வேண்டிவரும் இழப்பீட்டினை அளிக்கும் சட்டப்பூர்வ கடப்பாட்டிற்கும் காப்பளிக்கிறது.

அரசாங்க ஆணை இருந்தபோதிலும், நாட்டில் உள்ள அனைத்து வாகனங்களும் காப்பீடு செய்யப்படவில்லை.

**பொதுச் சாலையில் ஓடும் பின்வரும் அனைத்து வாகன வகைகளுக்கும் வாகன காப்பீடு அளிக்கிறது:**

- ✓ இரு சக்கர வாகனங்கள்
- ✓ தனியார் கார்கள்
- ✓ அனைத்து வகையான வணிக ரீதியிலான வாகனங்கள்: சுமையுந்துகள் (**Goods carrying**) மற்றும் பயணி வாகனங்கள்
- ✓ இதர வகை வாகனங்கள் எ.கா. கிரேன்கள்
- ✓ மோட்டார் வர்த்தகம் (ஷோரூம்கள் மற்றும் கேரேஜ்களில் உள்ள வாகனங்கள்)

**'மூன்றாம் தரப்பு காப்பீடு'**

மற்றொரு தரப்பின் சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதற்காக வாங்கப்படும் காப்பீட்டு பாலிசி தான் மூன்றாம் தரப்பு காப்பீடு. காப்பீடு பெறுபவரால் (முதல் தரப்பு) ஒரு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து (இரண்டாம் தரப்பு) காப்பீடு பெற்றவரின் நடவடிக்கையின் விளைவாக ஏற்பட்ட கடப்பாட்டிற்காக மற்றொரு தரப்பின் (மூன்றாம் தரப்பு) ஈடுக்கோரலுக்கு எதிராக பாதுகாப்பினைப் பெறுவதற்காகப் வாங்ப்படும் காப்பீடாகும்.

மூன்றாம் தரப்பு காப்பீடு 'கடப்பாட்டு காப்பீடு' என்றும் அழைக்கப்படுகிறது.

**சந்தையில் பிரபலமாக உள்ள இரு முக்கிய வகைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:**

**செயல் [கடப்பாடு] மட்டும் பாலிசி:** மோட்டார் வாகனச் சட்டத்தின்படி [Motor Vehicles Act] பொது இடத்தில் ஓடும் எந்த ஒரு வாகனத்திற்கும் மூன்றாம் தரப்பிற்கான கடப்பாடு காப்பீடு கட்டாயமானது.

இந்த பாலிசி பின்வரும் இழப்பீட்டினை அளிக்க வேண்டிய வாகன உரிமையாளரின் கடப்பாட்டிற்கு மட்டும் காப்பளிக்கிறது:

- ✓ மூன்றாம் தரப்பின் உடல் காயம் மற்றும் மரணம்
- ✓ மூன்றாம் தரப்பின் சொத்துக்கு ஏற்பட்ட சேதம்

மரணம் அல்லது காயம் மற்றும் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகைக்கு வரையறை ஏதும் இல்லாதவாறு கடப்பாடு காப்பிடப்படுகிறது.

ஒரு வாகன விபத்தினால் மூன்றாம் தரப்புக்கு ஏற்படும் மரணம் அல்லது காயத்திற்கான இழப்பீட்டுக் கோரிக்கைகளை குற்றம் சாட்டுபவர் மோட்டார் விபத்து கிளெய்ம் டிரிபியுனலில் (Motor Accident Claim Tribunal -MACT) சமர்ப்பிக்க வேண்டும்.

**'கட்டாய தனிநபர் விபத்து (CPI) காப்பீடு'**

ஜனவரி 1, 2019 முதல் உரிமையாளர்-ஓட்டுனர்களுக்கு தனித்தனியாக கட்டாயத் தனிநபர் விபத்துக் காப்பீட்டை வழங்க ஐஆர்டிஏஐ அனுமதித்துள்ளது. வாகனத்தை ஓட்டும் போது, காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறுவது/ இறங்குவது அல்லது இணை ஓட்டுனராக அதில் பயணம் செய்வது உட்பட, இந்த காப்பு உரிமையாளர்-ஓட்டுனருக்கு வழங்கப்படும். இருப்பினும், பாலிசிதாரர் கடன்பாடை மட்டும் பாலிசி அல்லது பேக்கேஜ் பாலிசியின் ஒரு பகுதியாக தேர்ந்தெடுத்து CPA காப்பை தேர்வுசெய்யலாம். பாலிசிதாரர் தனித்த CPA பாலிசியை எடுக்கத் தேர்வு செய்தால், பேக்கேஜின் ஒரு பகுதியாக வழங்கப்படும் CPA காப்பு அல்லது பேக்கேஜ் பாலிசி நீக்கப்படும்.

**பேக்கேஜ் பாலிசி / ஒருங்கிணைந்த பாலிசி: (சொந்த சேதம் + மூன்றாம் தரப்பு கடப்பாடு)**

மேலுள்ளதோட சேர்த்து, குறிப்பிட்ட இன்னல்களினால் காப்பிடப்பட்ட வாகனத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதமும் (மோட்டார் வாகனங்களுக்கான சொந்த சேதம் என அறியப்படுகிறது) அறிவிக்கப்பட்ட மதிப்பிற்கும் (ஐடிவி IDV என அழைக்கப்படுகிறது) பாலிசியில் உள்ள மற்ற விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு காப்பளிக்கப்படும். அவற்றுள் சில இன்னல்களாவன: தீ, திருட்டு,

கலவரம் மற்றும் வேலைநிறுத்தம், பூகம்பம், வெள்ளம், விபத்து போன்றவை.

சில காப்பீட்டாளர்கள் விபத்து நடந்த இடத்திலிருந்து பணிமணைக்குக் (workshop) கொண்டு வரும் செலவையும் அளிப்பார்கள். செயல் (கடப்பாடு) மட்டும் பாலிசியின் கீழ் அளிக்கப்படும் கடடாய காப்பீடோடு கூடுதலாக தீ மற்றும் / அல்லது திருட்டிற்கு மட்டும் காப்பளிக்கும் கட்டுப்படுத்தப்பட்ட காப்பும் உள்ளன.

வாகனத்தில் பொறுத்தப்பட்டுள்ள இணைப்புகளின் இழப்பு அல்லது சேதத்திற்கும் பாலிசி காப்பளிக்கலாம். மேலும், பயணிகளுக்கும் ஊதியம் பெறும் ஓட்டுனருக்கான தனியார் கார் பாலிசிகளின்கீழ் தனிநபர் விபத்துக் காப்பு; வணிக ரீதியிலான வாகனங்களில் பயணிக்கும் தொழிலாளர்கள் மற்றும் கட்டணமில்லாது பயணிக்கும் பயணிகளுக்கான சட்டப்பூர்வ கடப்பாடு ஆகியவற்றுக்கும் காப்பளிக்கலாம். ஒருவேளை வாகனம் பழுதாகி விட்டால் அவசரகால சேவையையோ அல்லது மாற்று காரை கட்டணமின்றிப் பயன்படுத்தவோ காப்பீட்டாளர்கள் இலவசமாக அனுமதிக்கிறார்கள்.

### 2. விலக்குகள்

பாலிசிகளின்கீழ் உள்ள முக்கியமான விலக்குகளாவன: தேய்வும் நைவும், பழுதுகள், விளைவு இழப்பு, மற்றும் செல்லாத ஓட்டுனர் உரிமத்துடனோ அல்லது மது அருந்திவிட்டு. வாகனம் ஓட்டியதால் ஏற்படும் இழப்பு. 'பயன்படுத்துவதற்கான வரம்புகள்' என்பதற்கு உட்பட்டு வாகனத்தைப் பயன்படுத்தாது இருப்பதற்கு (எ.கா. தனியார் வாகனத்தை ஒரு வாடகை வாகனமாகப் பயன்படுத்துவது) காப்பளிக்கப்படாது

### 3. காப்பீடுத் தொகையும் பிரீமியத் தொகையும்

ஒரு வாகன பாலிசியில் ஒரு வாகனத்தின் காப்பீட்டுத் தொகை காப்பீடு பெற்றவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு (ஐடி -IDV) என அறியப்படுகிறது.

வாகனம் திருடப்பட்டாலோ அல்லது ஒரு விபத்தில் பழுதை சரி செய்ய முடியாத அளவிற்கு மொத்தமாகச் சேதமுற்றிருந்தாலோ, ஐடிவி-யின் அடிப்படையில் ஈடுக்கோரலுக்கான தொகை முடிவு செய்யப்படும்.

காப்பீடு பெற்றவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு, கன திறன், புவியியல் வட்டாரம், வாகனத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது போன்ற காரணிகளைப் பொறுத்து மதிப்பீடு / பிரீமியம் கணக்கிடப்படுகிறது.

**சுய-பரீட்சை** 3

வாகன காப்பீடு யாருடைய பெயரில் எடுக்கப்பட வேண்டும்?

I. வட்டார போக்குவரத்து அதிகாரியிடம் பதிவுசெய்யப்பட்ட வாகன உரிமையாளரின் பெயரில்
II. உரிமையாளர் இல்லாத வேறு ஒருவர் வாகனம் ஓட்டுவாரானால், வாகனம் ஓட்டுநரின் பெயரில் வட்டார போக்குவரத்து அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு எடுக்கலாம்.
III. வாகன உரிமையாளர் உட்பட வாகன உரிமையாளரின் எந்த ஒரு குடும்ப உறுப்பினரின் பெயரிலும் வட்டார போக்குவரத்து அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு எடுக்கலாம்.
IV. உரிமையாளர் இல்லாத வேறு ஒருவர் வாகனம் ஓட்டுவாரானால், முதன்மை பாலிசி வாகன உரிமையாளரின் பெயரிலும் கூடுதல் காப்பு வாகனத்தை ஒட்டக்கூடிய எல்லாருடைய பெயரிலும் கூடுதல் பாலிசிகள் வாங்கப்பட வேண்டும்.

---

**சுருக்கம்**

a) ஒரு வீட்டுடைமையாளரின் காப்பீட்டு பாலிசி, அந்த காப்பீடு பெற்றவரின் சொத்தின்மீது ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இன்னல்கள் அல்லது நிகழ்வுகளினால் ஏற்படும் இழப்புகளுக்கு மட்டுமே காப்பளிக்கிறது. காப்பிடப்படும் இன்னல்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்கும்.

b) வீட்டுடைமையாளரின் காப்பீடுகள் கட்டமைப்பிற்கும் அதன் உடைமைகளுக்கும் தீ, கலவரங்கள், குழாய்களின் வெடிப்பு, பூகம்பம் போன்றவற்றுக்கு எதிராக காப்பளிக்கின்றன. கட்டட அமைப்பினைத் தவிர, அதன் உடைமைகளுக்கு, கொள்ளை, வீட்டுடைப்பு, திருட்டு ஆகியவற்றிலிருந்தும் காப்பளிக்கிறது.

c) பேக்கேஜ் காப்புகள் ஒரே ஆவணத்தின்கீழ் ஒருங்கிணைந்த காப்பினை வழங்குகின்றன.

d) வீட்டுடைமையாளரின் காப்பீட்டு பாலிசிக்கு பொதுவாக, காப்பீட்டுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. அவை: சந்தை மதிப்பு (MV) என்பது ஒருவகை. மற்றொன்று மறுநியமன மதிப்பு (RIV)

e) கடைக்காரரின் காப்பீடு கடையின் வடிவமைப்பு மற்றும் அவற்றில் உள்ளவற்றை தீ, பூகம்பம், வெள்ளம் அல்லது கெட்ட எண்ணத்தில் சேதப்படுத்துதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றுக்கு எதிராகப் பொதுவாகக் காப்பளிக்கிறது. தொழில் குறுக்கீட்டு பாதுகாப்பினையும்கூட கடை காப்பீடு உள்ளடக்கலாம்.

f) விபத்தினாலும் வேறு சில காரணங்களாலும் வாகனங்களுக்கு ஏற்படும் சேதம் மற்றும் இழப்பிற்கு வாகன காப்பீடுகள் காப்பளிக்கின்றன. மேலும், வாகன உரிமையாளரின் வாகனத்தால் ஏற்பட்ட விபத்து மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாகன உரிமையாளரால் அளிக்க வேண்டிய இழப்பீட்டினை அளிக்கும் சட்டப்பூர்வ கடப்பாட்டிற்கும் காப்பளிக்கிறது. காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறுவது/ இறங்குவது அல்லது இணை ஓட்டுனராக அதில் பயணம் செய்வது உட்பட, இந்த தனிநபர் விபத்து காப்பு உரிமையாளர்-ஓட்டுனருக்கு வழங்கப்படும்..

## முக்கியமான வார்த்தைகள்

a) வீட்டுடைமையாளரின் காப்பீடு

b) கடைக்காரர்களின் காப்பீடு

c) வாகன காப்பீடு

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் I.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் G-04

# வர்த்தகக் காப்பீடு

## அத்தியாய அறிமுகம்

முந்தைய அத்தியாயத்தில் தனிநபர்களும் குடும்பங்களும் சந்திக்கும் அபாயங்களுக்கான பல்வேறு வகையான காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிப் பார்த்தோம். காப்பீடுக்கான பிற தேவைகள் உள்ள மற்றொரு வகை வாடிக்கையாளர்களும் உள்ளனர். இவர்கள் பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக அல்லது தொழில் நிறுவனங்களாகும். இந்தப் பிரிவினர் சந்திக்கும் அபாயங்களுக்கான காப்பீட்டுத் திட்டங்கள் பற்றி இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

பின்வரும் காப்பீட்டு வகைகளின் அடிப்படைகளை புரிந்து கொள்ளவும்:

A. தீ காப்பீடு
B. தொழில் குறுக்கீட்டுக் காப்பீடு
C. கொள்ளைக்கான காப்பீடு
D. பணக் காப்பீடு
E. நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு (Fidelity Guarantee Insurance)
F. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு (Bankers Indemnity Insurance)
G. நகைக்கடையாளர்களின் பிளா பாலிசி (Jewelers' Block Policy)
H. பொறியியல் காப்பீடு (Engineering Insurance)
I. தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு (Industrial All Risks Insurance)
J. கடல்சார் காப்பீடு (Marine Insurance)
K. கடப்பாடு காப்பீடு பாலிசிகள் (Liability policies)

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, விவாதிக்கப்பட்ட 11 வகையான காப்பீடுகளின் முக்கியத்துவம் மற்றும் அடிப்படை நோக்கங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

## A. சொத்து / தீ காப்பீடு

வர்த்தக நிறுவனங்கள் பரந்த அர்த்தத்தில் இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன:

- ✓ சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் [SMEs] மற்றும்

  - பாரத் சூக்ஷ்மா பாலிசி

  - பாரத் லகு பாலிசி

- ✓ பெரிய தொழில் நிறுவனங்கள்

  - நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசி (SFSP), IAR போன்றவை

வரலாற்று ரீதியாக, பொதுக் காப்பீட்டுத் துறை இந்த வாடிக்கையாளர்களின் தேவைகளுக்குச் சேவையாற்றுவதனால் பெருமளவில் வளர்ந்துள்ளது.

பொது காப்பீட்டுத் திட்டங்களை வர்த்தக நிறுவனங்களுக்கு விற்கும் போது அவர்களுடைய தேவைகளை காப்பீட்டுத் திட்டங்களுடன் கவனமாக ஒப்பிட வேண்டியுள்ளது. கிடைக்கும் காப்பீடுகளைப் பற்றிய சரியான புரிதல் முகவர்களுக்குத் தேவை. இத்தகைய பொது காப்பீட்டுத் திட்டங்களில் சிலவற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

1. **நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசி (SFSP),**

தீ காப்பீட்டுத் திட்டம் வர்த்தக நிறுவனங்களுக்கும் சொத்தின் உரிமையாளருக்கும், அறக்கட்டளை அல்லது சங்கத்தில் சொத்து வைத்திருப்பவருக்கும் மற்றும் சொத்தில் நிதி பற்று பெறும் தனிநபர் / நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தக் கூடியது.

சப்ளையரின் / வாடிக்கையாளரின் வளாகத்தில் உள்ள பொருட்கள் உட்பட கட்டடங்கள், ஆலை மற்றும் இயந்திரம், சாமான்கள், இணைப்புகள் மற்றும் பிற உடைமைகள், சரக்கிருப்பு மற்றும் செயல்பாடில் உள்ள சரக்கிருப்புகள் போன்ற ஒரு குறிப்பிட்ட வளாகத்தில் உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், குறிப்பாக அறிவிக்கப்பட்டால், நம்பிக்கை பொறுப்பேற்று

(Goods held in trust) வைத்திருக்கும் இருப்புகள், பழுதுபார்ப்பதற்காக வளாகத்திலிருந்து தற்காலிகமாக அகற்றப்பட்ட இயந்திரங்களும் காப்பீடு செய்யப்படலாம்.

தொழிலை அதன் இயல்புநிலைக்குக் கொண்டுவரவும் சேதமடைந்த சொத்தினை மீண்டும் எழுப்பவும் புதுப்பிக்கவும் பண இழப்பீடு கிடைப்பது மிக அவசியம். இங்குதான் தீ காப்பீடு அதன் பணியைச் செய்கிறது.

### 1.1 தரமான பாலிசி **எவற்றைக் காப்பீடு செய்கிறது?**

தீ பாலிசி மூலம் (முந்தைய அகில இந்திய தீயணைப்பு கட்டணத்தின்படி) பாரம்பரியமாக காப்பு பெறும் சில இன்னல்கள் இங்கு கீழே விவரிக்கப்படுகின்றன:

வணிக இன்னல்களுக்கான தீ காப்பீடு கீழ்க்காணும் ஆபத்துகளுக்கு காப்பளிக்கிறது:

- ✓ தீ
- ✓ மின்னல்
- ✓ குண்டு வெடிப்பு / உள்வாங்கல் (implosion)
- ✓ கலவரம், கதவடைப்பு மற்றும் தீய நோக்க சேதம்
- ✓ பாதிப்புச் சேதம்
- ✓ விமான சேதம்
- ✓ புயல், சூறாவளி, சூறைக் காற்று, கடும்புயல், சுழல், சுழல்காற்று மற்றும் நீரில் மூழ்குதல்
- ✓ நிலம் தாழ்தல் மற்றும் பாறை உருளுதல் உட்பட நிலச்சரிவு
- ✓ நீர் தொட்டி, ஆய்கருவிகள் மற்றும் குழாய்கள் வெடித்தல் மற்றும் நிறைந்து வழிதல்,
- ✓ ஏவுகணைப் பரிசோதனை நடவடிக்கைகளால் சேதம்
- ✓ தானியங்கி தெளிப்பான் நிறுவலில் இருந்து வரும் கசிவுகள்
- ✓ புதர் தீ

வர்த்தக காப்பீடுகளை தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடுகளிலிருந்து வேறுபடுத்தும் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

a) தனிநபர் காப்பீட்டுத் தேவைகளைவிட நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களின் காப்பீட்டுத் தேவைகள் மிக மிகப் பெரியது. இதற்குக் காரணம் தனிநபரின் சொத்துக்களின் மதிப்பினைவிட வர்த்தக நிறுவனங்களின் சொத்துக்களின் மதிப்பு மிக மிக அதிகம். ஒரு நிறுவனம் நீடித்திருப்பதற்கும் வளர்ச்சியடைவதற்கும் அவற்றின் இழப்பு அல்லது சேதம் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும்.

b) வர்த்தக நிறுவனங்களின் காப்பீட்டுக்கான கோரிக்கை சட்ட அல்லது பிற தேவைகளினால் பல நேரங்களில் கட்டாயமாக்கப்படுகிறது. உதாரணமாக, தொழிலகங்களும் சொத்துக்களும் வங்கிகளின் கடன் மூலம் நிறுவப்படும்போது, கடன் பெறுவதற்கு காப்பீடு ஒரு நிபந்தனையாக இருக்கலாம். இந்தியாவில் உள்ள பல பெருவணிக நிறுவனங்கள் தொழில்முறைசார் நிறுவனங்களாகும் மற்றும் அவற்றில் பல பன்னாட்டு நிறுவனங்களாகும்.

   தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க பொறுத்தமான அபாய மேலாண்மை உத்திகள் மற்றும் காப்பீடுகள் உட்பட்ட உலகளாவிய தர அளவுகளை அவர்கள் பராமரிக்க வேண்டி உள்ளது.

சில விதிகளுக்கு உட்பட்டு மேற்கண்ட இன்னல்களின் காரணமாக எழும் எந்த ஒரு இழப்பும் காப்பீட்டினால் காப்பளிக்கப்படுகிறது.

### 1.2 திருத்தப்பட்ட நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான(SFSP) பாலிசிகள்,

1 ஏப்ரல், 2021 முதல் ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது, இதன் மூலம் நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்கள் (SFSP) பாலிசியானது **கீழே கொடுக்கப்பட்டுள்ள அபாயங்களுக்கான** இரண்டு தரமான தயாரிப்புகளால் மாற்றப்படும், இது தீ மற்றும் இன்னல்கள் காப்பீட்டு வணிகத்தை செய்யும் அனைத்து பொது காப்பீட்டாளர்களாலும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.

i. **பாரத் சூக்ஷ்மா உத்யம் சுரக்ஷா** (**Bharat Sookshma Udyam Suraksha**- அபாயத்தில் உள்ள மொத்த மதிப்பு ரூ. 5 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கானது)- மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர

நிறுவனங்களின் (MSME) நிதிப் பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது

இந்த பாலிசியானது, கட்டிடம்/கட்டமைப்புகள், ஆலை மற்றும் இயந்திரங்கள், இருப்புகள் மற்றும் நிறுவனங்களின் பிற சொத்துக்களுக்கான காப்பீட்டை வழங்குகிறது, இதில் ஒரே இடத்தில் உள்ள காப்பீடை பெறும் அனைத்து சொத்து வர்க்கங்களிலும் அபாய காப்பளிக்கப்பட மொத்த மதிப்பின் வரம்பு ரூ. 5 கோடி வரை இருக்கலாம். இந்த பாலிசி, குடியிருப்புகளுக்கான பாலிசியைப் போலவே, பலவிதமான ஆபத்துக்களுக்கு எதிரான காப்பை வழங்குகிறது

பாலிசியில் அடிப்படை காப்புடன் கூடுதலாக பல உள்ளமைக்கப்பட்ட காப்புகள் உள்ளன – மாற்றங்கள், சேர்த்தல் அல்லது நீட்டிப்புகளுக்கான காப்பு, ஃப்ளோட்டர் அதாவது மிதவை அடிப்படையில் சரக்கிருப்புகளுக்கான காப்பு, இருப்புகளை தற்காலிகமாக அகற்றுவதற்கான காப்பு, குறிப்பிட்ட பொருட்களுக்கான காப்பு, தொடக்க செலவுகளுக்கான காப்பீடு (இழப்பைத் தொடர்ந்து), கட்டிடக் கலைஞர்கள், சர்வேயர்கள் மற்றும் ஆலோசிக்கும் இன்ஜினியர்களுக்கான தொழில்முறைக் கட்டணங்களைச் செலுத்த, குப்பைகளை அகற்றுவதற்கான செலவு மற்றும் நகராட்சி விதிமுறைகளால் கட்டாயப்படுத்தப்படும் செலவுகளுக்கான காப்பீடும் உள்ளது.

அலுவலகங்கள், ஹோட்டல்கள், தொழில்கள், சேமிப்பு அபாயங்கள் மற்றும் பல மைக்ரோ நிலை நிறுவனங்கள் கூட இந்த பாலிசியை எடுக்கலாம். பாலிசியானது 15% வரையிலான குறைகாப்பீட்டை தள்ளுபடி செய்கிறது. பாரத் சூக்ஷ்மா உத்யம் பாலிசிகள், பாலிசி காலத்தின் போது, மேற் குறிப்பு மூலம் காப்பீட்டுத் தொகையை அதிகரிக்க அனுமதிக்கின்றன.

ii. **பாரத் லகு உத்யம் சுரக்ஷா** (**Bharat Laghu Udyam Suraksha-** அபாயத்திற்கான **மொத்த மதிப்பு ரூ. 5 கோடி முதல் ரூ. 50 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கானது**) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) நிதிப் பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் பாலிசியானது, கட்டிடம்/கட்டமைப்புகள், ஆலை மற்றும் இயந்திரங்கள், சரக்கிருப்பு மற்றும் நிறுவனங்களின் பிற சொத்துக்களுக்கு காப்பீட்டை வழங்குகிறது, இதில் ஒரே இடத்தில் உள்ள அனைத்து காப்பீட்டுச் சொத்து வர்க்கங்களிலும் பாலிசி தொடங்கும் நாளன்று அபாயத்திற்காக காப்பளிக்கப்பட்டதின் மொத்த மதிப்பு ரூ. 5 கோடிக்கு மேல் தொடங்கி ரூ.50 கோடிக்கு மிகாமல் இருக்கும். இந்த பாலிசி, சிறு நிறுவனங்களுக்கான மைக்ரோ நிலை பாலிசியைப் போலவே, பலவிதமான இன்னல்களுக்கு எதிரான காப்பை வழங்குகிறது

இந்த பாலிசியை மீண்டும், அலுவலகங்கள், ஹோட்டல்கள், தொழில்கள், சேமிப்பு அபாயங்கள் மற்றும் அது போன்ற அனைத்து வகையான அபாயங்களுக்கும் காப்பளிக்கப்படலாம். பாரத் லகு உத்யம் பாலிசிகள் மேற்குறிப்பு மூலம் பாலிசி காலத்தின் போது காப்பீட்டுத் தொகையை அதிகரிக்க அனுமதிக்கின்றன.

iii. **தீ பாலிசிகளின் கீழ் விதிவிலக்குகள்**

காப்பீட்டாளர்கள் பாரம்பரியமாக தீ பாலிசிகளின் வரம்பிலிருந்து பின்வருவனவற்றை விலக்குகின்றனர்.

**விலக்கப்பட்ட இன்னல்களா காரணமாக ஏற்படும் இழப்புகள்**

i. போர் மற்றும் போர் போன்ற நடவடிக்கைகள்.

ii. அணு அபாயங்கள்

iii. அயனியாக்கம் மற்றும் கதிர்வீச்சு

iv. மாசு மற்றும் மாசு இழப்புகள்

**பொதுக் காப்பீட்டில் உள்ள பிற பாலிசிகளால் காப்பளிக்கப்படும் இன்னல்கள்**

i. இயந்திரம் பழுதாவது

ii. தொழில் தடங்கல்,

iv. **கூடுதல் காப்புகள்**

இருப்பினும், பூகம்பம், தீ மற்றும் அதிர்ச்சி, காப்பளிக்கப்பட்ட இன்னலின் விளைவாக மின்சாரம் இல்லாத காரணத்தால் குளிரூட்டும்

அறைகளில் உள்ள இருப்பு கெட்டுப்போவது, இடிபாடுகளை அகற்றுவதற்கான கூடுதல் செலவுகள், கட்டடக்கலை, பாலிசியினால் காப்பளிக்கப்படும் தொகையை விட கூடுதலான பொறியியலாளர் ஆலோசனைக் கட்டணம், காட்டுத் தீ, தன்னிச்சையாக எரிதல் மற்றும் சொந்த வாகனங்களின் காரணமாக ஏற்படும் மோதல் விளைவுச் சேதம், தீவிரவாதம் போன்ற சில இன்னல்களுக்கு கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் காப்பளிக்கப்படலாம்.

v. **தீ பாலிசியின் மாறுபாடுகள்**

தீ பாலிசிகள் பொதுவாக 12 மாத காலத்திற்கு அளிக்கப்படுகின்றன. குடியிருப்புகளுக்கு மட்டுமே காப்பீட்டு நிறுவனங்கள் நீண்ட கால அதாவது 12 மாத காலத்திற்கு மேலுள்ள பாலிசிகளை வழங்குகின்றன. சில சமயங்களில், குறுகிய கால அளவைகள் பொருந்தும் இடத்தில் குறுகிய கால காப்பீடுகளும் வழங்கப்படுகின்றன.

a. **சந்தை மதிப்பு மற்றும் மறுநியமன மதிப்பு பாலிசிகள்**: இழப்பு ஏற்பட்டால், காப்பீட்டாளர் பொதுவாக சந்தை மதிப்பினை [தேய்மானம் போக உள்ள மதிப்பு] வழங்குவார். ஆனால், மறுநியமன மதிப்பு பாலிசியின்கீழ் சேதமடைந்த சொத்தினை அதே வகையான புதிய சொத்தினால் மாற்றுவதற்கான தொகையை காப்பீட்டாளர்கள் வழங்குவர். வழக்கமான தீ காப்பீட்டைப் போன்று காப்பீடுத் தொகை புதிய மாற்று மதிப்பிற்கு ஒத்ததாக இருக்க வேண்டுமேயன்றி சந்தை மதிப்பிற்கு ஒத்ததாக இருக்கலாகாது.

   கட்டிடங்கள், ஆலை, இயந்திரம் மற்றும் சாமான்கள், இணைப்பு ஆகியவற்றுக்கு காப்பளிக்க மறுநியமன மதிப்பு பாலிசிகள் வழங்கப்படுகின்றன. சந்தை மதிப்பின் அடிப்படையில் காப்பளிக்கப்படும் சரக்கிருப்புகளுக்கு மறுநியமன மதிப்பு காப்பீடுகள் வழங்கப்படுவதில்லை.

b. **அறிவிப்புக் காப்பீடு**: பண்டக சாலையில் சேமிக்கப்பட்டுள்ள மதிப்புகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கவனித்துக்கொள்ள, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அறிவிப்பு பாலிசி வழங்கப்படுகிறது. இதில் காப்பீட்டுக் காலத்தில் பண்டகசாலையில் சேமிக்கப்பட நினைத்திருக்கும் பொருட்களின்

அதிகபட்ச மதிப்பாக காப்பீட்டுத் தொகை இருக்கவேண்டும். இந்த மதிப்பின்மீது ஒரு உத்தேச பிரிமியத் தொகை விதிக்கப்படுகிறது. காப்பீட்டு நடைமுறைக் காலத்தில், ஏற்கப்பட்ட இடைவெளிகளில் காப்பீடு பெற்றவர் அவருடைய சரக்கிருப்புகளின் மதிப்பினை அறிவிக்க வேண்டும். காப்பீட்டுக் காலத்தின் இறுதியில் பிரீமியத்துடன் இதை சரிசெய்ய முடியும்.

c. **மிதவை (ஃப்ளோட்டர்) பாலிசிகள்:** பெயர்ச்சி பாலிசியானது ஒரே காப்பீடுத் தொகையின்கீழ் பல்வேறு குறிப்பிட்ட இடங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் சரக்கிருப்புகளுக்கு வழங்கப்படலாம். குறிப்பிடப்படாத இடங்களுக்கு காப்பீடு வழங்கப்படாது. எந்த ஒரு இருப்பு வைக்கப்பட்ட இடத்திலும் காப்பீடு பெற்றவரின் இருப்புகளோடு 10% ஏற்றுதலுடன் உள்ள இருப்புக்கான விகிதமே பிரீமியமாக இருக்கும். இவை தீ பெயர்ச்சித் திட்டங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில், காப்பீடுத் தொகை பல இடங்களுக்குப் பெயர்ச்சியடைகிறது அல்லது ஒரு தொகை பல இடங்களில் மிதக்கிறது.

vi. **பிரீமிய விகிதம் பின்வருவதை பொறுத்தது**:

a) குடியிருப்பு வகை - தொழில்துறை சார்ந்ததா அல்லது வேறு வகையா

b) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பொறுத்து ஒரு தொழில்துறை வளாகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் ஒரே விகிதத்தில் கட்டணம் விதிக்கப்படும்.

c) தொழில்துறை வளாகத்திற்கு வெளியில் உள்ளவற்றுக்கு அந்தந்த தனி இடங்களில் குடியிருப்பின் தன்மையைப் பொறுத்து கட்டண விகிதம் இருக்கும்.

d) பண்டகப் பகுதிகள் அங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் மாசுபடுத்தும் தன்மையின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

e) கூடுதல் ("Add on") காப்புகளைச் சேர்க்க கூடுதல் ப்ரீமியம் விதிக்கப்படும்.

f) முந்தைய ஈடுக்கோரல் வரலாறு மற்றும் வளாகத்தில் வழங்கப்பட்டுள்ள தீ காப்பு வசதிகளின் அடிப்படையில் பிரீமியத்தில் சலுகை வழங்கப்படுகிறது.

g) பிரீமியத் தொகையினைக் குறைக்க கலவரம், கதவடைப்பு, தீயநோக்க மற்றும் தீவிரவாத சேதம், வெள்ள வகை இன்னல்களுக்கான காப்புகளை இதில் சேர்க்காமலும் இருக்கலாம்.

ஒவ்வொரு காப்பீட்டாளர்களுக்கு இடையிலும் கட்டண விகிதம் மாறுபடலாம்.

**சுய-பரீட்சை** 1

வர்த்தக இன்னல்களுக்கான தீ காப்பீடு தரும் காப்புகளாவன _______

I. நெடுஞ்சாலையில் வாகனம் எரிவது

II. கப்பலில் தீ

III. தொழிற்சாலையில் வெடிப்பு

IV. தீ விபத்து காரணமாக மருத்துவமனையில் அனுமதி

## B. தொழில் குறுக்கீட்டுக் காப்பீடு

இந்த வகைக் காப்பீடு விளைவு இழப்புக் காப்பீடு அல்லது இலாப இழப்புக் காப்பீடு எனவும் அறியப்படுகிறது.

காப்பீடு செய்யப்பட்ட இன்னல்களினால் கட்டிடம், ஆலை, இயந்திரங்கள், இணைப்புகள், வியாபாரப் பொருட்கள் போன்றவற்றில் ஏற்படும் பொருள் அல்லது சொத்து சேதம் அல்லது இழப்பிற்கு தீ காப்பீடு இழப்பீடு வழங்குகிறது. **இதன் விளைவாக காப்பீடு பெற்றவரின் தொழிலுக்கு முழுமையாகவோ பகுதியளவிலோ தடங்கல் ஏற்படலாம்**. இதன் விளைவாக பல்வேறு பொருளாதார இழப்புகள் இந்தத் தடங்கல் காலத்தில் ஏற்படலாம்.

### தொழில் குறுக்கீட்டுக் பாலிசியின்கீழ் காப்பு

விளைவு இழப்பு (CL) பாலிசி [தொழில் குறுக்கீடு (BI)] மொத்த இலாபத்தில் ஏற்படும் இழப்பினை ஈடு செய்கிறது - மொத்த இலாபம் என்பது நிகர இலாபத்துடன் சேர்த்து இறுதி இழப்பினை குறைப்பதற்காக எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு வேகமாக,

தனது தொழிலை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக இழப்பீடு பெற்றவர் செய்யும் கூடுதல் செலவு ஆகும். இங்கு காப்பீடு பெறும் இன்னல்களும் நிபந்தனைகளும் தீ காப்பீட்டின் கீழ் உள்ளவை போன்றவையே.

**எடுத்துக்காட்டு**

ஒரு தீயின் விளைவாக கார் தயாரிப்பாளரின் தொழிற்சாலை சேதமடைந்தால், உற்பத்தி இழப்பினால் தயாரிப்பாளரின் வருமானத்திலும் இழப்பு ஏற்படும். இந்த வருமான இழப்புடன் சேர்த்து கூடுதல் செலவுகளும் காப்பீடு செய்யப்படலாம். ஆனால் காப்பீடு பெற்ற இன்னல் காரணமாக அந்த இழப்பு நடந்திருக்க வேண்டும்.

---

வழக்கமான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசியுடன் இணைந்தே இந்தப் பாலிசியினை எடுக்க முடியும். ஏனெனில், வழக்கமான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசியின்கீழ் ஈடுக்கோரல் இருந்தால் மட்டுமே இந்தப் பாலிசியின்கீழ் எழுப்பப்படும் ஈடுக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சுய-பரீட்சை** 2

தொழில் குறுக்கீட்டு காப்பீட்டுத் திட்டம் __________.-உடன் இணைந்தே எடுக்க முடியும்.

I. தரநிலை தீ மற்றும் சிறப்பு இன்னல்கள் பாலிசி

II. தரநிலை கடல்சார் பொருட்கள் பாலிசி

III. தரநிலை வாகனக் காப்பீடு பாலிசி

IV. தரநிலை உடல்நலக் காப்பீடு பாலிசி

---

## C. கொள்ளைக்கான காப்பீடு

திருடும் வாய்ப்புடைய சரக்கு இருப்புகள், பொருட்கள், சாமான்கள், இணைப்புகள் மற்றும் பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள பணம் போன்றவைகள் உள்ள தொழிற்சாலைகள், கடைகள், அலுவலகங்கள், பண்டகசாலைகள் போன்ற தொழில் வளாகங்களுக்காகவே இந்தப்

பாலிசி உள்ளது. காப்பீட்டின் நோக்கம் பாலிசியில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

**கொள்ளைக் காப்பீட்டின்கீழ் காப்பளிக்கப்படும் இன்னல்கள்**

a) வலுக்கட்டாயத்துடனும் வன்முறையுடனும் வளாகத்திற்குள் நுழைந்ததனால் அல்லது வலுக்கட்டாயத்துடனும் வன்முறையுடனும் வளாகத்திலிருந்து வெளியேறியது உண்மையாக நடந்திருந்ததால் அல்லது வழிப்பறி மூலம் ஏற்பட்ட இழப்பு .

b) காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது வளாகத்திற்கு கொள்ளையினால் ஏற்பட்ட சேதம். காப்பீடு செய்யப்பட்ட சொத்து காப்பீடு வழங்கப்பட்ட வளாகத்தில் இருந்து தொலைந்திருந்தால் மட்டுமே காப்பிடப்படும். பிற வளாகத்திலிருந்து தொலைந்திருந்தால் காப்பிடப்படாது.

**பணக் காப்பு:** கொள்ளைக் காப்பில் முக்கியமான அங்கமாக இருப்பது பணக் காப்பாகும். ஏற்கப்பட்ட தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் உள்ள பெட்டகத்தில் பணம் பூட்டப்பட்டு கொள்ளையிட முடியாத மாதிரி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இக்காப்பு கிடைக்கும். பணக் காப்பினை அளிப்பதற்கான பொதுவான நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a) அசல் சாவியைப் பயன்படுத்தி பெட்டகத்திலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. அந்தச் சாவியை வன்முறையாகப் பறித்தோ அல்லது மிரட்டியோ அல்லது பலத்தைப் பயன்படுத்தியோ பிடுங்கியிருக்க வேண்டும். இது பொதுவாக **“சாவி கூறு" (key clause)** என அறியப்படுகிறது.

b) பெட்டகத்தைத் தவிர வேறொரு இடத்தில் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள தொகையின் முழு பட்டியல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அத்தகைய பதிவுகளில் உண்மையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு மட்டுமே காப்பீட்டாளர் பொறுப்பாகிறார்.

1. **முதல் இழப்பு காப்பீடு**

அதிக அளவில் உள்ள ஆனால் குறைந்த மதிப்புடைய பொருட்களைப் பொறுத்தவரை (உதாரணமாக, பஞ்சுப் பொதிகள், தானியம், சர்க்கரை போன்றவை) ஒரே நேரத்தில் முழு இருப்பும் காணாமல் போகும் வாய்ப்பு மிகக் குறைவாகவே கருதப்படுகிறது. கொள்ளையடிக்கக்கூடிய மதிப்பு சாத்தியமான அதிகபட்ச இழப்பாக (PML) கணக்கிடப்பட்டு, இந்த அதிகபட்ச சாத்தியமான இழப்புக்கு முழு பிரீமியமும் வசூலிக்கப்படும், மீதமுள்ள பங்குகளின் மீது முழு பிரீமியத்தின் குறிப்பிட்ட சதவீதம் வசூலிக்கப்படும் ஏனெனில் PML முழு பங்குகளின் மீது பெயர்ச்சி ஆகிறது. இரண்டாவது முறையும் கொள்ளை உடனடியாக நடக்காது அல்லது காப்பீடு பெற்றவர் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பார் எனக் கருதப்படுகிறது.

2. தீக் காப்பீடு போலவே, இருப்புகளைப் பொறுத்தமட்டில், அறிவிப்புக் காப்பு மற்றும் பெயர்ச்சி காப்பு ஆகியவை சாத்தியமாகும்.

3. **விலக்குகள்**

தொழிலாளர்களாலும், குடும்ப உறுப்பினர்களாலும் அல்லது சட்டப்பூர்வமாக அந்த வளாகத்தில் உள்ள பிறராலும் திருடப்படுவதற்கு பாலிசி காப்பளிக்காது. சாதாரண திருட்டுக்கும் காப்பளிக்காது. தீ அல்லது பிளேட் கண்ணாடி பாலிசிகளினால் காப்பளிக்கப்படும் இழப்புகளையும் இது விலக்குகிறது.

4. **நீட்டிப்புகள்**

கூடுதல் பிரீமியத்தை கட்டி கலவரம், வேலைநிறுத்தங்கள் மற்றும் தீவிரவாத இன்னல்களுக்கும் காப்பளிக்கும் வகையில் பாலிசி நீட்டிக்கப்படலாம்.

5. **பிரீமியம்**

கொள்ளை பாலிசிக்கான பிரீமிய விகிதம் அந்த காப்பீடு பெறும் சொத்தின் தன்மை, காப்பீடு பெறுவரின் நெறிமுறைசார் ஆபத்து, வளாகக் கட்டுமானம் மற்றும் இருப்பிடம், பாதுகாப்பு நடவடிக்கைகள்

(*எ.கா. காவலர், கொள்ளை அலாரம்*), முந்தைய ஈடுக்கோரல் அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் இருக்கும்.

முன்மொழிவுப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களோடு கூடுதலாக, உயர்வான பணமதிப்புடைய காப்பீடை ஏற்பதற்கு முன்பு முந்தைய கண்காணிப்பும் காப்பீட்டாளரால் செய்யப்படுகிறது.

**சுய-பரீட்சை** 3

கொள்ளை பாலிசிக்கான பிரீமியம் எவற்றைச் சார்ந்துள்ளது?

I. காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் தன்மை

II. காப்பீடு பெறுவரின் நெறிமுறைசார் ஆபத்து

III. வளாகக் கட்டுமானம் மற்றும் இருப்பிடம்

IV. மேலுள்ள அனைத்தும்

## D. பணக் காப்பீடு

பணத்தைக் கையாளுவது எந்த ஒரு தொழிலிலும் உள்ளார்ந்த அங்கமாகும். இது வங்கிகளையும் தொழில் வர்த்தக நிறுவனங்களையும் பண இழப்பிலிருந்து பாதுகாப்பதற்காக உள்ளது. வளாகத்திலும் வெளியிலும் பணம் அபாயத்தில் உள்ளது. பணத்தை எடுக்கும்போது, வைக்கும்போது, பணம் செலுத்தும்போது, அல்லது வசூலிக்கும்போதோ சட்டத்திற்குப் புறம்பாக அது பறிக்கப்படலாம்.

### 1. பணக் காப்பீட்டின் காப்பு

ரொக்கம், காசோலைகள் / போஸ்டல் ஆர்டர்கள் / தபால் ஸ்டாம்புகள் கையாளப்படும்போது ஏற்படும் இழப்புகளுக்குக் காப்பளிக்கும் வகையில் பணக் காப்பீட்டு பாலிசி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலிசி பொதுவாக இரு பிரிவுகளின் கீழ் காப்பினை அளிக்கிறது.

a) **இடைக்கால (Transit) பிரிவு:** காப்பீடு பெற்றவராலோ அல்லது அவர் சார்பாக அதிகாரம் பெற்ற ஊழியராலோ வெளியில் பணம் எடுத்துச் செல்லப்படும்போது ஒரு கொள்ளை அல்லது திருட்டு அல்லது அதுபோன்ற செயல்களின் விளைவாக அத்தொகை இழக்கப்பட்டால் அதற்குக் காப்பளிக்கிறது.

டிரான்சிட் பிரிவு இரு தொகைகளைக் குறிப்பிடுகிறது:

i. **எடுத்து செல்வதில் ஒரு தடவைக்கான வரம்பு:** ஒவ்வொரு இழப்பையும் பொறுத்தவரை காப்பீட்டாளர் அளிக்க வேண்டிய அதிகபட்ச தொகையாக இத்தொகை இருக்கும்.

ii. **பாலிசி காலத்தில் எடுத்துச் செல்லத் திட்டமிடப்படும் தொகை:** பிரீமியத் தொகையினை முடிவுசெய்ய பிரீமிய விகிதம் கணக்கிடப்படும் தொகையை இது பிரதிநிதித்துவம் செய்கிறது.

தீக் காப்பீட்டில் கடைபிடிக்கப்படுவது போன்று **அறிவிப்பின் அடிப்படையில்** பாலிசிகள் வழங்கப்படலாம். எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்ட தொகையினை கணக்கில் எடுத்துகொண்டு காப்பீட்டாளர்கள் ஏதோ ஒரு பிரீமியத்தை வசூலிக்கின்றனர். காப்பீடு முடியும்போது இந்த பிரீமியத்தை, காப்பீடு செய்தவர் அறிவிக்கிறபடி, பாலிசிக் காலத்தின்போது எடுத்துச் செல்லப்பட்ட உண்மையான தொகையுடன் ஒப்பிட்டுச் சரிசெய்து கொள்கின்றனர்.

b) **வளாகங்கள் பிரிவு**: இந்தப் பிரிவு ஒருவரது வளாகத்தில்/பத்திரமாகப் பூட்டப்பட்டதில் இருந்து திருட்டு, வீட்டை உடைத்தல், தடுத்து நிறுத்துதல் போன்றவற்றால் இழக்கப்பட்ட பண இழப்பை ஈடுசெய்கிறது. இந்தப் பாலிசியின் பிற அம்சங்கள் மேலே கற்றலின் குறிக்கோள்கள் 3-ன் கீழ் நாம் விளக்கிய கொள்ளை காப்பீட்டின் (தொழில் வளாகத்தில்) அம்சங்களைப் போன்றதே.

## 2. முக்கிய விலக்குகள்

இவற்றுள் அடங்குபவை:

a) தவறு அல்லது விட்டுவிடலின் காரணமாக ஏற்படும் இழப்பு

b) அதிகாரம் பெறாத ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தின் இழப்பு மற்றும்

c) கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாதம்:

## 3. நீட்டிப்புகள்

கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் காப்பீடு பின்வருவதற்கும் காப்பளிக்கச் செய்யலாம்:

a) பணம் எடுத்துச் செல்லுபவரின் நேர்மையின்மை,

b) கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாத இன்னல்கள்

c) விநியோகிப்பதில் உள்ள அபாயம் - தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும்போது ஏற்படும் இழப்பு

**4. பிரீமியம்**

எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அந்த நிறுவனத்தால் எடுத்துச் செல்லத் திட்டமிடும் வரம்பு, எடுத்துச் செல்லப்படும் முறை, எடுத்துச் செல்லப்படும் தூரம், மற்றும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவற்றைப் பொறுத்து காப்பீடு பெறுபவருக்கான பிரீமியம் நிர்ணயிக்கப்படுகிறது. பாலிசி முடிந்து 30 நாட்களுக்குள் செய்யப்படும் அறிவிப்பின் அடிப்படையில் ஆண்டு முழுவதும் உண்மையில் எடுத்துச் செல்லப்பட்ட தொகையின்படி பிரீமியம் சரிசெய்யப்படும்.

**சுய-பரீட்சை** 4

பணக் காப்பீட்டு பாலிசியில் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

I. தவறு அல்லது விட்டுவிடலின் காரணமாக ஏற்படும் இழப்பு

II. கொள்ளை காரணமாக ஒருவரின் வளாகத்திலிருந்து தொகை இழப்பு

III. அதிகாரம் பெறாத ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தின் இழப்பு

IV. கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாத இன்னல்கள்

## E. நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு

ஒயிட் காலர் குற்றங்கள் என அழைக்கப்படும் தொழிலாளர்களின் பொய் அல்லது நேர்மையின்மை காரணமாக நிறுவனங்கள் நிதி இழப்பினைச் சந்திக்கலாம். தங்களுடைய தொழிலாளர்களின் பொய் அல்லது நேர்மையின்மை காரணமாக மோசடி, கையாடல், சிறுதிருட்டு, கணக்கு முறைகேடு, தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தவறுகள் மூலம் முதலாளிகள் சந்திக்கும் இழப்புகளுக்கு நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு இழப்பீடு வழங்குகிறது.

1. **நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீட்டின் (Fidelity Guarantee Insurance) காப்புகள்**

நேரடி பண இழப்பிற்கு மட்டுமே காப்பளிக்கப்படுகிறது, விளைவு இழப்புகளுக்கு அல்ல.

a) பணம், பிணையங்கள் அல்லது பொருட்கள் சார்ந்த இழப்பாக அவை இருக்க வேண்டும்.

b) குறிப்பிடப்படட கடமைகளை செய்யும்போது இந்த செயல்கள் நடந்திருக்க வேண்டும்;

c) பாலிசி முடிந்து 12 மாதங்களுக்குள் அல்லது அந்த தொழிலாளரின் இறப்பு, வேலையிலிருந்து விலகல் அல்லது நீக்குதல் இவற்றுள் எது முதலில் நடந்ததோ அதற்குள் இழப்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

d) ஒரு நேர்மையற்ற தொழிலாளரை மீண்டும் பணியிலமர்த்தி அதனால் இழப்பு நடந்திருந்தால் காப்பளிக்கப்பட மாட்டாது.

2. **நம்பகத்தன்மை உத்தரவாத பாலிசிகளின் வகைகள்**

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பல்வேறு வகையான நம்பகத்தன்மை உத்தரவாதக் பாலிசிகள் உண்டு:

a) **தனிநபர் பாலிசி**: ஒரே ஒரு நபருக்கு மட்டுமே உத்தரவாதம் வழங்கப்பட வேண்டிய சமயத்தில் இந்த பாலிசி பயன்படுகிறது. தொழிலாளரின் பெயர், பொறுப்பு மற்றும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டிய தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

b) **கூட்டுக் காப்பீடு**: உத்தரவாதத்தை பெற பொருத்தமான தொழிலாளர்களின் பெயர்கள், அந்த ஒவ்வொரு தொழிலாளரின் பணிகள் பற்றிய ஒரு குறிப்பு மற்றும் உத்தரவாதம் வழங்கப்படும் தனித்தனி தொகைகள் கொண்ட ஒரு பட்டியலை இந்தக் காப்பீடு கொண்டிருக்கும்.

c) **பெயர்ச்சித் திட்டம் அல்லது ஃப்ளோட்டர்**: இந்தப் பாலிசியில், உத்தரவாதம் வழங்கப்படும் ஊழியர்களின் பெயர்களும் பணிகளும் ஒரு பட்டியலில் உள்ளன. ஆனால், தனித்தனி உத்தரவாதத் தொகைகளுக்குப் பதில், ஒரு குறிப்பிட்ட

உத்தரவாதத் தொகை முழுக் குழுவிற்கு இடையிலும் "ஃப்ளோட்" அதாவது பெயர்ச்சி செய்யப்படுகிறது. ஒரு தொழிலாளருக்காக ஈடை கோரும்போது, கூடுதல் பிரீமியத்தை செலுத்தி அசல் தொகை மறுநிரப்புதல் செய்யப்பட்டாலன்றி பெயர்ச்சியளிக்கப்பட்ட உத்தரவாத அளவு குறைகிறது.

d) **பதவிகள் பாலிசி**: இதுவும் கூட்டுத் திட்டம் போன்றதே. ஆனால், பெயர்களைப் பயன்படுத்துவதற்குப் பதில் ஒரு குறிப்பிட்ட உத்தரவாதத் தொகைக்கு பதவிகளின் (காசாளர், கணக்கு அதிகாரி போன்றவர்) பட்டியல் வழங்கப்படுகிறது.

e) **பிளாங்கெட் பாலிசி**: இந்தப் பாலிசி பெயர்களையோ அல்லது பதவிகளையோ குறிப்பிடாமல் அனைத்துப் பணியாளர்களுக்கும் காப்பளிக்கிறது. காப்பீட்டாளர் மூலம் தொழிலாளர்கள் பற்றிய விசாரணைகள் நடப்பதில்லை. மிக அதிக தொழிலாளர்களைக் கொண்ட ஒரு முதலாளிக்கே இத்தகைய பாலிசிகள் பொருந்தும். மற்றும் அமைப்பு ஊழியர்களின் முந்தைய வரலாறை பற்றி போதுமான விசாரணைகளை செய்கிறது. ஒரு ஈடை கோர நேரும்போது, அத்தகைய முதலாளி பெற்ற விசாரணைகளின் மேற்குறிப்புகளை காப்பீட்டாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். பிரபலமான பெரிய நிறுவனங்களுக்கே இந்த பாலிசி வழங்கப்படுகிறது.

### 3. பிரீமியம்

தொழில் வகை, தொழிலாளரின் நிலை, சரிபார்ப்பு மற்றும் மேற்பார்வை அமைப்புகள் போன்றவற்றைப் பொறுத்து பிரீமிய விகிதம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 5

நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு எதற்கான இழப்பீடை வழங்குகின்றன:

I. தங்களுடைய தொழிலாளர்களின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக முதலாளிகள் சந்திக்கும் இழப்புகளுக்கு

II. தங்களுடைய முதலாளிகளின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக தொழிலாளர்கள் சந்திக்கும் இழப்புகளுக்கு

III. மூன்றாவது தரப்பின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக முதலாளிகளும் தொழிலாளர்களும் சந்திக்கும் இழப்புகளுக்கு

IV. நிறுவன நிர்வாகத்தின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக பங்குதாரர்கள் சந்திக்கும் இழப்புகளுக்கு

---

## F. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு

வங்கிகள், NBFC-கள், பிற பணப் பரிமாற்றம் செய்யும் நிறுவனங்கள் பணம் மற்றும் பிணையங்களை கையாளும்போது ஏற்படும் சிறப்பு இன்னல்களைக் கருத்தில் கொண்டு இந்த ஒருங்கிணைந்த காப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 1. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீட்டின் காப்புகள்

வங்கியாளரின் தேவைகளின் அடிப்படையில் இந்தப் பாலிசியில் பல்வேறு வகைகள் உண்டு.

a) தீ, கொள்ளை, கலவரம் மற்றும் வேலைநிறுத்தம் காரணமாக வளாகத்திற்குள் உள்ள பண பிணையங்கள் தொலைவது அல்லது சேதமடைவது

b) அதிகாரம் பெற்ற தொழிலாளர்களின் கைகளால் வளாகத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும்போது. தொழிலாளர்களின் கவனக்குறைவு உட்பட எந்த ஒரு காரணத்தினாலும் ஏற்படும் இழப்பு

c) மோசடி அல்லது காசோலை, வரைவு, நிரந்தர வைப்பு ரசீதுகள் போன்றவற்றில் திருத்தம்

d) பணம் / பிணையங்கள் அல்லது அடகு வைக்கப்பட்ட பொருட்களைக் கையாளும் பணியாளர்களின் நேர்மையின்மை.

e) பதிவுத் தபால் பார்சல்களை அனுப்புதலில் ஏற்படும் இழப்பு

f) மதிப்பீட்டாளர்களின் நேர்மையின்மை

g) 'ஜனதா முகவர்கள்', 'சோட்டி பச்சத் யோஜனா முகவர்கள்' ('Janata Agents', 'Chhoti Bachat Yojana Agents') போன்ற வங்கியின் முகவர்களின் கைகளில் பணம் உள்ளபோது ஏறபடும் இழப்பு

இந்தக் காப்பு கண்டுபிடிப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதாவது, அந்த நிகழ்வு நடந்த நேரத்தைப் பாராது அந்த இழப்பு கண்டறியப்பட்ட காலத்தைப் பொறுத்து பாலிசி பொறுப்பை ஏற்கும். ஆனால், அந்த இழப்பு உண்மையாக நடந்த சமயத்தில், காப்பு நடப்பில் இருந்திருக்க வேண்டும்.

வழக்கமாக கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் 2 ஆண்டுகளுக்குள் நடந்த இழப்புகளுக்கு மட்டுமே காப்புத்தொகை வழங்கப்படும். ஆனால், இழப்பு நடப்பதற்கு முன்னிருந்து காப்பீடு தொடர்ச்சியாக இருந்திருக்க வேண்டும்.

**2. முக்கிய விலக்குகள்**

வர்த்தக இழப்புகள், கவனக் குறைவு, மென்பொருள் குற்றங்கள் மற்றும் பங்குதாரர்கள் / இயக்குனர்களின் நேர்மையின்மை ஆகியவை முக்கியமான விலக்குகள் ஆகும்.

**3. நோக்கம்**

பாலிசியில் 7 பிரிவுகளை உள்ளன:

1. **வளாகத்தில் நடப்பது**
2. **போக்குவரத்து சமயத்தில் நடப்பது**
3. **மோசடி அல்லது மாற்றம்**
4. **நேர்மையின்மை**
5. **அடைமானம் வைக்கப்பட்ட பொருட்கள்**
6. **பதிவு செய்யப்பட்ட தபால் சேவை**
7. **மதிப்பீட்டாளர்கள்**
8. **ஜனதா முகவர்கள்**

**4. காப்பீடுத் தொகை**

முதல் 5 பிரிவுகளுள் வழக்கமாக பெயர்ச்சியுறும் **காப்பீடுத் தொகையை** வங்கி நிர்ணயிக்க வேண்டும். இது 'அடிப்படைக் காப்பீடுத் தொகை' என அழைக்கப்படுகிறது. அடிப்படை காப்பீடுத் தொகை

போதுமானது இல்லை எனில், பிரிவு (1) மற்றும் பிரிவு (2)-க்கு கூடுதல் காப்பீடுத் தொகையை வாங்கலாம். கூடுதல் பிரீமியத்தினைச் செலுத்துவதன் மூலம் காப்பீடுத் தொகையின் ஒரு கட்டாய மற்றும் தானாக மீண்டும் நிரப்புதல் அம்சத்தை இந்தப் பாலிசி அனுமதிக்கிறது.

### 5. மதிப்பீடு

பிரீமியக் கணக்கீடு சார்ந்திருக்கும் காரணிகள்:

a) அடிப்படைக் காப்பீடுத் தொகை

b) கூடுதல் காப்பீடுத் தொகை

c) பணியாளர்களின் எண்ணிக்கை

d) கிளைகளின் எண்ணிக்கை

**சுய-பரீட்சை** 6

வங்கியாளர்களின் காப்பீட்டுத் பாலிசியினால் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

I. தீயின் காரணமாக வளாகத்திற்குள் உள்ள பண பிணையங்கள் தொலைவது அல்லது சேதமடைவது

II. மோசடி அல்லது காசோலை திருத்தம்

III. பணத்தைக் கையாளும் பணியாளர்களின் நேர்மையின்மை.

IV. மேலுள்ள அனைத்தும்

## G. நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசி

சமீப ஆண்டுகளில் நகை வர்த்தகத்தில், குறிப்பாக வைர வர்த்தகத்தில் உலகிலேயே இந்தியா முன்னணி மையமாக வளர்ந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பட்டை தீட்டப்படாத வைரங்கள் வெட்டப்பட்டு, பட்டை தீட்டப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள், வைரம் மற்றும் அரிதான கற்கள், கைக் கடிகாரங்கள் போன்ற சிறு அளவிலுள்ள ஆனால் மதிப்புமிக்க பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நகை வணிகரின் அனைத்து அபாயங்களையும் இது கவனித்துக் கொள்கிறது. இத்தகைய விலையுயர்ந்த பொருட்களை அதிக அளவில் இருப்பு

வைத்திருப்பதும் பல்வேறு வளாகங்களுக்குள் இடப் பெயர்ச்சி செய்வதும் இந்த வர்த்தகத்தின் அங்கமாக உள்ளது.

### 1. நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசியின் காப்புகள்

நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசி என்பது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட பேக்கேஜ் பாலிசியாகும். பிரிவு 1-ன் கீழ் காப்பு கட்டாயமானது. காப்பீடு பெறுபவர் பிற பிரிவுகளுக்கு தன் விருப்பப்படி காப்பீடு பெறலாம். எலக்ட்ரானிக் உபகரணங்கள், தட்டுக் கண்ணாடி, சைனேஜ் போன்ற பிற சொத்துக்கள் மற்றும் பணியாளர்கள் இழப்பீடு, ஊழியர்களின் நேர்மையின்மை போன்ற பொறுப்புகளுக்கு காப்பளிக்க மேலும் சில பிரிவுகளைச் சேர்ப்பது சந்தை நடைமுறையாக உள்ளது.

இதில் நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடிற்கான காப்பு இல்லையெனில், முழுப் பாதுகாப்பை பெற காப்பீடு பெற்றவரால் அதுவும் எடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொன்றின் சாதகங்களின் அடிப்படையில் அபாயங்கள் மதிப்பிடப்படுகின்றன. தனி காவலாளி, குளோஸ் சர்க்கியூட் தொலைக்காட்சி / எச்சரிக்கை அமைப்பு, தனித்த பெட்டக அறை மற்றும் பிற ஒவ்வொரு பாதுகாப்புக் கருவிக்கும் வெவ்வேறு பிரீமிய விகிதமும் தள்ளுபடிகளும் பொருந்தும்.

**சுய-பரீட்சை** 7

நகைக்கடைக்காரர்களின் பிளாக் பாலிசியைப் பொறுத்தவரை, பாரம்பரியமாக பல பிரிவுகள் உள்ளன, அவற்றில் ஒன்று பொதுவாக கட்டாயமாகும், மீதமுள்ள பிரிவுகள் __________ ஆகும்.

I. கட்டாயமானது

II. முன்னிகழ்வுகளை சார்ந்தது

III. விருப்பமானது

IV. ஈடுசெய்வது

## H. பொறியியல் காப்பீடு

தீ காப்பீடு வளரும்போது அதற்கு இணையாக பொதுக் காப்பீட்டின் ஒரு கிளையாக பொறியியல் காப்பீடு வளர்ந்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் இயந்திரங்களுக்கு ஒரு தனி காப்பின் அவசியத்தை உருவாக்கிய தொழில்மயமாக்கலின்போது இதன் தொடக்கம் இருந்தது எனலாம். பொறியியல் திட்டங்களுடன் இணைந்து **அனைத்து-அபாயங்கள்** காப்பு என்ற கருத்தாக்கம் வளர்ந்தது. குறிப்பாக விலக்கப்படாத எந்த ஒரு காரணத்தினாலும் ஏற்படும் இழப்புகளுக்கு இது காப்பளிக்கிறது. கட்டுமானம் முதல் பரிசோதனைவரை அந்த தொழிற்சாலை செயல்பாட்டுக்கு வரும்வரை -பல்வேறு நிலைகளில் உள்ள உற்பத்திப் பொருட்கள் காப்பிடப்படுகின்றன. பெரிய மற்றும் சிறிய தொழில் அமைப்புகள் இரண்டுமே இந்த காப்பீட்டின் வாடிக்கையாளர்களாக இருக்கின்றனர். மின்னணு உபகரணங்கள் மற்றும் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களும் இதில் அடங்குவர். இரண்டு வகையான பொறியியல் காப்பீட்டு பாலிசிகள் உள்ளன:

1) வருடாந்திர பாலிசிகள்-பொதுவாக ஒரு வருட காலத்திற்கு இருப்பவை-
   a) இயந்திரப் பழுது பாலிசி
   b) கொதிகலன் அழுத்த ஆலை பாலிசி
   c) மின்னணு உபகரணங்கள் பாலிசி
   d) ஒப்பந்ததாரரின் ஆலை மற்றும் இயந்திரங்கள் பாலிசி
   e) இருப்புகளின் சரிவு பாலிசி
   f) முடித்த கட்டடப் பொறியியல் திட்டங்களின் பராமரிப்புக்கான அபாய பாலிசி
2) **திட்டக் காலத்தின் அடிப்படையில் மாறுபடும் கால அளவு கொண்ட திட்ட பாலிசிகள்-**
   a) ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் (C.A.R.) பாலிசி
   b) எரெக்சன் அனைத்து அபாயங்கள் (EAR) பாலிசி

பொறியியல் பாலிசிகளுடன் தொடர்புடைய இரண்டு "விளைவு இழப்பு" பாலிசிகள் உள்ளன:

a) இயந்திர பழுது இலாப இழப்பு (**MBLOP)** பாலிசியுடன் அல்லது கொதிகலன் மற்றும் பிரெஷர் ஆலை பாலிசியுடன் எடுக்கப்பட்ட இயந்திர இலாப பழுது அல்லது பாலிசி இயந்திர முறிவு இழப்பு மற்றும்

b) முன்கூட்டிய லாப இழப்பு (**ALOP)** அல்லது திட்ட பாலிசியுடன் எடுக்கப்பட்ட தொடங்குவதில் தாமதம் (**DSU)** பாலிசி

பாலிசிகளை சுருக்கமாகப் பார்ப்போம

**A. <u>வருடாந்திர பாலிசிகள்</u>**

1. **இயந்திரப் பழுது பாலிசி** (MB): இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தொழிலுக்கும் இந்த பாலிசி பொருத்தமானது மற்றும் ஆலை மற்றும் இயந்திரங்கள் செயலிழந்தால் கடுமையான விளைவு ஏற்படும். இந்த பாலிசியானது ஜெனரேட்டர்கள், டிரான்ஸ்ஃபார்மர்கள் மற்றும் பிற மின், இயந்திர மற்றும் தூக்கும் சாதனங்கள் போன்ற இயந்திரங்களுக்கு காப்பளிக்கிறது.

கீழ்க்காணும் ஏதாவதொரு காரணத்தினால் (விலக்கப்பட்ட அபாயங்களுக்கு உட்பட்டு) காப்பிடப்பட்ட சொத்திற்கு தொழில்நுட்ப அல்லது மின் பழுதின் காரணமாக ஏற்படும் எதிர்பாரா மற்றும் திடீர் சேதத்திற்கு இந்த பாலிசி காப்பளிக்கிறது:

a) அது இயங்கும்போது அல்லது ஓய்வில் இருக்கும்போது

b) சுத்தப்படுத்துவதற்காகப் பிரிக்கும்போது அல்லது பிரித்துச் சீர்செய்யும்போது

c) சுத்தப்படுத்தும்போது அல்லது பிரித்துச் சீர்செய்யும்போது மற்றும் அதன் பிறகு மறு இணைப்புச் செய்யும்போது

d) வளாகத்திற்குள் இடமாற்றம் செய்யும்போது.

தனி இயந்திரத்தின் மறு நிறுவல் மதிப்பின் அடிப்படையில் பிரீமியம் விதிக்கப்படுகிறது. இயந்திரம் முழுமையாக காப்பிடப்பட வேண்டும். இயந்திர வகை மற்றும் அது பயன்படுத்தப்படும் தொழிலகம் மற்றும்

அதன் மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் இருக்கும். துணைநிற்பு (stand-by) வசதிகள், இருக்கும் உதிரி பாகங்கள் மற்றும் ஈடு அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தள்ளுபடிகளும் வழங்கப்படுகின்றன.

2. **பாய்லர் மற்றும் பிரஷ்ஷர் பிளாண்ட் பாலிசி (**Boiler and Pressure Plant Policy): இது கொதிகலன்கள் மற்றும் அழுத்த பாத்திரங்களுக்கு பினவருவதற்காக காப்பளிக்கிறது:

    a) கொதிகலன்கள் மற்றும் / அல்லது பிற அழுத்த ஆலை மற்றும் காப்பீடு பெற்றவரை சுற்றியுள்ள பொருட்களுக்கு, தீ அல்லாமல், பிறவற்றால் ஏற்படும் சேதம்; மற்றும்

    b) அத்தகைய கொதிகலன்கள் மற்றும் / அல்லது அழுத்த ஆலையின் அக அழுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட வெடிப்பு அல்லது நொறுங்கலினால் ஏற்பட்ட மூன்றாம் தரப்பு நபரின் உடல் காயம், சொத்திற்கு ஏற்படும் சேதம் ஆகியவற்றுக்கான காப்பீடு பெற்றவரின் சட்டக் கடப்பாடு.

**தீ காப்பீடும் கொதிகலன் காப்பீட்டுத் திட்டமும் ஒன்றிற்கு ஒன்று முரணாக இருப்பதால், போதுமான காப்பை பெற இரு பாலிசிகளுமே எடுக்கப்பட வேண்டும். அனைத்து பொறியியல் பாலிசிகளின் கீழ் வரும் காப்பிடுத் தொகை, நடப்பு மறு நிறுவல் மதிப்பாக இருக்க வேண்டும்.**

3. **மின்னணு சாதன பாலிசி**: இது பல்வேறு வகையான மின்னணு சாதனங்களுக்கும் சி.பி.யு, விசைப் பலகைகள், மானிட்டர்கள், அச்சு எந்திரங்கள், யுபிஎஸ், சிஸ்டம் மென்பொருள் உட்பட்ட முழு கணினி சிஸ்டத்திற்கும் காப்பளிக்கிறது. ஏர் கண்டிஷனிங், சூடாக்கும் மற்றும் மின்மாற்றி போன்ற துணை எந்திரங்களுக்கும்கூட காப்பளிக்கிறது.

தீ காப்பீடு, இயந்திரக் காப்பீடு மற்றும் கொள்ளைக் காப்பீட்டின் ஒருங்கிணைப்பாக இந்த பாலிசி உள்ளது. குறைபாடுள்ள வடிவமைப்பு (எந்த வாரண்டியின் கீழும் வராதது), இயற்கை நிகழ்வுகளின் பாதிப்பு, மின் ஏற்ற இறக்கத்தின் காரணமாக ஏற்படும் குறைச் செயல்பாடு, மோதல் அதிர்வு போன்ற சில்லறை விஷயங்களுக்கும், கொள்ளை, வீட்டுடைப்பு மற்றும் திருட்டுக்கும் இந்த பாலிசி காப்பளிக்கிறது.

இந்த பாலிசி முதலாளி, குத்தகைக்கு கொடுப்பவர் அல்லது வாடகைதாரருக்கு அவர்கள் ஒவ்வொருவரின் பொறுப்பு கடப்பாடுகளைப் பொறுத்துக் கிடைக்கும். இதில் பொதுவாக பல்வேறு வகையான இழப்புகளுக்கும் காப்பளிக்கும் மூன்று பிரிவுகள் உண்டு:

a) **பிரிவு 1:** இயந்திரத்திற்கான இழப்பு மற்றும் சேதம்

b) **பிரிவு 2:** வெளி தரவு ஊடகத்திற்கான இழப்பு மற்றும் சேதம் எ.கா. கணினியின் வெளி ஹார்டு டிஸ்க்குகள்

c) **பிரிவு 3:** அதிகரித்த பணிச்செலவு - 12, 26, 40 அல்லது 52 வாரங்கள் வரை மாற்று சாதனத்தில் தொடர்ந்து தரவு செயலாக்கம் செய்யப்படுவதை உறுதிசெய்ய.

4. **ஒப்பந்ததாரர்களின் தொழிலகம்** மற்றும் **இயந்திர (CPM) பாலிசி:** கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அவர்களுடைய கிரேன்கள், அகழ்விகள் போன்ற அனைத்து வகை இயந்திரங்களையும் கீழ்க்காணும் காரணங்களால் வரும் எதிர்பாராத திடீர் இழப்புகள் அல்லது பழுதுகளுக்குக் காப்பளிக்கக் கூடியது:

a) கொள்ளை, திருட்டு, புயல், தீங்கிழைக்கும் சேதம், கடும்புயல்

b) தீ மற்றும் மின்னல், வெளி வெடிப்புகள், பூகம்பம் மற்றும் பிற இயற்கை இன்னல்கள்

c) தவறாகக் கையாளுதல், கீழே தவறவிடுதல் அல்லது விழுதல், நொறுங்குதல் மற்றும் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக பணியிலிருக்கும்போது தற்செயலாக சேதமடைவது; மூன்றாம் தரப்பு சேதத்திற்கும் நீட்டிக்கப்படலாம்.

இயந்திர வகை மற்றும் அது செயல்படும் இருப்பிடம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் இருக்கும்.

**இயந்திரம் இயங்கும்போது அல்லது நிறுத்தப்பட்ட போது அல்லது சுத்தப்படுத்துவதற்காகவோ அல்லது முழுவதும் பிரித்துச் சீர்செய்யும்போதோ அல்லது அதன் பிறகு மறு இணைப்புச் செய்யும்போதோ காப்பு செயலில் இருக்கும். ஒப்பந்ததாரரின் சொந்த வளாகத்தில் அவை கிடக்கும்போதும் இந்தக் காப்பு பொருந்தும். எவ்வாறாயினும், "இந்தியாவில் எந்த இடத்திலும்**

**பொருந்தும் அடிப்படையில்" உபகரணங்களை உள்ளடக்கிய பெயர்ச்சி பாலிசியும்** 10% **கூடுதல் பிரீமியம் மற்றும் சில நிபந்தனைகளுடன் கிடைக்கிறது.**

5. **சரக்கு இருப்பின் அழிவுக்கான பாலிசி:** குளிர் வைப்பறையின் முதலாளிக்கு (தனியார் அல்லது ஒரு கூட்டுறவு சங்கம்) அல்லது குளிர் வைப்பறையை அழியக்கூடிய பொருட்களின் இருப்பை சேகரித்து வைப்பதற்காக குத்தகைக்கோ அல்ல வாடகைக்கோ எடுப்பவர்களுக்கு, இந்தப் பாலிசி உகந்தது. குளிர்பதன ஆலையின் மற்றும் இயந்திரத்தின் கோளாறினைத் தொடர்ந்தும் வெப்பநிலை உயர்வின் காரணமாகவும், குளிர்பதனிகள் திடீரெனவும் எதிர்பாராமலும் குளிர் வைப்பறையிலிருந்து வெளியேறுவதன் காரணமாகவும் பொருட்கள் கெட்டுப்போகும் மற்றும் அழிந்து போகும் அபாயத்திற்கு எதிராக காப்பளிக்கிறது.

6. **முடித்த கட்டடப் பொறியியல் திட்டங்களின் பராமரிப்புக்கான அபாய பாலிசி** (**Civil Engineering Completed Risk):** -இது பொதுவாக பொறியியல் திட்டங்களை முடித்த பிறகு பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களால் எடுக்கப்படுகிறது. பாலங்கள், உலர் துறைமுகங்கள், துறைமுகங்கள், ஜெட்டி ரயில் பாதைகள், பாறைகள் நிரப்பப்பட்ட அணைகள், கான்கிரீட் அணைகள், மண் அணைகள், கால்வாய்கள், நீர்ப்பாசன அமைப்பு போன்ற பொறியியல் திட்டங்கள இந்த பாலசியின் கீழ் பரிசீலிக்கப்படுகின்றன. காப்பளிக்கப்பட்ட அபாயங்கள் -

    1. தீ
    2. மின்னல்
    3. குண்டு வெடிப்பு / உள்வாங்கல்
    4. கலவரம், கதவடைப்பு மற்றும் தீய நோக்க சேதம்
    5. இரயில்/சாலை அல்லது நீரில் செல்லும் வாகனம் அல்லது விலங்குகளால் ஏற்படும் பாதிப்பு சேதம்
    6. புயல், சூறாவளி, சூறைக் காற்று, கடும்புயல், சுழல், சுழல்காற்று மற்றும் நீரின் அலை நடவடிக்கை

7. நிலம் தாழ்தல் மற்றும் (பாறை உருளுதல் உட்பட) நில சரிவு (Subsidence and Landslide (Including Rockslide) damage)

8. நிலநடுக்கம் தீ மற்றும் அதிர்ச்சி (பூகம்பத்தால் ஏற்பட்ட வெள்ளம் உட்பட), சுனாமி

9. உறைபனி, பனிச்சரிவு, பனி.

## B. திட்ட பாலிசிகள்

இந்த பாலிசிகள் பொதுவாக திட்டம் நடக்கும் காலத்திற்காக வழங்கப்படும் மற்றும் வருடாந்திர அடிப்படையில் இருக்காது.

1. **ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் (C.A.R.) பாலிசி:** சிறு கட்டடங்கள் முதல் பிரமாண்டமான அணைக்கட்டுகள், கட்டடங்கள், பாலங்கள், சுரங்கங்கள் போன்ற கட்டடப் பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் முதல்வர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் "அனைத்து அபாயங்கள்" காப்பினை வழங்குகிறது - இவ்வாறு கட்டுமானத் தளத்தில் காப்பீடு பெற்றவரின் சொத்திற்கு ஏற்படும் எந்த ஒரு திடீர் மற்றும் எதிர்பாரா இழப்பு அல்லது சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது. மூன்றாம் தரப்பின் பொறுப்பு மற்றும் பிற ஆபத்துகளுக்கும் காப்பளிக்கும் வகையில் பாலிசி நீட்டிக்கப்படலாம். திட்டத்தின் தன்மை, திட்டச் செலவு, திட்டக் காலம், புவியியல் இருப்பிடம் மற்றும் பரிசோதனைக் காலம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் விதிக்கப்படும்.

2. எரெக்சன் அனைத்து அபாயங்கள் (**EAR)** பாலிசி: இது கிடங்கிலிடும்-உடன்-நிறுவுதல் (Storage-cum-Erection -SCE) பாலிசி எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு திட்டம் நிறுவப்படும்போது பல்வெறு வெளி அபாயங்களுக்கு அத்திட்டம் ஆளாகக் கூடியதாக இருப்பதால் அதன் முதல்வர் அல்லது ஒப்பந்ததாரருக்கு இது பொருத்தமாக இருக்கும். திட்டம் நடக்கும் இடத்தில் பொருட்கள் இறக்கப்படும்போது தொடங்கி அந்த திட்டம் பரிசோதனை செய்யப்பட்டு, துவங்கப்பட்டு ஒப்படைக்கப்படும்வரை உள்ள திட்டத்தின் ஒட்டுமொத்த காலத்திற்கும் தொடர்ந்து எந்த ஒரு

எதிர்பாரா நிகழ்வுக்கும் இந்த ஒருங்கிணைந்த காப்பீட்டு பாலிசி காப்பளிக்கிறது.

திட்டத்தின் தன்மை, திட்டச் செலவு, திட்டக் காலம், புவியியல் இருப்பிடம் மற்றும் பரிசோதனைக் காலம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் விதிக்கப்படும்.

**தேவைப்பட்டால், இயந்திரங்களையும் பொருட்களையும் எடுத்துச் செல்லும்போது அவற்றை திட்டம் நடைபெறும் இடத்தில் சேர்க்கும்வரை அவற்றிற்கு காப்பளிப்பதற்காக ஒரு கடல்சார் காப்பீடும் எரெக்சன் பாலிசியுடன் சேர்ந்து வழங்கப்படலாம்**.

**c. விளைவு இழப்பு** (Consequential Loss- CL) **பாலிசிகள்**

இந்த வகையான பாலிசிகள் மற்ற இழப்புகளின் விளைவாக ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட வழங்கப்படுகின்றன. இவை 'வணிக இடையூறு' கொள்கைகள் அல்லது 'லாப இழப்பு' கொள்கைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**3. இயந்திர இலாப இழப்பு** (MLOP) **பாலிசி**

இயந்திரப் பழுது அல்லது கொதிகலன் வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக தடைகள் அல்லது தாமதங்கள் ஏற்பட்டு மிகப்பெரிய விளைவில் இழப்புகள் வரக்கூடிய தொழிலகங்களுக்கு இந்தப் பாலிசி பொறுத்தமானது.

பழுது அல்லது இழப்பிற்கு பிறகு அதை மீட்டு கொண்டுவர எடுக்கும் நேரம் ரொம்ப அதிகமாக இருந்தால், அந்த இடைப்பட்ட காலத்தில் உற்பத்திக் குறைவின் காரணமாகவும், உற்பத்திச் செலவு அதிகரிப்பின் காரணமாகவும் ஏற்படும் இலாப இழப்பிற்கு இந்த பாலிசி இழப்பீடு வழங்குகிறது. விதிகளும், நிபந்தனைகளும் மற்றும் தொழில் குறுக்கீட்டு பாலிசியின் காப்பு ஆகியவை இந்த அத்தியாயத்தின் முந்தைய பகுதியில் விளக்கப்பட்ட தீ காப்பீட்டு இழப்பிற்கு பிறகுள்ள வணிக குறுக்கீடு பாலிசி போலவே உள்ளது.

**4. முன்கூட்டியே இலாப இழப்பிற்கான காப்பு (Advance Loss of Profit Cover -ALOP) அல்லது துவக்க தாமத (Delay in Start-up -D.S.U.)பாலிசி**

திட்டத்தின்போது தவறுதலாக நிகழ்ந்த சேதத்தின் காரணமாக திட்டம் தாமதமாவதால் ஏற்படும் நிதிப் பிரச்சனைகளுக்கு எதிராக காப்பளிக்கிறது. எதிர்பார்த்த வருமானம் கிடைக்காத காப்பீடு பெற்றவர் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு திட்டத்தின்மீது அவர்களுக்கு உள்ள பற்றின் அளவிற்கு ஏற்றதாக இருக்கும். திட்டம் உண்மையில் தொடங்கப்படுவதற்கு முன் MCE/EAR/CAR பாலிசியின் ஒரு நீட்டிப்பாக இந்தக் காப்பீடு வழங்கப்படுகிறது.

தவணைக் கடனுக்கான வட்டி, கடனீட்டுப் பத்திரங்கள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் போன்றவற்றுக்கான தொடர்ந்த செலவுகள் மற்றும் சரியான காலத்தில் தொடங்கப்பட்டிருந்தால் எவ்வளவு லாபம் பெற்றிருக்கலாமோ அந்த லாபத்தை இழந்ததினால் ஏற்பட்ட நிதி இழப்புக்கு இந்தப் பாலிசி காப்பு வழங்குகிறது.

பிரீமிய விகிதம் பல்வேறு முக்கிய காரணிகள் மற்றும் கிடைக்கும் மறு காப்பீட்டு ஆதரவு போன்றவற்றைப் பொறுத்து இருக்கும். எதிர்பார்க்கப்பட்ட மொத்த லாபம் மற்றும் இழப்பீடு காலம் போன்றவையும் பிரீமியத் தொகையைத் தீர்மானிப்பதற்கான முக்கிய காரணிகளாகும்.

**சுய-பரீட்சை** 8

துவக்க தாமத பாலிசி ____________ என்றும் அழைக்கப்படுவது-

I. இயந்திர இலாப இழப்புக் காப்பு
II. முன்கூட்டியே இலாப இழப்பு காப்பு
III. ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் காப்பு
IV. ஒப்பந்ததாரர்களின் ஆலை மற்றும் இயந்திர காப்பு

## I. தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு

தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு தொழில்துறையின் சொத்துக்களுக்குக் காப்பளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது - இந்தியாவில் எங்கிருந்தாலும் உற்பத்தி மற்றும் இருப்புவைப்பு வசதிகள் இரண்டுக்குமே ஒரே பாலிசியின் கீழ் காப்பு வழங்குகிறது. பொருட்சேதம் மற்றும் தொழில் தடங்கல் ஆகியவற்றுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

பொதுவாக, பின்வருபவைக்கு பாலிசி காப்பு வழங்குகிறது:

i. தீ மற்றும் குறிக்கப்பட்ட அபாயங்களுக்கு தீ காப்பீட்டு வழக்கின்படி

ii. கொள்ளை (சிறு திருட்டு தவிர)

iii. இயந்திரப் பழுது / கொதிகலன் வெடிப்பு / மின்னணு சாதனம்

iv. மேலே குறிப்பிடப்பட்ட அபாயங்களைத் தொடர்ந்து ஏற்படும் தொழில் தடங்கல்

(குறிப்பு: மேலே உள்ள (c)-ன் கீழ் இன்னல்களைத் தொடர்ந்து ஏற்படும் தொழில் தடங்கல் பேக்கேஜ் காப்பில் சேர்க்கப்படுவதில்லை. கூடுதல் காப்பாக சேர்த்துக் கொள்ளலாம்)

- ✓ தனிப்பட்ட இயக்க (individual operational) பாலிசிகளால் வழங்கப்படும் காப்புகளோடு ஒப்பிடும்போது, இந்த பாலிசி பரந்த அளவில் காப்பளிக்கிறது.
- ✓ தேர்வு செய்த காப்பு, ஈடு அனுபவம், மற்றும் தெரிவுசெய்த கழிக்கக்கூடியவைகள், MLOP-க்கான அபாய மதிப்பீட்டு அறிக்கை போன்றவற்றைப் பொறுத்து இப்பாலிசிக்கான பிரீமிய விகிதம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 9

தொழில்துறை அனைத்து-அபாய காப்பீட்டுத் திட்டத்தினால் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

i. தீ காப்பீட்டு வழக்கின்படி தீ மற்றும் குறிப்பிட்ட இன்னல்கள்

ii. சிறு திருட்டு

iii. இயந்திரம் பழுதாவது

iv. மின்னணு சாதனம்

---

## J. கடல்சார் காப்பீடு

**கடல்சார் காப்பீடு இரு வகைப்படும்**: **கப்பற் சரக்கு மற்றும் கப்பல் தளம்** (hull)**-**

1. **கப்பற் சரக்கு காப்பீடு**

'கடல்சார்' என்ற வார்த்தை கடலில் ஏற்படும் தீங்குகளினால் ஏற்படும் இழப்பினை மட்டுமே குறித்தாலும் கப்பற் சரக்குக் காப்பீடு கூடுதலான காப்பை அளிக்கிறது. இரயில், சாலை, கடல், விமானம் அல்லது பதிவுத் தபால் ஆகியவற்றின் வழியாக நாட்டிற்குள்ளும் நாட்டிற்கு வெளியிலும் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும்போது ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது. பொருள் வகைகள் வைரங்கள் முதல் வீட்டுப் பொருட்கள்வரை, சிமெண்ட், தானியங்கள் போன்ற பெருமளவு பொருட்கள், திட்டங்களுக்கான பெரிய பரிமாண அளவில் வரும் சரக்குகள் போன்றவையாக இருக்கலாம்.

உள்நாட்டு, பன்னாட்டு வர்த்தகத்தில் சரக்கு காப்பீடு முக்கியமான பங்கு வகிக்கிறது. பெரும்பான்மையான விற்பனை ஒப்பந்தங்களுக்கு விற்பவரோ அல்லது வாங்குபவரோ அந்தப் பொருட்களுக்கான இழப்பு அல்லது சேதத்திற்கான காப்பீடை பெறுவது அவசியமாகிறது.

**காப்பீட்டினை யார் எடுப்பது**: விற்பனை ஒப்பந்தத்தைப் பொறுத்து பொருட்களை [கன்சைன்மென்ட்] விற்பவரோ அல்லது வாங்குபவரோ சரக்குக்கு காப்பீடு பெறலாம்.

உலகளாவிய அளவில் பொருந்தக்கூடிய அம்சங்களை கடல்சார் காப்பீட்டு ஒப்பந்தங்கள் கொண்டிருக்க வேண்டும். இதற்கு காரணம், ஒரு நாட்டின் எல்லைகளுக்கு வெளியில் பொருட்களை எடுத்துச் செல்லும்போது இது காப்பளிக்கிறது. பன்னாட்டு வழக்கத்தின் படியும் பாலிசியின் குறிப்பிட்ட பிரிவுகளின்படியும் காப்பு வழங்கப்படுகிறது.

அடிப்படை காப்பீட்டு ஆவணத்தில், பொது நிபந்தனைகள் இருந்தாலும், காப்பீட்டின் செயல் எல்லைகளும் விதிவிலக்குகளும் மற்றும் சிறப்பு விலக்குகளும் நிறுவனம் சரக்கு உட்பிரிவுகள் (Institute cargo Clauses -ICC) என அழைக்கப்படும் தனிப்பிரிவுகளில் இருக்கும். லண்டன் கடற்பொருள் காப்பீடு ஏற்பாளர்களின் (Institute of London Underwriters) நிறுவனத்தினால் இது எழுதப்படுகிறது.

### a) கப்பல் சரக்குக் காப்பீட்டின் கீழுள்ள காப்புகள்

சரக்கு பாலிசிகள் உண்மையில் கடற்பயண காப்பீடுகளாகும். அதாவது, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருள் எடுத்துச் செல்லப்படுவதற்குக் காப்பளிக்கிறது. எனினும், அனைத்துச்

சூழ்நிலையிலும் காப்பீடு பெற்றவர் அவரால் முடிந்த அளவிற்கு கவனமாக நடந்துகொள்ள வேண்டும். அது ஒரு ஏற்கப்பட்ட மதிப்பு (Agreed Value) பாலிசி என்பதே இந்தப் பாலிசியின் முக்கிய கூறாகும். காப்பீடு பெற்றவருக்கும் காப்பீட்டாளருக்கும் இடையில் மதிப்பீடு ஏற்கப்படுகிறது. மோசடி நடந்ததாக சந்தேகப்பட்டாலன்றி பிறகு மறுமதிப்பீடு செய்யப்பட முடியாது.

காப்பீட்டுத் தொகைக்கான விதி CIF + 10% (காப்பீடின் விலை மற்றும் சரக்கு + 10%). இந்த பாலிசி சுதந்திரமாக உரிமை மாற்றம் செய்யகூடியது என்பது இதன் மற்றொரு தனித்த அம்சம்.

விற்பனை ஒப்பந்தத்தின் வரையறைகளைப் பொறுத்து, வழக்கமாக பொருட்கள் பாலிசியில் குறிப்பிடப்பட்ட பண்டகசாலையிலிருந்து வெளியேறும் நேரத்திலிருந்து இந்தக் காப்பீடு தொடங்குகிறது மற்றும் பாலிசியில் குறிக்கப்பட்ட சேரும் இடத்தினை அடைந்ததும் முடிவடைகிறது.

நிபந்தனைகளும் வரையறைகளும் இருவராலும் நிர்வகிக்கப்படலாம்;

i. உள்நாட்டிற்குள் எடுத்துச் செல்வதற்கு உள்நாட்டு டிரான்சிட் கிளாஸ் (ITC) A, B அல்லது C
ii. கடற் பயணத்திற்கு இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் (ICC) A, B, அல்லது C
iii. வான் வழியாக எடுத்துச் செல்வதற்கு இன்ஸ்டிடியூட் கார்கோ (Air) கிளாஸ் - A

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் C ஒரு வாகனம் அல்லது சரக்கை ஏற்றிச் செல்லும் கப்பலில் பின்வரும் காரணங்களால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு குறைந்தபட்ச காப்பீட்டினை வழங்குகிறது:

i. தீ அல்லது வெடிப்பு
ii. தடம் புரளுதல் அல்லது வண்டி தலைகீழாகக் கவிழ்வது
iii. கரைதட்டி நிற்பது, நிலந்தட்டுவது அல்லது கப்பல் மூழ்குவது (கப்பலைப் பொறுத்தவரை)
iv. வெளிப் பொருளுடன் மோதுவது

v. நெருக்கடிநிலையில் துறைமுகத்தில் சரக்குகளை வெளியேற்றுதல்

vi. பொது சராசரி தியாகம் (General average sacrifice)

vii. சரக்குகளை கடலில் எறிதல் (jettison)

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் B-யானது C-யைவிடப் பரந்தது. C-யில் காப்பிடப்பட்ட அபாயங்களோடு பின்வரும் காரணங்களால் ஏற்படும் இன்னல் அல்லது சேதத்திற்கும் காப்பளிக்கிறது:

i. கடவுளின் செயல் (AOG) - பூகம்பம், எரிமலை வெடிப்பு மற்றும் மின்னல் போன்ற இன்னல்கள்

ii. உள்நாட்டிற்குள் எடுத்துச் செல்லும்போது பாலங்கள் உடைவது

iii. கடல்வழியாக எடுத்துச் செல்லும்போது கடலுக்குள் அடித்துச் செல்லப்படுவது மற்றும் ஸ்லிங் இழப்பு (sling loss)

iv. கப்பலுக்குள் நீர் புகுவது.

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் A இருப்பதிலேயே பரந்த காப்பாகும். B மற்றும் C-யின் அனைத்து இன்னல்களுக்கும் மற்றும் பின்வரும் குறிப்பிடப்பட்ட சில விலக்குகளைத் தவிர பிற எந்த அபாயத்தினாலும் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கும் காப்பளிக்கிறது:

i. காப்பீடு பெற்றவர் தெரிந்தே செய்யும் செயலால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

ii. சாதாரண கசிவு, முறிவு, தேய்வும் நைவும் அல்லது எடை/பருமன் இழப்பு

iii. பேக்கிங்கில் பற்றாக்குறை

iv. உள்ளார்ந்த தீயொழுக்கம்

v. தாமதங்கள்

vi. முதலாளிகளின் நொடிப்பினால் ஏற்படும் இழப்பு

vii. அணு இன்னல்கள்

அனைத்து உள்நாட்டு விமான, கடல்வழி பிரிவுகளுக்கும் இந்த விலக்குகள் பொதுவானவை. நிலக்கரி, எண்ணெய் மற்றும் தேநீர்

போன்ற குறிப்பிட்ட பண்டங்களின் வியாபாரத்திற்கும்கூட தனித்தனி பிரிவுகள் உள்ளன. போர், வேலைநிறுத்தங்கள், கலவரங்கள், மக்கள் கிளர்ச்சி மற்றும் தீவிரவாதம் போன்றவற்றிக்குக் காப்பளிக்கும் விதத்தில் கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் கடல்சார் காப்பீடு நீட்டிக்கப்படலாம். கடல்சார் மற்றும் விமானப் போக்குவரத்துப் (Marine and Aviation) பாலிசி மட்டுமே போர் இன்னல்களுக்கு காப்பீடு வழங்குகிற ஒரே வகை காப்பீடு ஆகும்.

**முக்கியமானவை**

ஒரு கடல்சார் பாலிசி, தரநிலை பாலிசி மற்றும் பாலிசியுடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளின்கீழ் காப்பிடப்படும் இன்னல்கள் மூன்று வகைகளுக்குள் வருகின்றன:

i. கடல்சார் இன்னல்கள்

ii. புறநிலை இன்னல்கள் மற்றும்

iii. போர், வேலை நிறுத்த கலவரம், மக்கள் புரட்சி மற்றும் தீவிரவாத இன்னல்கள்

## b) கடல்சார் பாலிசிகளின் பல்வேறு வகைகள்

### i. குறிப்பிட்ட பாலிசி

ஒரே ஒரு கப்பலில் சரக்கை ஏற்றுவதை மட்டுமே இந்தப் பாலிசி காப்பிடுகிறது. ஒரு குறிப்பிட்ட கப்பல் பயணம் அல்லது எடுத்துச் செல்லலுக்கு மட்டுமே இது செல்லுபடியாகும். தொடர்ந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் அல்லது உள்நாட்டு சரக்குகளை அனுப்புவதில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு திறந்த (open) பாலிசி போன்ற சிறப்பு பாலிசிகள் வசதியாக இருக்கும்.

### ii. திறந்த பாலிசி

நாட்டிற்குள் சரக்குகளை எடுத்துச் செல்வது ஒரு திறந்த பாலிசியின்கீழ் காப்பளிக்கப்படலாம். பாலிசி ஒரு ஆண்டுக்குச் செல்லத்தக்கதாகவும், இந்த காலத்தில் அனுப்பப்படும் அனைத்து சரக்குகளை பற்றும் காப்பீடு பெறுபவர் 15 நாட்களுக்கு ஒருமுறை, மாதாந்திரம் அல்லது காலாண்டு அடிப்படையில் அவர்களுக்கிடையில் ஏற்கப்பட்டது போன்று காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

### iii. திறந்த காப்பு

திறந்த காப்பு என்பது ஒரு வருடத்திற்கான ஒப்பந்தமாகும், இது அதிக எண்ணிக்கையிலான ஏற்றுமதி/அனுப்புதல்களை ஈடுசெய்ய காப்பீடு செய்தவருக்கு தொடர்ச்சியான காப்பை அளிக்கிறது. சரக்குகளின் பிரீமியம் காப்பீட்டாளரால் பராமரிக்கப்படும் அந்தந்த பண வைப்பு கணக்கிலிருந்து சரிசெய்யப்படும். தொடர்ச்சியான வர்த்தகம் கொண்ட பெரிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு திறந்த காப்புகள் வழங்கப்படுகின்றன.

காப்பீட்டின் வரையறைகள், ஒரு ஆண்டுக்கு அனுப்பப்படும் கப்பல் சரக்கு அனுப்புதல்களுக்கான பிரீமிய விகிதம் ஆகியவற்றை திறந்த காப்புகள் குறிப்பிடுகிறது. திறந்த காப்பு என்பது ஒரு பாலிசி அல்ல அது ஸ்டாம்ப் இடப்படுவதுமில்லை. ஒரு தகுந்த மதிப்பிற்கான சரியான முறையில் ஸ்டாம்ப் செய்யப்பட்ட

ஒவ்வொரு அறிவிப்பிற்கும் காப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

iv. **தீர்வை வரி மற்றும் அதிகரிக்கப்பட்ட மதிப்புக் காப்பீடு**

சுங்கத் தீர்வை செலுத்தியதால் அல்லது சரக்கு சேருமிடத்தினை அடைந்த நாளில் அங்கு அவற்றின் சந்தை மதிப்பு உயர்வால் சரக்கின் மதிப்பு உயர்ந்தால் இந்த பாலிசிகள் கூடுதல் காப்பினை வழங்குகின்றன.

2. **கப்பல் தள காப்பீடு (Marine Hull insurance)**

இங்கு ஹல் ('Hull') என்பது ஒரு கப்பல் அல்லது வேறு நீர் போக்குவரத்து கலனின் உடற்பகுதியைக் குறிக்கிறது.

பல்வேறு நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய விதத்தில் உள்ள பொருத்தமான பன்னாட்டு விதிகளின்படி கப்பல் தள காப்பீடு செய்யப்படுகிறது. கப்பல் தள காப்பீடு இருவகைப்படும்:

a) **ஒரு குறிப்பிட்ட கடல் பயணத்திற்கான காப்பு: இங்கு பயன்படுத்தப்படும் விதிகள் இன்ஸ்டிடியூட் வாயேஜ் கிளாசஸ் என அழைக்கப்படுகின்றன.**

b) **ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான காப்பு: வழக்கமாக ஒரு ஆண்டாக இருக்கும். இங்கு பயன்படுத்தப்படும் விதிகள் இன்ஸ்டிடியூட் (நேர) கிளாசஸ் என அழைக்கப்படுகின்றன.**

c) போர் அபாயங்கள் சிறப்பு விதிமுறைகளால் நிர்வகிக்கப்படுகின்றன மற்றும் சேகரிக்கப்பட்ட பிரீமியங்கள் மத்திய அரசிடம் வரவு வைக்கப்படும்.

**தகவல்**

கப்பல் தள காப்பீட்டில் கீழ்க்காணும் காப்பீடுகளும் அடங்கும்:

i. ஓடங்கள், விசைப்படகுகள், பயணிகள் கப்பல்கள் போன்ற உள்நாட்டு கலன்கள்.
ii. தூர்வாரிகள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)
iii. மீன்பிடி படகுகள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)

iv. பாயமரக் கலங்கள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)
v. செய்கரைகள் மற்றும் கப்பல் துறைகள்
vi. கட்டுமானம் செய்யப்படும் கலன்கள்

**கப்பல் முதலாளிக்கு கப்பல்மீது மட்டுமல்லாமல், காப்பீடு செய்யப்பட்ட காலத்தில் எடுத்துச் செல்லப்படும் சரக்கு மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீதும் காப்பிடுப் பற்று** உள்ளது. கப்பல் முதலாளிக்கு சரக்குக்கட்டணத்தின் மீதுள்ள காப்பீடுப் பற்றுடன் அந்தக் கப்பலுக்குள் கடைகள் மற்றும் சாமான்கள் போன்ற பிற தேவையான வசதிகளை ஏற்படுத்த அவர் செய்த செலவிற்கும் காப்பளிக்கப்படுவதில் ஆர்வமாக உள்ளார். **இத்தகைய செலவுகள் பட்டுவாடாக்கள் (disbursements) என அழைக்கப்படுகின்றன. கப்பல் தள பாலிசியுடன் சேர்த்து குறிப்பிட்ட காலத்திற்கு இவையும் காப்பிடப்படுகின்றன.**

**முக்கியமானவை**

**விமானப் போக்குவரத்துப் காப்பீடு**: விமானங்களுக்கும் ஒரு ஒருங்கிணைந்த பாலிசி உள்ளது. விமானத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு காப்பளிப்பதோடு, விமானத்தை இயக்கும்போது ஏற்படும் மூன்றாம் தரப்புக்கும் பயணிகளுக்கும் உரிய சட்டப்பூர்வ கடப்பாடுகளுக்கும் காப்பளிக்கிறது.

**சுய-பரீட்சை** 10

காப்பீட்டின் எந்த பிரிவு போர் இன்னல்களுக்குக் காப்பளிக்கிறது?

I. கடல்சார் பாலிசிகள்
II. விமானப்போக்குவரத்து பாலிசிகள்
III. மேலுள்ள இரண்டும்
IV. மேலுள்ள எதுவும் இல்லை

## K. கடன்பாடு பாலிசிகள்

ஒருவர் எவ்வளவு கவனமாக இருந்தாலும், விபத்துக்களை முற்றிலும் தவிர்க்க இயலாது. இதனால் தனக்கு காயமோ, தன் சொத்துக்கு சேதமோ ஏற்படலாம். அதே நேரம் மூன்றாம் தரப்புக்கும் காயத்தையும்

அவர்களுடைய சொத்துக்குச் சேதத்தையும் ஏற்படுத்தலாம். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அத்தகைய இழப்புக்கு இழப்பீடு கோருவார்கள்.

சாக்லேட்டுகள் அல்லது மருந்துகள் போன்ற தயாரிக்கப்பட்டு விற்கப்பட்ட பொருளில் உள்ள குறைபாட்டினால் நுகர்வோருக்கு ஏற்படும் தீமையினாலும் கடன்பாடு உருவாகலாம். அதேபோன்று, ஒரு நோயாளிக்குச் செய்யும் தவறான நோயறிதல் / சிகிச்சை அல்லது தனது கட்சிக்காரருக்காக வாதிடும் ஒரு வழக்கறிஞர் தவறான முறையில் கையாண்டததற்காகவும் கடன்பாடு உருவாகலாம்.

அத்தகைய எல்லா சூழ்நிலைகளிலும், மூன்றாம் தரப்போ, வாடிக்கையாளரோ அல்லது ஒரு நோயாளியோ பாதிக்கப்பட்டதற்காக இழப்பீடு கோரும்போது, மூன்றாம் தரப்பு கொடுத்த வழக்குகளுக்கு இழப்பீடை அளிக்க அல்லது ஈடுக்கோருபவர் தாக்கல் செய்த வழக்குகளை நடத்துவதற்கான செலவுகளைச் சந்திப்பது தேவைப்படலாம். வேறு வார்த்தையில் கூறுவதானால், செலுத்தும் கடன்பாடிலிருந்து ஒரு நிதி இழப்பு உருவாகிறது. அத்தகைய கடன்பாடு இருப்பதும் அளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் அளவும் மற்றும் அதற்குக் காரணம் கவனமின்மையா /மோசடியா என்பது உரிமையியல் நீதி மன்றத்தினால் (civil court) முடிவு செய்யப்படும். கடன்பாடு பாலிசிகள் அத்தகைய கடன்பாடுகளுக்குக் காப்பளிக்கின்றன. சில கடன்பாடு காப்பீட்டுத் திட்டங்களைப் பற்றிப் பார்ப்போம்.

**சட்டப்படியான கடப்பாடு**

சில சட்டங்கள் அல்லது சட்ட விதிகள் இழப்பீடு தருவதை கட்டாயமாக்குகின்றன. அத்தகைய சட்டங்களாவன:

- ✓ பொதுக் கடன்பாடு காப்பீட்டுச் (Public Liability Insurance Act) சட்டம், 1991 மற்றும்
- ✓ தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Employees Compensation Act) 1923, 2010-இல் திருத்தப்பட்டது

அத்தகைய கடன்பாடுகளுக்காக காப்பளிப்பதற்கு பாலிசிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

**1. கட்டாய பொது கடன்பாடு பாலிசி (Compulsory Public Liability)**

பொது கடன்பாடு காப்பீட்டுச் சட்டம் 1991 மூன்றாம் தரப்பு காயமடைந்தாலோ அல்லது அவருடைய உடைமை சேதமுற்றாலோ தீங்கிழைக்கும் பொருட்களைக் கையாளுவோருக்கு தவறு செய்யாத அடிப்படையில் அவருக்கு அவற்றிற்கான கடன்பாடினை விதிக்கிறது. தீங்கிழைக்கும் பொருட்களின் பெயர்களும் அவற்றின் அளவுகளும் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. ஒரு நபருக்குச் செலுத்த வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் கீழே காட்டப்பட்டுள்ளன:

## செலுத்தத்தக்க இழப்பீடு

| | |
|---|---|
| மரணத்தை ஏற்படுத்திய விபத்து | ரூ. 25,000 |
| நிரந்தர மொத்த இயலாமை | ரூ. 25,000 |
| நிரந்தர பகுதி இயலாமை | இயலாமையின் %-ன் அடிப்படையில் ரூ. 25,000 |
| தற்காலிக பகுதி இயலாமை | மாதம் ரூ. 1000 வீதம் அதிகபட்சம் 3 மாதங்களுக்கு |
| உண்மையான மருத்துவச் செலவுகள் | அதிகபட்சம் ரூ. 12,500 வரை |
| சொத்திற்கு ஏற்பட்ட உண்மையான சேதத்திற்கான வரம்பு | ரூ. 6,000 |

AOA (ஏதேனும் ஒரு விபத்து) வரம்பு மற்றும் வாடிக்கையாளரின் வருமானத்தின் அடிப்படையிலேயே பிரீமியம் இருக்கும். இக்காப்பீட்டின் சிறப்பு அம்சம் என்னவென்றால் காப்பீடு பெறுபவர் கட்டாயமாக பிரீமியத்திற்குச் சமமான தொகையை சுற்றுச்சூழல் நிவாரண (Environment Relief) நிதிக்குப் பங்களிப்பாக செலுத்தவேண்டும். மூன்றாம் தரப்பில் மிக அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால், செலுத்தத்தக்க நிவாரணத் தொகை ஏதாவதொரு விபத்து ஏ.ஓ.ஏ (AOA) தொகையை மிஞ்சினால். மீதமுள்ள தொகை அந்த நிதியினால் வழங்கப்படும்.

### 2. பொது கடன்பாடு (Public Liability) பாலிசி (தொழில்சார் / தொழில்சாரா இன்னல்கள்)

இந்த வகையான பாலிசி காப்பீடு பெற்றவரின் தவறு / கவனமின்மையின் காரணமாக மூன்றாம் தரப்புக்கு ஏற்பட்ட காயம்

அல்லது சொத்து சேதத்தினால் [மூன்றாம் தரப்பு சொத்து காப்பீடு-TPPI அல்லது மூன்றாம் தரப்பு சொத்து சேதம்-TPPD] எழும் கடன்பாடிற்குக் காப்பளிக்கின்றன.

தொழில்துறைசார் அபாயங்களுக்கும் மற்றும் ஹோட்டல்கள், திரையரங்குகள், அரங்குகள், குடியிருப்பு வளாகங்கள், அலுவலகங்கள், விளையாட்டு அரங்கங்கள், பண்டகசாலைகள் மற்றும் கடைகள் போன்றவற்றை பாதிக்கும் தொழில்துறை சாராத அபாயங்களுக்கும் தனித்தனி பாலிசிகள் உள்ளன. **TPPI/TPPD**-ஐ பொறுத்தவரை இந்தியச் சட்டப்படி கோரும் நபரின் கிரயங்கள், கட்டணங்கள் மற்றும் .செலவுகள் உட்பட அனைத்திற்கும் இழப்பீடு அளிப்பதற்கான சட்டப்பூர்வ கடப்பாட்டிற்குக் காப்பளிக்கிறது.

பாலிசி காப்பீடு தராதவை:

a) உற்பத்திப் பொருட்களுக்கான கடன்பாடு

b) மாசுக்கான கடன்பாடு

c) போக்குவரத்து மற்றும்

d) பணியாளர்கள் / தொழிலாளர்களுக்கு ஏற்படும் காயங்கள்

### 3. உற்பத்திப் பொருட்களுக்கான கடன்பாடு (Products Liability) பாலிசி

இப்போது உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் உற்பத்திப் பொருட்கள் மிக அதிக வகைகளில் இருப்பதால் உற்பத்திப் பொருட்களின் கடன்பாடு காப்பீட்டுக்கான தேவை அதிகரித்துள்ளது (எ.கா. கேன்களில் அடைக்கப்பட்ட உணவுகள், காற்றுச் செலுத்தப்பட்ட நீர் (aerated waters), மாத்திரைகள் மற்றும் ஊசி மருந்துகள், மின் சாதனங்கள், தொழில்சாதனங்கள், வேதிப்பொருட்கள் போன்றவை). உற்பத்திப் பொருளில் உள்ள ஒரு குறைபாடு, மூன்றாம் தரப்புக்குச் மரணத்தை, உடல் காயத்தை அல்லது நோயை அல்லது அவருடைய சொத்துக்குச் சேதத்தை ஏற்படுத்தினால், ஒரு ஈடு எழ வாய்ப்புள்ளது. காப்பீடு பெற்றவரின் இந்தக் கடன்பாடுக்கு உற்பத்திப் பொருள் பாலிசி காப்பளிக்கிறது.

இக்காப்பு ஏற்றுமதிக்கும் உள்ளூர் விற்பனைக்கும் கிடைக்கும்

### 4. மின்தூக்கி (Lift) (மூன்றாம் தரப்பு) கடன்பாடு காப்பீடு

மின்தூக்கிகளின் செயல்பாடு மற்றும் அவற்றின் பயன்பாட்டிலிருந்து எழும் கட்டிட உரிமையாளர்களின் கடன்பாடுகளுக்கு இந்த பாலிசி இழப்பீட்டினை வழங்குகிறது. அது காப்பளிக்கும் சட்டப்பூர்வ கடன்பாடுகளாவன:

a) எந்த ஒரு நபரின் (காப்பீடு பெற்றவரின் ஊழியர்களைத் தவிர) சாவு / உடல் காயம்

b) சொத்துக்கு ஏற்பட்ட சேதம் (காப்பீடு பெற்றவரின் அல்லது ஊழியர்களின் சொத்துக்கள் தவிர)

இழப்பீட்டு வரம்பு, ஏதாவது ஒரு நபர், ஏதாவது ஒரு விபத்து மற்றும் ஏதாவது ஒரு ஆண்டு ஆகியவற்றைப் பொறுத்து பிரீமிய விகிதங்கள் இருக்கும்.

## 5. நிபுணத்துவ கடன்பொறுப்பு (Professional Liability)

தங்கள் நிபுணத்துவப் பணிகளை நிறைவேற்றும்போது கவனமின்மையின் காரணமாக எழும் சேதங்களுக்கான நிபுணர்களின் சட்டப்பூர்வ கடப்பாடுகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் நிபுணத்துவ கடன்பொறுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள், மருத்துவமனைகள், பொறியியலாளர்கள், கட்டடக் கலை வல்லுனர்கள், பட்டயக் கணக்காளர்கள், நிதி ஆலோசகர்கள், வழக்குறைஞர்கள், காப்பீட்டுத் தரகர்கள் போன்றவர்களுக்கு இந்தக் காப்பு கிடைக்கும்.

## 6. இயக்குனர்கள் மற்றும் அதிகாரிகள் கடன்பாடு பாலிசி

ஒரு நிறுவனத்தின் இயக்குனர்களும் அதிகாரிகளும் நம்பிக்கையான பொறுப்பான பதவிகளில் உள்ளனர். அவர்கள் பங்குதாரர்கள், தொழிலாளர்கள், கடனளித்தவர்கள் மற்றும் நிறுவனத்தின் பிற உரிமையாளர்களுக்கு நிறுவனத்தின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதிலும் மேற்பார்வையிடுவதிலும் அவர்கள் செய்த தவறான செயல்களினால் ஏற்பட்ட சேதத்தை வழங்குவதற்கு பொறுப்பாக்கப்படலாம். அத்தகைய கடன்பொறுப்புகளுக்கு காப்பளிக்கும் வகையில் நிறுவனத்தின் அனைத்து இயக்குனர்களுக்கும் காப்பளிக்கும் விதத்தில் ஒரு பாலிசி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 7. தொழிலாளர்களின் இழப்பீட்டுக் (Employee's Compensation) காப்பீடு

ஒரு தொழிலாளி பணி செய்யும் சமயத்தில் மற்றும் அந்த பணி காரணமாக விபத்து மூலம் தனிப்பட்ட காயமோ நோயோ ஏற்பட்டால், தனது ஊழியர்களுக்கு காப்பீடு பெற்றவர் அளிக்க வேண்டிய சட்டப்பூர்வ கடன்பாடுக்கு இந்தப் பாலிசி இழப்பீடு வழங்குகிறது. இது **தொழிலாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு எனவும் அழைக்கப்படுகிறது.**

சந்தையில் இரு வகையான காப்பீடுகள் நடைமுறையில் உள்ளன:

a) **அட்டவணை அ:** தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923, (பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923), மரணம் விளைவிக்கும் விபத்துச் சட்டம் (Fatal Accident), 1855 மற்றும் பொதுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் ஊழியர்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கான சட்டப்பூர்வ கடன்பாடிற்கான இழப்பீடு.

b) **அட்டவணை ஆ**: மரணம் விளைவிக்கும் விபத்துச் (Fatal Accident) சட்டம், 1855 மற்றும் பொதுச் சட்டத்தின்கீழ் ஏற்படும் சட்டப்பூர்வ பொறுப்பிற்கான இழப்பீடு.

முன்மொழிவுப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட தொழிலாளரின் கணக்கிடப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் பிரீமிய விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது.

பாலிசி பின்வருவதற்கு காப்பளிக்கும் வகையில் நீட்டிக்கப்படலாம்:

i. ஒரு குறிப்பிட்ட தொகை அளவிற்கு காப்பீடு பெற்றவர் தொழிலாளரின் காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகச் செய்யும் மருத்துவ மற்றும் மருத்துவமனைச் செலவுகள்

ii. சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள தொழில்சார்ந்த நோய்களுக்கான கடன்பாடு

iii. ஒப்பந்ததாரர்களின் ஊழியர்களுக்கான கடன்பாடு

**சுய-பரீட்சை** 11

பொது கடன்பொறுப்புக் காப்பீட்டுச் சட்டம், 1991-ன்கீழ், மரணமில்லாத விபத்துகளில் ஏற்படும் உண்மையான மருத்துவச் செலவுகளுக்கு எவ்வளவு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்?

I. ரூ.6,250

II. ரூ.12,500

III. ரூ.25,000

IV. ரூ.50,000

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் **III.**

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் **I.**

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் **IV.**

**பதில் 4** - சரியான பதில் விருப்பம் **II.**

**பதில் 5** - சரியான பதில் விருப்பம் **I.**

**பதில் 6** - சரியான பதில் விருப்பம் **IV.**

**பதில் 7** - சரியான பதில் விருப்பம் **III.**

**பதில் 8** - சரியான பதில் விருப்பம் **II.**

**பதில் 9** - சரியான பதில் விருப்பம் **II.**

**பதில் 10** - சரியான பதில் விருப்பம் III.

**பதில் 11** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் G-05

# பொது காப்பீட்டின் ஈடுக்கோரல்கள்

## அத்தியாய அறிமுகம்

எந்த ஒரு காப்பீட்டு ஒப்பந்தத்தின் மையப் பாகமாகவும் இருப்பது தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழி ஆகும், அதாவது, இழப்பு ஏற்படும்போது காப்பீடு பெற்றவருக்கு இழப்பீடு வழங்குவதற்கான உறுதிமொழி. ஈடுக்கோரல் தீர்வின் முழுச் செயல்முறையையும் புரிந்துகொள்வதை எளிதாக்கும் வகையில், இழப்பு ஏற்பட்ட நேரத்திலிருந்து உள்ளடங்கியுள்ள ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து இந்த அத்தியாயம் தெரிவிக்கிறது. மேலும், இது காப்பீடு பெறுபவர் அல்லது காப்பீடு அளிப்பவர் மறுக்கப்பட்ட ஈடுக்கோரல்களைக் கையாளும் முறையையும் விளக்குகின்றது

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறை

B. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் பங்கு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

1. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறைகளின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்க முடியும்
2. இழப்பு தெரிவித்தலுக்கான நடைமுறைகளை விவரிக்க முடியும்
3. ஈடுக்கோரல் விசாரணை மற்றும் மதிப்பீட்டினை கணிக்க முடியும்
4. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்
5. ஈடுக்கோரல் படிவங்களின் உள்ளடக்கங்களை விளக்கிக் கூற முடியும்
6. ஈடுக்கோரல் சரிக்கட்டுதல்கள் மற்றும் தீர்வை வரையறுக்க முடியும்

## A. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறை

### 1. ஈடுக்கோரல் தீர்வின் முக்கியத்துவம்

காப்பீட்டு நிறுவனத்தின் மிக முக்கியமான செயல்பாடு, ஏதேனும் இழப்புச் சம்பவம் ஏற்படும்போது பாலிசிதாரர்களின் ஈடுக்கோரல்களைத் தீர்ப்பது ஆகும். பாலிசிதாரருக்கு பணம் செலுத்துவதன் மூலமோ அல்லது காப்பீடு பெற்றவர் சார்பாக மூன்றாம் தரப்பினருக்கு இழப்பீடை செலுத்தியோ, காப்பீடு அளிப்பவர் உடனடியான, நியாயமான மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதன் மூலம் இந்த உறுதிமொழியை நிறைவு செய்கிறார்.

பொதுக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றின் போர்ட் ரூமில் "முடிந்தால் பணம் செலுத்தவும்; தேவைப்பட்டால் நிராகரிக்கவும்" என்ற வாசகம் பொதிக்கப் பட்டுள்ளது. அதுதான் உன்னத காப்பீட்டு வணிகத்தின் மெய்க்கருத்தாக உள்ளது.

**நிபுணத்துவத்துடன் ஈடை தீர்ப்பது என்பது ஒரு காப்பீட்டு நிறுவனத்துக்கான மிகப்பெரிய விளம்பரமாக கருதப்படுகின்றது.**

#### a) செயல்விரைவு

காப்பீடு பெற்றவர் ஒரு கார்ப்பரேட் வாடிக்கையாளரோ அல்லது தனிநபரோ, யாராக இருந்தாலும், அல்லது இழப்பின் அளவு பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும், ஈடுக்கோரல்களை விரைவாக தீர்ப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். இழப்பு ஏற்பட்ட பிறகு முடிந்தவரை விரைவில் பாலிசிதாரருக்கு காப்பீடில் கிடைக்கும் இழப்பீடு தேவைப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர் விரைவாக பணம் பெற்றால், அது அவருக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும். காப்பீடு பெற்றவருக்கு மிகவும் தேவைப்படும் சமயத்தில் இழப்பு ஏற்பட்ட பிறகு முடிந்தவரை விரைவில் ஈடு தொகையைச் செலுத்துவது காப்பீட்டு நிறுவனத்தின் கடமையாகும்.

#### b) நிபுணத்துவம்

காப்பீட்டு அதிகாரிகள் ஒவ்வொரு ஈடுக்கோரலையும் அதன் தகுதிகளை கொண்டு கருதுகிறார்கள், மேலும் பின்வரும்

கேள்விகளுக்கு விடை அளிக்கும் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்யாமல் ஈடுக்கோரலை நிராகரிப்பதற்கு ஒருதலைப்பட்சமான அல்லது முன்-கருதப்பட்ட கருத்துக்களைப் பயன்படுத்துவதில்லை.

i. இழப்பீடு உண்மையாகவே ஏற்பட்டதா?

ii. அவ்வாறெனில், இழப்பை உருவாக்கிய சம்பவம் உண்மையிலேயே சேதத்தை ஏற்படுத்தியதா?

iii. இந்த சம்பவத்தின் காரணமாக நிகழ்ந்த சேதத்தின் அளவு

iv. இழப்புக்கான காரணம் என்ன?

v. இழப்பு இந்த பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்டுள்ளதா?

vi. ஒப்பந்தம் / பாலிசி நிபந்தனைகளின் கீழ் இந்த ஈடுக்கோரல் தொகை செலுத்த வேண்டியதா?

vii. அவ்வாறெனில், எவ்வளவு செலுத்த வேண்டும்?

இந்த அனைத்துக் கேள்விகளுக்கான விடைகளையும் காப்பீட்டு நிறுவனம் கண்டுபிடிக்க வேண்டும்.

ஈடுக்கோரல்களைச் செயல்படுத்துதல் என்பது மிக முக்கியமான நடவடிக்கையாகும். பாலிசியின் கீழ் 'செலுத்த வேண்டிய' அனைத்து ஈடுக்கோரல்களும் விரைவாக செலுத்தப்பட்டு, செலுத்தக் கூடாததை செலுத்தாது இருப்பதையும் உறுதி செய்வதற்காக அனைத்து ஈடுக்கோரல் படிவங்கள், நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளும் நிறுவனத்தால் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

முகவர், காப்பீடு பெற்றவருக்கு பழக்கமான நிறுவனத்தின் பிரதிநிதி என்பதால், தொடர்புடைய அனைத்துப் படிவங்களும் முறையாக நிரப்பப்பட்டு, இழப்பு ஏற்பட்டதற்குச் சான்றாக உள்ள அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டு மற்றும் அனைத்து பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் உரிய காலத்தில் பின்பற்றப்பட்டு நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டதை அவர் உறுதி செய்துகொள்ள வேண்டும். இழப்பு சமயத்தில் முகவரின் பங்கு குறித்து முன்பே விவரிக்கப்பட்டுள்ளது.

## 2. இழப்பை பற்றி தெரிவிப்பது அல்லது அறிவிப்பு

இழப்பு குறித்து காப்பீட்டாளருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று பாலிசி நிபந்தனை கூறுகின்றது. உடனடியாக தெரிவிப்பது, ஒரு இழப்பு குறித்து அதன் தொடக்க நிலைகளிலேயே ஆய்வு செய்வதற்கு காப்பீட்டாளருக்கு உதவும். தாமதம் ஏற்படுத்துவது இழப்பு தொடர்பான பயனுள்ள தகவல்களை இழந்துவிட காரணமாக இருக்கலாம். மேலும், இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதற்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இது காப்பீட்டாளருக்கு உதவி செய்கின்றது. இழப்பு அறிவிப்பு நியாயமாக முடிந்தவரை விரைவில் தெரிவிக்கப்பட வேண்டும்.

தொடக்கச் சரிபார்ப்பு / நுண்ணாய்வு முடிந்தபிறகு, ஈடுக்கோரலுக்கு ஒரு எண் வழங்கப்பட்டு, அது பாலிசி எண், காப்பீடு பெற்றவர் பெயர், இழப்பு மதிப்பீட்டுத் தொகை, இழப்பு ஏற்பட்ட தேதி போன்ற விவரங்களுடன் ஈடுக்கோரல் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றது, ஈடுக்கோரல் இப்பொழுது செயலாக்கப்பட தயாராக உள்ளது.

**குறிப்பிட்ட வகை பாலிசிகளின் கீழ் (எ.கா. கொள்ளை) காவல்துறை அதிகாரிகளுக்கும் அறிக்கை வழங்கப்பட வேண்டும். சரக்கு இரயில் போக்குவரத்து பாலிசிகளின் கீழ், இரயில்வே துறையினருக்கு அறிவிப்பு வழங்க வேண்டும்.**

## 3. விசாரணையும் மதிப்பீடும்

### a) மதிப்பாய்வு

காப்பீடு பெற்றவரிடமிருந்து ஈடுக்கோரல் படிவத்தைப் பெற்றதும், இழப்பின் விசாரணை மற்றும் மதிப்பீடு குறித்து காப்பீட்டாளர்கள் முடிவு செய்கிறார்கள். ஈடுக்கோரல் தொகை குறைவாக இருந்தால், **இழப்புக்கான காரணம் மற்றும் அளவு குறித்து தீர்மானிப்பதற்கான** விசாரணை காப்பீட்டாளரின் அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றது.

மற்ற ஈடுக்கோரல்களின் **விசாரணை**, இழப்பு மதிப்பீட்டில் வல்லுநர்களாக இருக்கும் சுயாதீன உரிமம் பெற்ற தொழில்முறை ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்படும். சுயாதீன ஆய்வாளர்களால்

மேற்கொள்ளப்படும் இழப்பு மதிப்பீடானது, காப்பீடு அளிப்பவர்கள் மற்றும் காப்பீடு பெறுபவர் ஆகிய இருவருமே உரிமையுள்ள நபர்கள் என்பதால், சுயாதீனமான தொழில்முறை நபரின் நடுநிலையான கருத்து இரண்டு தரப்பினராலும், மேலும் ஏதேனும் சர்ச்சை ஏற்படும்போது நீதிமன்றத்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடின் அடிப்படையில் அமைந்துள்ளது.

### b) ஈடுக்கோரல் மதிப்பீடு

தீ விபத்து ஏற்படும் நிகழ்வில், துணை ஆவணங்களுடன் உள்ள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் காவல்துறை அறிக்கை/தீயணைப்புப் படை அறிக்கை, விசாரணை செய்தவரின் அறிக்கையும் பெறப்படும். தனிநபர் விபத்து ஈடுக்கோரல்களுக்கு, வழக்கிற்கு ஏற்ப, விபத்துக்கான காரணம் அல்லது நோயின் இயல்பு, மற்றும் இயலாமையின் கால அளவையும் குறிப்பிடும் அறிக்கையை சிகிச்சையளிக்கும் மருத்துவரிடமிருந்து பெற்று காப்பீடு பெற்றவர் சமர்ப்பிக்க வேண்டும்

பாலிசி நிபந்தனைகளின் கீழ், ஒரு சுயாதீனமான மருத்துவப் பரிசோதனையை செய்வதற்கு காப்பீடு அளிப்பவர்களுக்கு உரிமை உள்ளது. “தொழிலாளர்களின் இழப்பீடு” ஈடுக்கோரல்களுக்கு ஆதரவாக மருத்துவச் சான்றும் தேவைப்படுகின்றது. கால்நடைகள் மற்றும் ஆடுமாடுகளுக்கான ஈடுக்கோரல்கள் ஒரு கால்நடை மருத்துவரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

**தகவல்**

இழப்பு அல்லது சேதம் குறித்த அறிக்கையைப் பெற்றவுடன், காப்பீடு அளிப்பவர்கள் பின்வருவதை பரிசோதிப்பார்கள்:

1. இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்த தேதியன்று காப்பீட்டு பாலிசி நடைமுறையில் இருந்ததா
2. காப்பீடு பெற்ற இன்னலுக்கு உட்பட்டதன் காரணமாகதான் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டுள்ளதா
3. பாலிசியின் கீழ் காப்பீடு செய்த அதே சொத்து தான் (காப்பீட்டுப் பொருள்) இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளதா.

4. இழப்பு அறிவிப்பு தாமதமின்றி உடனடியாக பெறப்பட்டுள்ளதா.

இறப்பு மற்றும் தனிப்பட்ட காயங்களை உள்ளடக்கிய வாகனக் காப்பீட்டுக்கான மூன்றாம் தரப்பு ஈடுக் கோரல்கள் மருத்துவரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த ஈடுக்கோரல்களை வாகன விபத்து ஈடுக்கோரல் தீர்ப்பாயம் (Motor Accident Claims Tribunal) கையாளுகின்றது, மேலும் செலுத்த வேண்டிய தொகையானது ஈடை கோருபவரின் வயது மற்றும் வருமானம் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

மூன்றாம் தரப்பினரின் சொத்து சேதத்தை உள்ளடக்கிய ஈடுக்கோரல்கள் ஒரு ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

- ✓ சொந்த வாகனத்துக்கு ஏற்படும் சேதத்திற்கான ஈடுக்கோரல் ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.
- ✓ மூன்றாம் தரப்பு சேதமும் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள காவல்துறையின் அறிக்கை தேவைப்படும்.

**தகவல்**

விசாரணை என்பது இழப்பு மதிப்பீட்டிலிருந்து வேறுபட்டதாகும். சட்டரீதியான ஈடுக்கோரல் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கும், காப்பீடுப் பற்று இல்லாமை, பொருள் குறித்த உண்மைகளை மறுத்தல் அல்லது திரித்துக் கூறுதல், வேண்டுமென்றே இழப்பு ஏற்படுத்துதல் போன்ற முக்கியமான விவரங்களும் சந்தேகங்களும் இல்லாதிருப்பதை சரிபார்க்கவும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

காப்பீட்டு ஆய்வாளர்கள் விசாரணைப் பணியையும் மேற்கொள்கின்றனர். ஒரு ஆய்வாளர் முடிந்தவரை விரைவாக வேலையைத் தொடங்கினால் உதவும். எனவே, ஈடுக்கோரல் அறிக்கை பெறப்பட்டவுடன் முடிந்தவரை விரைவில் ஆய்வாளரை நியமிப்பது என்பது நடைமுறையில் உள்ளது.

## B. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் பங்கு

### a) ஆய்வாளர்கள்

ஆய்வாளர்கள் ஐஆர்டிஏ-வால் உரிமமளிக்கப்பட்ட நிபுணர்கள் ஆவர். குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் இழப்புகளை ஆய்வு செய்வதிலும் மதிப்பிடுவதிலும் அவர்கள் வல்லுநர்களாக இருக்கின்றனர். பொதுவாக, ஆய்வாளர்களை நியமிப்பதற்காக காப்பீட்டு நிறுவனம் அவருக்குரிய கட்டணத்தைச் செலுத்துகின்றது. ஈடுக்கோரலின்போது பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் ஆய்வாளர்களையும் இழப்பு மதிப்பீட்டாளர்களையும் பணியமர்த்துகின்றன. அவர்கள் ஈடுபட்டுள்ள சொத்துக்களை ஆய்வு செய்கிறார்கள், இழப்புக்கான காரணம் மற்றும் சூழ்நிலைகளை ஆய்வு செய்து சரிபார்க்கிறார்கள். மேலும், அவர்கள் இழப்புத் தொகையைக் கணக்கிட்டு, அறிக்கைகளை காப்பீட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கிறார்கள்.

மேலும், மேற்கொண்டு இழப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் காப்பீடு பெறுபவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். காப்பீட்டுச் சட்டம், 1938 இன் பிரிவுகள், காப்பீட்டு விதிகள் 1939 மற்றும் ஐஆர்டிஏஜ-ஆல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பிட்ட விதிமுறைகள் மூலம் ஆய்வாளர்கள் நிர்வகிக்கப்படுகின்றனர்.

'பயண பாலிசி' அல்லது ஏற்றுமதிகளுக்கான 'கப்பல்சார் திறந்த காப்பீடு' ஆகியவற்றில் நாட்டுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஈடுக்கோரல்கள் இந்தப் பாலிசியில் பெயரிடப்பட்ட வெளிநாட்டில் உள்ள ஈடுக்கோரல் தீர்வு முகவர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த முகவர்கள் இழப்பை மதிப்பீடு செய்து பணம் வழங்குகிறார்கள், இந்த தொகையை காப்பீட்டு நிறுவனம் தீர்வு கட்டணத்துடன் சேர்த்து அவர்களுக்கு திருப்பி வழங்குகிறது. மாற்றாக, அனைத்து ஈடுக்கோரல் ஆவணங்களும் காப்பீட்டு ஈடுக்கோரல் தீர்வு முகவர்களால் பெறப்பட்டு, அவர்களுடைய மதிப்பீடுகளுடன் சேர்த்து காப்பீட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**முக்கியமானவை**

**காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 64 UM**

சொந்த வாகனத்தின் சேதத்திற்கான இழப்பீடு ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேலே மற்றும் பிற சொத்து சேதத்திற்கான இழப்பீடு ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கும்போது, காப்பீட்டாளர்கள் அத்தகைய ஈடுக்கோரல்களை மதிப்பிடுவதற்கு ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும். மற்ற ஈடுக்கோரல்களுக்கு, காப்பீட்டாளர்கள் மதிப்பீட்டிற்காக மற்ற நபர்களை (தற்போதைக்கு ஆய்வாளர் அல்லது இழப்பு மதிப்பீட்டாளராக பணியமர்த்துவதற்கு தகுதியை இழக்காதவர்) பணியமர்த்தலாம்.

## 5. ஈடுக்கோரல் படிவங்கள்

ஒவ்வொரு காப்பீட்டு வகைக்கும் ஈடுக்கோரல் படிவத்தின் உள்ளடக்கங்கள் மாறுபடுகின்றன. பொதுவாக, இழப்பு தேதி, நேரம், இழப்புக்கான காரணம், இழப்பின் அளவு போன்ற இழப்புச் சூழ்நிலைகள் தொடர்பான முழுத் தகவல்களையும் பெறும் வகையில் ஈடுக்கோரல் படிவம் வடிவமைக்கப்படுகின்றது. இதர கேள்விகள் ஒவ்வொரு வகை காப்பீட்டு வர்க்கத்திற்கும் வேறுபடுகின்றன.

**எடுத்துக்காட்டு**

ஒரு தீ விபத்து ஈடுக்கோரல் படிவத்தில் கேட்கப்படும் தகவல்களுக்கான ஒரு எடுத்துக்காட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

i. காப்பீடு பெற்றவரின் பெயர், பாலிசி எண் மற்றும் முகவரி

ii. தீ விபத்து ஏற்பட்ட தேதி, நேரம், காரணம் மற்றும் சூழ்நிலைகள்

iii. சேதமடைந்த சொத்து குறித்த விவரங்கள்

iv. பல்வேறு உருப்படிகளின் கீழ் காப்பீடில் ஈடு கோரப்படும் போது தீ விபத்து நிகழ்ந்த சமயத்தில் சொத்தின் உண்மையான மதிப்பு கருதப் படுகிறது. [ஈடுக்கோரலானது, தேய்மானம், தேய்வு நெய்வு ஆகியவற்றைக் கழித்த பிறகு சம்பவம் நடந்த இடம் மற்றும் நேரத்தில் சொத்தின் உண்மையான மதிப்பின் அடிப்படையில் அமைந்திருக்கும் (பாலிசியில் கட்டிடம், தொழிற்சாலை மற்றும் இயந்திரத்திற்கான பாலிசி “மறுநிறுவல் மதிப்பு” அடிப்படையில் இருந்தாலே தவிர) அது இலாபத்துடன் சேர்ந்து இருக்கக்கூடாது]

v. அழிவு மீட்புத்தொகையை கழித்தப்பிறகு ஈடுக்கோரப்பட்ட தொகை

vi. தீ விபத்து நிகழ்ந்த வளாகத்தின் நிலை மற்றும் குடியிருப்பு நிலை.

vii. எந்த திறனில் காப்பீடு பெற்றவர் ஈடுக்கோரலை கேட்கிறார், அவர் உரிமையாளரா, அடமானம் வைத்திருப்பவரா அல்லது அது மாதிரி வேறு ஏதாவது

viii. சேதமடைந்த சொத்தில் வேறு யாருக்காவது பங்கு உள்ளதா என்பது

ix. அந்த சொத்தின் மீது வேறு ஏதாவது காப்பீடு நடைமுறையில் உள்ளதா, அப்படி இருந்தால், அது குறித்த விவரங்கள்

---

இதைத் தொடர்ந்து படிவத்தில் உள்ள அறிக்கையின் உண்மை மற்றும் துல்லியத்தன்மை குறித்த பிரகடனமும், அதில் காப்பீடு பெற்றவரின் கையொப்பம் மற்றும் தேதியும் இடம் பெற்றிருக்கும்.

காப்பீட்டு நிறுவனம் ஈடுக்கோரல் படிவத்தை வழங்கிவிட்டால் மட்டுமே, அவர்கள் ஈடுக்கோரலுக்கான பொறுப்பை ஏற்பதாக அர்த்தமில்லை. ஈடுக்கோரல் படிவங்கள் 'பாரபட்சமின்றி' என்ற குறிப்புடன் வழங்கப்படுகின்றன.

**ஆதரவு ஆவணங்கள்**

ஈடுக்கோரல் படிவத்துடன் சேர்த்து, ஈடுக்கோரலை ஆதரிக்கும் குறிப்பிட்ட ஆவணங்களை ஈடுக் கோருபவரோ அல்லது காப்பீட்டு நிறுவனத்தால் காப்பளிக்கப்பட்டவரோ சமர்ப்பிக்க வேண்டும்.

i. தீ விபத்து ஈடுக்கோரல்களுக்கு, தீயணைப்புத் துறையினரிடமிருந்து ஒரு அறிக்கை தேவைப்படும்.

ii. புயல் சேதத்திற்கு, வானிலை ஆய்வு மையத்திடம் இருந்து அறிக்கை கோரலாம்

iii. கொள்ளை ஈடுக்கோரல்களில், காவல்துறையினரிடம் இருந்து பெறப்படும் அறிக்கை தேவையுள்ளதாக இருக்கலாம்.

iv. மரணம் விளைவித்த விபத்துக்கான ஈடுக்கோரல்களுக்கு, பிரேத பரிசோதனை செய்பவர் மற்றும் காவல்துறை ஆகியோரிடமிருந்து அறிக்கைகள் தேவைப்படும்.

v. வாகன ஈடுக்கோரல்களுக்கு, ஓட்டுநர் உரிமம், பதிவுப் புத்தகம், காவல்துறை அறிக்கை போன்றவற்றை காப்பீடு அளிப்பவர் பரிசோதிக்க விரும்புவார்.

vi. கப்பல் சரக்கு ஈடுக்கோரல்களில், இழப்பின் வகைக்கேற்ப ஆவணங்களின் இயல்பு மாறுபடுகின்றது, அதாவது, மொத்த இழப்பு, குறிப்பிட்ட சராசரி, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு போக்குவரத்து ஈடுக்கோரல்கள் போன்றவை.

**சுய-பரீட்சை** 1

பின்வருவனவற்றில் எந்த நடவடிக்கைகள் ஈடுக்கோரல்களின் நிபுணத்துவமான தீர்வுகளின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை?

I. இழப்பின் காரணத்துடன் தொடர்புடைய தகவல்களைக் கேட்டல்
II. ஈடுக்கோரலை பாரபட்சமாக அணுகுதல்
III. காப்பளிக்கப்பட்ட இன்னலினால் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்
IV. ஈடுக்கோரலின் கீழ் செலுத்த வேண்டிய தொகையின் அளவை உறுதி செய்தல்

---

**சுய-பரீட்சை** 2

ராஜ் ஒரு கார் விபத்துக்கு உள்ளானார். அவருடைய கார் வாகன காப்பீட்டு பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் ராஜ் செய்யக்கூடிய மிகப் பொருத்தமான செயல் எது?

I. நியாயமாக முடிந்தவரை விரைவில் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.
II. காப்பீடு புதுப்பிக்கும் சமயத்தில் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும்
III. பெரிய அளவிலான இழப்பீட்டைப் பெறும் வகையில் காரை மேலும் சேதப்படுத்த வேண்டும்
IV. சேதத்தைப் புறக்கணிக்க வேண்டும்

---

**சுய-பரீட்சை** 3

ஈடுக்கோரல் விசாரணை மற்றும் ஈடுக்கோரல் மதிப்பீட்டு பற்றி பினவருவதில் எந்த கூறுகள் உண்மையானவை.

I. ஈடுக்கோரல்கள் விசாரணை மற்றும் ஈடுக்கோரல்கள் மதிப்பீடு இரண்டுமே ஒன்றுதான்
II. விசாரணை என்பது ஈடுக்கோரலின் உண்மைத்தன்மையை தீர்மானிப்பதாகும், அதேசமயம் காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தால் இழப்பு ஏற்பட்டதா மற்றும் உத்தரவாதத்தை மீறுகிறதா என்பதை மதிப்பீடு மூலம் கண்டுபிடிக்கலாம்.
III. மதிப்பீடு ஈடுக்கோரலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முயற்சிக்கின்றது, அதேசமயம் விசாரணை என்பது இழப்பின் காரணம் மற்றும் அளவில் அதிக கவனம் செலுத்துகின்றது
IV. ஈடுக்கோரல் தொகை வழங்கப்படுவதற்கு முன்பு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது, மற்றும் ஈடுக்கோரல் தொகை வழங்கப்பட்ட பின்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

**சுய-பரீட்சை** 4

ஆய்வாளர்களுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் எது?

I. இந்திய ஆய்வாளர் சங்கம்
II. ஆய்வாளர் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
III. காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏ)
IV. இந்திய அரசு

**சுய-பரீட்சை** 5

ஒரு புயல் சேதார ஈடுக்கோரலை ஆய்வு செய்யும்போது பின்வரும் ஆவணங்களில் எதைக் கேட்பதற்கான அதிக சாத்தியமுள்ளது?

I. பிரேத பரிசோதனை செய்பவரின் அறிக்கை
II. தீயணைப்புத் துறையினரிடமிருந்து அறிக்கை
III. காவல்துறை அறிக்கை
IV. வானிலை ஆராய்ச்சித் துறையிடமிருந்து அறிக்கை

**சுய-பரீட்சை** 6

ஒரு பாலிசியின் கீழ் வழங்கப்பட்ட இழப்பினை மூன்றாம் தரப்பினரிடமிருந்து மீட்பதற்காக காப்பீட்டாளர் எந்தக் கோட்பாட்டின் கீழ் காப்பீடு பெறுபவரின் உரிமைகளை எடுத்துக்கொள்ள முடியும்?

I. பங்களிப்பு
II. விடுவித்தல்
III. கடன்பற்றுரிமை
IV. இழப்பீடு

**சுய-பரீட்சை** 7

ஒரு குறிப்பிட்ட இழப்பு, பாலிசியின் கீழ் காப்பளிக்கப் படாததால் அதற்குரிய இழப்பீடை வழங்க முடியாது என காப்பீட்டாளர் முடிவெடுத்தால், அத்தகைய விஷயங்கள் குறித்து முடிவெடுப்பது யார்?

I. காப்பீட்டாளரின் முடிவு இறுதியானது
II. நடுவர்
III. மத்தியஸ்தர்
IV. சட்ட நீதிமன்றம்

**சுருக்கம்**

a) நிபுணத்துவமான முறையில் ஈடுக்கோரல் கணக்குகளைத் தீர்ப்பது என்பது காப்பீட்டு நிறுவனத்தின் மிகப்பெரிய விளம்பரமாக கருதப்படுகின்றது.
b) இழப்பு குறித்து காப்பீட்டாளருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என பாலிசி நிபந்தனைகள் குறிப்பிடுகின்றன.
c) ஈடுக்கோரல் தொகை சிறியதாக இருந்தால், இழப்பின் காரணம் மற்றும் அளவு குறித்து தீர்மானிப்பது ஆய்வு காப்பீட்டு நிறுவன அதிகாரியால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இதர ஈடுக்கோரல்களுக்கு, அது இழப்பு மதிப்பீட்டில் வல்லுநர்களாக உள்ள சுயாதீனமான உரிமம் பெற்ற தொழில்முறை ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
d) பொதுவாக, இழப்பு தேதி, நேரம், இழப்புக்கான காரணம், இழப்பின் அளவு போன்ற இழப்புச் சூழ்நிலைகள் தொடர்பான முழுத்

தகவல்களையும் பெறும் வகையில் ஈடுக்கோரல் படிவம் வடிவமைக்கப்படுகின்றது.

e) ஈடுக்கோரல் மதிப்பீடு என்பது காப்பீடு பெற்றவருக்கு நேரிட்ட இழப்பு காப்பீட்டுக்கு உட்பட்ட அபாயத்தினால் ஏற்பட்டுள்ளதா என்பதையும், மேலும் உத்தரவாத மீறல் எதுவும் ஏற்படவில்லை என்பதையும் தீர்மானிக்கும் செயல்முறை ஆகும். காப்பீடு பெறுபவருக்கு ஏற்பட்ட இழப்பின் அளவு மற்றும் பாலிசியின் கீழ் காப்பீட்டாளரின் பொறுப்பு ஆகியவை மதிப்பிடப்படுகின்றன. ஈடுக்கோரலை செலுத்துவதற்கு முன் இது செய்யப்படுகிறது.

f) பாலிசியின் கீழ் விடுவிப்பு பெறப்பட்ட பிறகு மட்டுமே ஈடுக்கோரல் தீர்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## முக்கியமான வார்த்தைகள்

a) இழப்பு அறிவிப்பு
b) விசாரணை மற்றும் மதிப்பீடு
c) ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள்
d) ஈடுக்கோரல் படிவங்கள்
e) சரிக்கட்டுதல் மற்றும் தீர்வு

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.
**பதில் 2** - சரியான பதில் விருப்பம் I.
**பதில் 3** - சரியான பதில் விருப்பம் II.
**பதில் 4** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 5** - சரியான பதில் விருப்பம் IV.
**பதில் 6** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 7** - சரியான பதில் விருப்பம் IV.

# பிரிவு
# பின்னிணைப்புகள்

# அத்தியாயம் A-01
# பின்னிணைப்புகள்

பொதுக் காப்பீட்டின் முன்மொழிவு படிவங்களைப் பற்றி மாணவர்களுக்கு சிறந்த முறையில் விளக்க இந்த பின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு-ஏ

**வாகன காப்பீடு முன்மொழிவு படிவம்**

**தனிப்பட்ட கார் / இரு-சக்கர - பேக்கேஜ் பாலிசி**

<table>
<tr><td>முன்மொழிபவர் பெயர்</td><td colspan="3"></td></tr>
<tr><td>அஞ்சல் முகவரி</td><td colspan="3">காப்பீடு செய்தவரின் அடையாளம்</td></tr>
<tr><td>தொலைபேசி மற்றும் தொலைநகல் எண்</td><td></td><td colspan="2">மொபைல் எண்:</td></tr>
<tr><td>மின்னஞ்சல் முகவரி</td><td colspan="3"></td></tr>
<tr><td>வங்கி கணக்கெண் (சேமிப்பு/நடப்பு)</td><td></td><td colspan="2">நிரந்தர கணக்கெண் (PAN):</td></tr>
<tr><td>HPA/அடைமானம்</td><td colspan="3"></td></tr>
<tr><td>தேவைப்படும் பாலிசி வகை</td><td colspan="2">பேக்கேஜ் பாலிசி</td><td></td></tr>
<tr><td>காப்பீட்டு காலம்</td><td colspan="2">துவக்க நேரம்... தேதி :</td><td>வரை</td></tr>
</table>

<table>
<tr><td colspan="8"><u>வாகனத்தின் விவரம்</u></td></tr>
<tr><td>பதிவு எண்:</td><td>எஞ்சின் எண்/ சேசிஸ் எண்</td><td>தயாரித்த வருடம்</td><td>உற்பத்தியாளர்/ மாடல் / பாடி வகை</td><td>கன திறன் (சிசி)</td><td>அமரும் வசதி</td><td>நிறம்</td><td>எரிபொருள் வகை</td></tr>
<tr><td colspan="8">காப்பீடு செய்யப்படும் வாகனத்தின் சரியான அடையாளம்</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்யும் அதிகாரம் - பெயர் மற்றும் இடம்: | | | | | | |
| வாகனத்தின் மதிப்பு: | | | | | | |
| விவரப்பட்டி மதிப்பு | மின்சார / துணைக்கருவிகள் | மின்சாரமில்லாத துணைக்கருவிகள் | பக்க வாகனம் /டிரெயலர் | எல்பிஜி / சிஎன்ஜி கிட் | மொத்த மதிப்பு | ஐடிவி IDV |
| | | | | | | |

ஈடுக்கோரல் வழங்க மற்றும் ப்ரீமியத்திற்கு இது அடிப்படை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாகனத்தின் வரலாறு | | | | | | |
| முந்தைய பாலிசி எண் | காப்பீடு வகை | காப்பீட்டாளர் பெயர் மற்றும் முகவரி | ஈடுக் கோராத போனசுக்கான தகுதி | பாலிசி காலாவதி தேதி | கடந்த 3 ஆண்டுகளின் ஈடு அனுபவம் | முதலில் வாங்கிய மற்றும் பதிவு தேதி |
| | | | | | | |

ஏற்பளிப்பு காரணிகள்-மதிப்பீடை பாதிக்கும் விதம்

| வாகன பயன்பாடு: | | | |
|---|---|---|---|
| பயன்பாடு நோக்கம் | வாகன பார்க்கிங் விவரம் | டிரைவரின் விவரம் | ஆண்டில் ஓடிய சராசரி கி.மீ. |
| மகிழ்ச்சிக்காக | மூடப்பட்ட கேரேஜ் | சுயமாக | |
| தொழில்ரீதியாக | மூடப்படாத கேரேஜ் | சம்பளம் பெறும் டிரைவர் | |
| வர்த்தகம்/வணிகம் | வீட்டு வளாகத்திற்குள் | உறவினர்கள் | |
| கார்ப்பரேட் | தெருவில் | நண்பர்கள் | |

ஏற்று அபாயத்தை காப்பீட்டாளர் புரிந்துகொள்ள உதவுகிறது

அபாய தடுப்பு / எதிர்மறையான அபாயம்

| தள்ளுபடிகள் மற்றும் ஏற்றுதல்: | |
|---|---|
| தன்னிச்சையான மிகை : நீங்கள் கட்டாய பாலிசி மிகைக்கு மேலே தன்னிச்சையான மிகையை தேர்வு செய்ய விரும்புகிறீர்களா | ஆம் /இல்லை- ஆம் என்றால் தொகை குறிப்பிடவும் இரு-சக்கர வாகனம்- ரூ. 500/700/1000/1500/3000 |
| நீங்கள் இந்திய ஆட்டோமொபைல் அசோசியேஷனின் உறுப்பினரா | ஆம் / இல்லை - ஆம் என்றால் குறிப்பிடவும்<br>1. அசோஷியன் பெயர்:<br>2 .உறுப்பினர் எண்: 3. காலாவதி தேதி: |
| வாகனத்தில் ஏஆர்ஏஐ (ARAI) மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட திருட்டு எதிர்ப்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் ஏஏஎஸ்ஐ (AASI) வழங்கின நிறுவல் சான்றிதழை இணைக்கவும் |
| வாகனம் மரபுசாரா ஆற்றல் மூலம் இயக்கப்படுகிறதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் விவரங்களை குறிப்பிடவும் |
| வாகனம் பை-ஃப்யூயல் கிட்டுடன் இயங்குகிறதா/ ஃபைபர் கிளாஸ் டேங்க் உள்ளதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் விவரங்களை குறிப்பிடவும் |
| நீங்கள் TPPD பாதுகாப்பை சட்டவரம்பு ரூ. 6000/-வரை மட்டுமே கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள் | ஆம் / இல்லை |
| தேவையான கூடுதல் காப்புகள் | |
| துணைக்கருவிகள் திருட்டு (இரு-சக்கர வாகனங்கள் மட்டுமே ) | |
| டிரைவருக்கான சட்ட கடப்பாடு | |

ஏற்பளிப்பிற்கு ஏற்றுதல் மற்றும் தள்ளுபடி காரணிகள் நிறுவனத்தின் கொள்கை படி கருதப்படும்

ப்படும் வாகனத்

| சம்பளம் பெறும் டிரைவரின் தனிநபர் விபத்து காப்பு | |
|---|---|
| கட்டாயமானது: உரிமையாளர் டிரைவருக்கு தனிநபர் விபத்து காப்பு | |

உரிமையாளர் டிரைவருக்கு தனிநபர் விபத்து (PA) காப்பு கட்டாயமானது. நியமிக்கப்பட்டவர் விவரங்களை தரவும் :
(அ) நியமிக்கப்பட்டவர் பெயர் மற்றும் வயது
(ஆ)உறவு
(இ)பணியமர்த்தப்பட்டவரின் பெயர்
(நியமிக்கப்பட்டவர் சிறயவராக இருந்தால்)
(ஈ) நியமிக்கப்பட்டவருடன் அவருக்குள்ள உறவு

**கூடுதல் பிரீமியம் கட்டினால் கூடுதல் காப்பு கிடைக்கும்**

1. **கட்டாய தனிநபர் விபத்து காப்பை (PA) ரூ 15 லட்சம்**
2. நிறுவனம் அல்லது கூட்டு நிறுவனம் அல்லது அதே போன்ற கூட்டாண்மை நிறுவனத்திற்கு வாகனம் சொந்தமானதாக இருந்தால், அல்லது உரிமையாளர் டிரைவருக்கு செயலில் உள்ள ஓட்டுனர் உரிமம் இல்லாவிட்டால் அவருக்கு கட்டாய தனிநபர் விபத்து காப்பை (PA) வழங்க முடியாது.

பெயரிடப்பட்ட நபர்களுக்கு தனிநபர் விபத்து காப்பு (PA)

| பெயரிடப்பட்ட பயணிகளுக்கு தனிநபர் விபத்து (PA) காப்பு | IMT-15 | தனிநபர் விபத்து காப்பை பெயரிடப்பட்ட நபர்களுக்கு சேர்க்க விரும்புகிறீர்களா? | | | |
|---|---|---|---|---|---|
| | | பெயர் | தேர்ந்தெடுத்த CSI- ரூ. | நியமிக்கப்பட்டவர் | உறவு |
| | | 1) | | | |
| | | 2) | | | |
| | | 3) | | | |
| | | ஆம்/இல்லை, ஆம் என்றால் பெயர் மற்றும் தேர்வு செய்த மூலதன காப்பீட்டுத் தொகையை (capital sum insured (CSI) குறிப்பிடவும்: (குறிப்பு: ஒரு நபருக்கு கிடைக்கும் அதிகபட்ச CSI) தனியார் கார்களுக்கு ரூ 2 லட்சம் மற்றும் மோட்டார் பொருத்திய இரு சக்கர வாகனங்களுக்கு ரூ 1 லட்சம்). | | | |

| | | |
|---|---|---|
| பெயரிடப்படாத நபர்கள் / பின்னிருக்கை பயணி / பெயரிடப்படாத பயணிகளுக்கு தனிநபர் விபத்து (PA) பாதுகாப்பு | | |
| கூடுதல் காப்பு | | |
| தேய்மானம் எதுவுமில்லை | | |
| உபய கார் | | |
| மருத்துவ செலவுகள் | | |
| தனிப்பட்ட விளைவுகள் | | |
| மற்ற விவரங்கள் | | |

**மதிப்பீடை பாதிக்கக்கூடிய மற்றும் புள்ளி விவர நோக்கத்திற்காகவும் தகவல்**

| தொடர்கின்ற கூடுதல் காப்புகள் | |
|---|---|
| வாகனம் சொந்த வளாகத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறதா | ஆம்/இல்லை |
| வாகனம் வெளிநாட்டு தூதரகத்திற்கு சொந்தமானதா | ஆம்/இல்லை |
| கார் பழம்பாணி (Vintage) கார் என சான்றிதழளிக்கப்பட்டுள்ளதா | ஆம்/இல்லை |
| வாகன பார்வையற்ற / இயலாமையுள்ள நபர்களின் பயன்பாடிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளசா | ஆம்/இல்லை, ஆம் என்றால், ஆர்.டி.ஏ (RTA) மூலம் பெற்ற அங்கீகார விவரங்களை குறிப்பிடவும் |
| புவியியல் பகுதி நீட்டிப்பு தேவைப்படுகிறதா | நேபால், வங்காளதேசம், பூட்டான், மாலைதீவு, பாகிஸ்தான், இலங்கை |

நீங்கள் ஒரு பக்க பாலிசியை பெற விரும்புகிறீர்களா? ஆம் / இல்லை

**உன்னத நன்னம்பிக்கையின்**

**காப்பீடு செய்பவரின் பிரகடனம்**

நான்/நாங்கள் இந்த முன்மொழிவு படிவத்தில் கூறிய அறிக்கைகள் எனக்கு/எங்களுக்கு அறிவு மற்றும் நம்பிக்கைக்கு சிறந்தமுறையில் எட்டியவரைக்கும் 'இந்த பிரகடனைகள் எனக்கும்/எங்களுக்கும் மற்றும் ______________________மத்தியிலான ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருக்கும் என்பதை நான் / நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

இந்த முன்மொழிவு படிவத்தை சமர்ப்பித்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்கள் அல்லது செய்த மாற்றங்களை பற்றி உடனடியாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு உறுதியாக தெரிவிப்போம் என்று அறிவிக்கிறோம்.

நான் / நாங்கள் கடந்த பாலிசி காலாவதியான தேதி முதல் இப்போது வரை என்/எங்கள் வாகனம் எந்த விபத்திற்கும் உள்ளாகவில்லை என்று உறுதி செய்ய விரும்புகிறோம்.. மேலுள்ள வாகனத்தின் காப்பீடிற்கு என்/எங்கள் பிரீமியத்தை ...................... இடத்தில் .............. அன்று உங்களிடம் நான்/நாங்கள் செலுத்திவிட்டதை உறுதி செய்கிறோம்.

இந்த .............. (நேரத்திற்கு) முன் எந்த விபத்து மூலமும் ஏற்பட்ட இழப்பு/சேதம்/கடப்பாடுக்கு நீங்கள் பொறுப்பு இல்லை என்பது புரிந்துக்கொள்ளப்பட்டு மற்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

நான்/ நாங்கள் வாகனம் சரியான மற்றும் சாலையில் ஒட்ட தகுதியான நிலையில் இருப்பதாக அறிவிக்கிறோம்.

**இடம்:**

**தேதி :** **முன்மொழிபவரின் கையொப்பம்**

## பாரத் க்ரிஹ ரக்ஷா, பாரத சூக்ஷ்மா மற்றும் பாரத லகு உத்யம் ஆகியவற்றின் முன்மொழிவு வடிவங்கள் (Bharat Griha Raksha, Bharat Sookshma & Bharat Laghu Udyam)

தரநிலை தயாரிப்புகள் மற்றும் அவற்றுக்கான முன்மொழிவு படிவங்கள், அதாவது பாரத் க்ரிஹ ரக்ஷா, பாரத் சூக்ஷ்மா மற்றும் பாரத் லகு உத்யம் பற்றிய சிறந்த புரிதலுக்கு, ஐஆர்டிஏஐ இணையதளத்தில் பின்வரும் இணைப்பை பார்க்கவும்.

https://www.irdai.gov.in/ADMINCMS/cms/Uploadedfiles/StandardProducts/Annexure-I-BharatGrihaRaksha.pdf